பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 35 கதிர் 185 வைகாசி 18ஆம் நாள் சனிக்கிழமை 01 ஜுன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Dual MBA in
Marketing | Administration | HR
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## சிவாஜியின் வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 1

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளன்று கேக் வெட்டிய குற்றச்சாட்டில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சிவாஜிலிங்கத்துக்கு எதி 18

# அரச தலைவர் தேர்தல் டிசெம்பர் 7 ஆம் திகதி

### புதுடில்லியில் வைத்து மைத்திரிபால அறிவிப்பு

### மீண்டும் களமிறங்குவது பற்றி தீர்மானிக்கவில்லையாம்

டில்லி, ஜுன் 1

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி இலங்கையில் அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்திய தலைநகர் புதுடில்லியில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் பதவியேற்புக்குச் சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, புதுடில்லியில் செய்தியாளர்களை நேற்றுச் சந்தித்தார். இதன் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது, 18

## 9இல் மோடி இலங்கை வருகை

டில்லி, ஜுன் 1

இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி எதிர்வரும் 9ஆம் திகதி இலங்கைக்கு குறுகிய பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன புதுடில் 18

# ரிசாத், ஹிஸ்புல்லா, அசாத் சாலி

# மூவரும் பதவி விலகல்!!!

## கொழும்பு அரசியலில் பரபரப்பு



கொழும்பு, ஜுன் 1

அமைச்சர் ரிசாத் பதியுதீன், கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா, மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி மூவரும் தமது பதவிகளிலிருந்து விலகவுள்ளனர். தமது பதவி விலகல் கடிதங்களை இன்றைய தினம் மூவரும் ஒப்படைப்பார்கள் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. 18

## ரிசாத்தை பதவிவிலக கோரினார் ரணில்


கொழும்பு, ஜுன் 1

அமைச்சர் ரிசாத் பதியுதினை தற்காலிகமாக அமைச்சுப் பதவியைத் துறக்குமாறு தலைமை அமைச்சர் 18

*முஸ்லிம் அரசியல்வாதிகள் மூவரின்*

## பதவியை பறிக்க வலியுறுத்தி உணவு ஒறுப்புப் போராட்டம்

### தலதாமாளிகை முன்னால் நேற்று குதித்தார் அத்துரலிய ரத்னதேரர்



கொழும்பு, ஜுன் 1

அமைச்சர் ரிசாத் பதியுதீன், கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா மற்றும் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோரின் பதவிகள் பிடுங்கப்படவேண்டும். அவர்கள் பதவி நீக்கப்படும் வரை உயிர் போனாலும் உணவு ஒறுப்புப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை 18

## அரச அலுவலகங்களிலும் இனி இறுக்கமான ஆடைக்கட்டுப்பாடு

*பெண்கள் சேலை மாத்திரமே உடுத்தலாம்!*

கொழும்பு, ஜுன் 1

அரச அலுவலகங்களில் பணியாற்றும் பெண்கள் சேலை அல்லது கண்டிய முறையிலான சேலை அணிந்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ள பொதுநிர்வாக அமைச்சு, அதற்கு மேலதிகமாகவே சமயம் சார்ந்த ஆடைகளை அணிய முடியும் என்று 18

பொலிஸின்

## தகவல் வலையமைப்பு மீது வைரஸ் தாக்குதல்

கொழும்பு, ஜுன் 1

பொலிஸ் நிலையங்களுக்கு இடையில் இலத்திரனியல் தகவல் பரிமாற்றங்களுக்கு பயன்படுத்தப்படும் மெய் 18

*ஈழத் தமிழர் விவகாரங்களில் தொடர்புபட்ட*

## ஜெய்சங்கர் அயலுறவுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்

கொழும்பு, ஜுன் 1

இந்திய அயலுறவுத்துறை அமைச்சராக, முன்னாள் அயலுறவுத்துறைச் செயலர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்றுமுன்தினம் மாலை புதுடில்லியில் நடந்த நிகழ்வில் பதவியேற் 18

## மடிக் கணினி, ரூ.50 லட்சம், நகைகள் மீட்கப்பட்டன

*ஸஹ்ரானினது என்கின்றனர் பொலிஸார்*

அம்பாறை, ஜுன் 1

ஸஹ்ரான் பயன்படுத்தியதாகக் கருதப்படும் மடிக் கணினி, 35 இலட்சம் ரூபா பணம், தங்க நகைகள் என்பவற்றை அக் 18



## அம்பாந்தோட்டையில் புத்தர் சிலைகள் உடைப்பு

கொழும்பு, ஜுன் 1

அம்பாந்தோட்டையில் இரு புத்தர் சிலைகள் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 18

வடக்கில் இப்போது

## முதலமைச்சரும் நானே! அமைச்சர்களும் நானே!!

### ஆளுநர் ராகவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 1

வடக்கு மாகாணத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை இல்லை. அதனால் சகல அமைச்சுக்களுக்கும் அமைச்சர் நான்தான். 05

பிரபாகரன் காலத்தில்

## பம்மிய மகிந்தவின் பட்டாளம் இப்போது துள்ளிக்குதிக்கிறது

மங்கள சாட்டை

கொழும்பு, ஜுன் 1

பிரபாகரன் உயிருடன் இருந்த போது, புலிகளுக்கு எதிராக மகிந்த ராஜபக்ச ஒரு வார்த்தையேனும் பேசியது கிடையாது. ஆனால், இன்று அவரும் அவரின் கையாள்களும் தாங்கள் தான் வீரர்களென மார் 05

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS

1. **The Chairman, University Procurement Committee**, on behalf of the University of Jaffna now invites sealed bids from eligible bidders for **"Supply of skilled and unskilled workers for daily works of University of Jaffna"**.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered as manpower supply agency/Community based organization/ ICTAD registered (any grade) Civil work contractors.
4. Interested bidders may obtain further information from the **Deputy Registrar, General Administration, University of Jaffna, Jaffna** and inspect the bidding Document at the same address on any working day from **9.00 hrs. to 16.00 hrs.**
5. A Complete set of Bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, (General Administration) University of Jaffna (T.P: 0212226517)**, from **03rd June 2019 until 14th June, 2019 from 9.00 hrs. to 15.00 hrs.**, upon payment of a non-refundable fee of Rupees one thousand (Rs 1000/-) at the Shroff counter of the University of Jaffna.
6. Bids shall be delivered or sent by registered post to the **Registrar, University of Jaffna, P. O. Box 57, Thirunelvely, Jaffna** to reach on or before **10.00 hrs**, on **18th June 2019.** Bids will be opened soon after closing at the Board Room of the Univer sity of Jaffna, in presence of the bidder's representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of **90 Days** from the date fixed for closing of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid security for and which shall be;
   - In the form included with the Bidding document
   - In favour of **Competent Authority, University of Jaffna.**
   - For an amount **of Rs.15,000.00** valid up to **16th October, 2019**
   - Issued by one of the agencies
     - a. A bank operating in Sri Lanka;
     - b. A bank based in another country but the guarantee "confirmed" by a bank operat ing in Sri Lanka;
9. A pre-bid meeting will be held on **11th June, 2019** at 10.00 am in the Board Room of the University of Jaffna.

**Chairman,**
**Department Procurement Committee**
**University of Jaffna.**
**P.O. Box 57, Thirunelvely,**
**Jaffna.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27.08.1922 | 02.05.2019 |

## திருமதி மீனாட்சிஅம்மா துரைராஜா

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி கோவில் தர்மகத்தா அமரர் கந்தையா துரைராஜா அவர்களின் அன்பு மனைவியும் எமது பாசமிகு தாயாரும் அன்பு மாமியாரும் பாசமிகு பேர்த்தியுமான எமது அன்புத்தெய்வத்தின் பிரிவுச்செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர் வளையங்கள் சாத்தியும் கண்ணீர் அஞ்சலி பதாதைகள் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் இன்று வரை எமக்கு பல்வேறு வழிகளில் எமது தேவையறிந்து உதவிய அயலவர்கள். உறவினர்கள். அன்பான நண்பர்கள். அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடந்த 02.05.2019 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.06.2019) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் இந்நிகழ்வில் தாங்களும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு எமது தாயின் ஆன்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இரண்டாம் ஒழுங்கை
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
077 314 4758

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08.09.1939 | 31.05.2019 |

## பொன்னர் தம்பித்துரை

தெல்லிப்பளை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் தம்பித்துரை நேற்று (31.05.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னர் தங்கம்மா தம்பதியினரின் அன்புமகனும் பூமணியின் கணவரும் ஜீவரஞ்சினி, ஜீவகன்(கனடா), காலஞ்சென்ற ஜீவனேசன், ஜீவதயா (கனடா), ஜீவராதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தெய்வகுமாரன், கவிதா (கனடா), நந்தகுமார் (கனடா), உதயகுமார் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு, கனக சபை,இராசையா, அருமைநாயகி மற்றும் கயிலாயப்பிள்ளை (கனடா), மாணிக்கம், இரத்தினம் (கனடா), சிவஞானம் (கனடா) ஆகியோரின் சகேதரரும் கஜினி, கிபிகன் (கனடா), கிதுஜானி (கனடா), கிஷானி (கனடா), திவ்யா (கனடா), ஆதித்தன் (கனடா), அட்ஷயன் (கனடா), தேனுசன், சஸ்மிதா, டிதுசனா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.06.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்
0772719584 - தெய்வகுமார் (இலங்கை)
077 440 5599 - உதயன் (இலங்கை)

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



| விண்ணில் | மண்ணில் |
|---|---|
| 24.05.1966 | 29.05.2019 |

## செல்வி வளர்மதி பூவலிங்கம்

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்டசெல்வி வளர்மதி பூவிலிங்கம் (29.05.2019) புதன்கிழமை,காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூவலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர், யா/ பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம்), மரியமுத்து பூவலிங்கம் (இளைப்பாறிய அதிபர், யா/ஆனைப்பந்தி அமெரிக்கன் மிஷன் த. க. பா) தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா லட்சுமி, ஜனுவாரிஸ் எஸ்வேனிக்கம் தம்பதிகளின் அன்புப்பேர்த்தியும் பூ.சந்திரவதனா (முகாமைத்துவ உதவியாளர், பனைஅபிவிருத்திச்சபை), ற.வனஜா (பிரான்ஸ்), பூ.வனிதா (ஆசிரியர், யா/ இணுவில் மத்தியகல்லூரி, ஆரம்பப்பிரிவு), பூ.ஜெயவதனி (விஜி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் க.றசந்தனின் (மின் பொறியியலாளர், பிரான்ஸ்) அன்பு மைத்துனியும் ற.வைதிகா (மருத்துவபீட மாணவி, பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆரதனை (02.06.2019 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.85, தேவாலயவீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
0212227859

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 . 12 . 1932

மறைவு 11 . 06 . 2018

திதி:-துதியை

## அமரர் இளையப்பா சதாசிவம்

(இளைப்பாறிய உத்தியோகத்தர் - நெற்சந்தைப்படுத்தும் சபை)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டொன்று மறைந்ததையா - எம்
உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் நினைவில்**

தில்லைகட்டி, சுன்னாகம். குடும்பத்தினர்.

(CS 25700)(11.17)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 25 . 03 . 1950

மறைவு 01 . 05 . 2019

## திருமதி செல்வராணி வேணுகோபால்

கடந்த 01.05.2019 சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (31.05.2019) வெள்ளிக்கிழமை கீரிமலையில் நடைபெற்றன. இன்று (01.06.2019) சனிக்கிழமை வீட்டுக்கிரியைகள் மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.**

S.H.T.M.L பாடசாலை முன் ஒழுங்கை,
சிறுப்பிட்டி.


குடும்பத்தினர்.

077 538 9987

(CS 25632)(14.17)

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் ஸ்ரீமான் இராமசாமிபிள்ளை வைத்திலிங்கம் (வல்வை சிங்கம் அண்ணா)



மலர்வு 28.08.1932

உதிர்வு 01.06.2006

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

**இராமசாமிபிள்ளை வைத்திலிங்கம் (வல்வை சிங்கம் அண்ணா)** அவர்கள் இறைவனடி சேர்ந்து ஆண்டுகள் பதின்மூன்று நிறைந்தாலும் அவரது நினைவலைகள் என்றும் எம்முள் ஓய்வதில்லை. அத்தகைய நற்பண்பும், நற்குணமும், சிறந்த சிந்தனையும், அறிவும், ஆற்றலும் அத்தனையும் வாய்க்கப் பெற்றவர். பாசத்தின் உறைவிடமாய், அன்பின் திருவுருவமாய், கருணையின் இருப்பிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், எங்கள் அனைவரையும் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வமே! பதின்மூன்று ஆண்டு காலம் சென்றாலும் கவலைகள் மறையவில்லை. ஆண்டுகள் பல கடந்து போனாலும் எம்மைவிட்டு நீங்காது உங்களின் பிரிவு.

**உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்**
**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**
**ஸ்ரீ இராகவேந்திராய நமோ நமஹ**


**என்றும் உங்கள் நினைவுடன்**

**மனைவி, மகன்மார், மகள்,மருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டன், பூட்டி, உற்றார், உறவினர்கள், ஸ்தாபன சேவையாளர்கள், சக ஊழியர்கள் மற்றும்**

**ASR Hotel, ASR Wedding Hall, ARVEGIE Medicals, ARVEGIE (Pvt)Ltd, Vanathy Printers (Pvt)Ltd, RVG Company, Appolo Enterprises**

(CS/25703)(14.17)

## மிகச் சிறந்த செயல்திறன் மற்றும் கவர்ச்சிகரமான நிறைவுடன் அபான்ஸ் வழங்கும் LG InstaView டோ-இன்-டோ குளிர்சாதனப் பெட்டிகள்



LG InstaView டோ-இன்-டோ குளிர்சாதனப் பெட்டியை அறிமுகம் செய்து வீட்டுப் பாவனைமின் உற்பத்திகளை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு அதிக வசதியையும், அதியுயர் சிறப்புத் தன்மையையும் LG நிறுவனம் வழங்கியுள்ளது. இதிலுள்ள அதி நவீனகிளாஸ் பேனல் அமைப்பை கையால் தட்டும் போது குளிர்சாதனப் பெட்டி உட்புறத்தில் உள்ள விளக்கு ஒளிர்கிறது, குளிர்சாதனப் பெட்டியின் கதவை திறக்காமல் உள்ளிருக்கும் பொருள்களை வெளியிலிருந்து பார்க்கக் கூடிய வசதி உள்ளது. புதிதாக அறிமுகமாகிய Insta View மாதிரியில் உள்ள Bar வடிவங்களினால் கதவை மிகவும் சுலமாக திறந்திடலாம்.

மிகச்சிறந்த செயல்திறனையும் மற்றும் கவர்ச்சிகரமான நிறைவையும் கலந்து மிகவும் சிறப்பான முறையில் LG InstaView குளிர்சாதன் பெட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் கதவில் பொருத்தப்பட்டுள்ள 33" கண்ணாடி பேணலை 2 முறை தட்டிய பின்னர் குளிர்சாதனப் பெட்டியில் களஞ்சியம் செய்யப்பட்டுள்ள பொருள்களை உங்களால் காணக்கூடியதாக உள்ளது. இதன் காரணமாக குளிர்ச்சிவீண் விரையமாகாமல் தடுக்கப்படுகிறது. நீங்கள் குளிர்சாதனப் பெட்டியின் கதவின் அருகில் உள்ள பொத்தானை அழுத்தி டோ-இன்-டோ கம்பாட்மென்டை திறந்துகொள்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் பிரதான கதவை திறக்காமல் குளிர்சாதனப் பெட்டியின் உள்ளே உள்ள பொருள்களை பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு உள்ளது.

உங்களுக்கு அடிக்கடி தேவைப்படும் உணவுகளை டோ-இன்-டோ கம்பார்ட்மென்ட் பகுதியில் களஞ்சியம் செய்து வைக்கப்படுவதுடன் குளிர்சாதனப் பெட்டியின் குளிர் காற்று வீண் விரையமாகமல் மிகவும் இலகுவாக உங்களுக்கு தேவையான பொருளை வெளியில் எடுக்க முடியும். இதன் மூலம் குளிர்காற்று வீண்விரையமாவது குறைவடைவதோடு, மின்சாரத்தை அதிகம் அதிகமாக சேமிக்கின்றது. அதேபோல் இதில் களஞ்சியப்படுத்தப்படும் உணவுகளின் புத்துணர்வு நீண்ட நாள்களுக்கு மிகவும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

LG InstaView டோ-இன்-டோ குளிர்சாதனப் பெட்டி Moist Balance Crisper TM தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளதோடு, ஈரலிப்பை மிகவும் சிறப்பாக பராமரிக்கின்றது. Lettuce அல்லது Spinach உள்ளிட்ட சகல மரக்கறி வகைகள் மற்றும் பழங்களுக்கு தேவையான ஈரலிப்பை பராமரித்து புத்துணர்வை நீண்டகாலம் பேணுகின்றது.

LG InstaView டோ-இன்-டோ குளிர்சாதனப் பெட்டியின் LG Smart ThinQTM தொழில்நுட்பத்தை கொண்டுள்ளதுடன். நீங்கள் வீட்டைவிட்டு வெளியில் இருந்தாலும் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியூடாக குளிர்சாதனப் பெட்டியை இயக்கும் வசதி உள்ளது. குளிர்சாதனப் பெட்டியின் வெப்பத்தை சரிசெய்தல், Express Freeze உள்ளிட்ட சிறப்பம்சங்களை கட்டுப்படுத்துதல், பிரச்சினைகளை இனங்காணுதல், உள்ளிட்ட பல்வேறு காரியங்களை அதன்மூலம் சரிசெய்திட முடியும்.

இந்த குளிர்சாதனப் பெட்டியிலுள்ள விசேட சிறப்பம்சம் யாதெனில் இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸராகும். இதிலுள்ள லீனியர் பிஸ்டன் ஒரு இடத்தில் மாத்திரம் உராய்வை ஏற்படுத்தி மெதுவான ஒரு அசைவுடன் இயங்குவதால் 42%வரை மின்சாரத்தை சேமிக்கின்றது. LG இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸருக்கு 10 வருட உத்தரவாதம் வழங்கப்படும்.

LG InstaView டோ-இன்-டோ குளிர்சாதனப் பெட்டி நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் உங்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும்.

(C 32611)

THE HALO TRUST

**The HALO Trust is seeking an experienced candidate to fill the position of:**

## Administrative Assistant

### In Kilinochchi

The HALO Trust is a UK based non-political, non-religious Non-Govern mental Organization specialized in the removal of the land mines and other explosive remnants of war and has been operating in Northern Province of Sri Lanka since 2002, currently working in Jaffna, Killinochchi and Mullaitivu and has a support office in Colombo.

**Qualifications / Minimum requirements:**

- Work experience in a similar role
- Excellent spoken and written English
- Excellent computer skills including MS Office (in particular strong command of Excel and Word)
- Very good organizational and management skills
- Experience in database management
- Previous experience with an international institution or NGO is an advantage

Interested candidates should submit their curriculum vitae and cover letter explaining your suitability for the position to.

**The HALO Trust**
**450,Thirunagar west**
**Kilinochchi**

**Or by E-mail**
**Email: vanni@halosrilanka.org**

**All applications must be submitted no later than 08 June 2019.**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள முன்னணி நிறுவனத்துக்குப் பின்வரும் பதவிகளுக்கு அனுபவமும் அதனோடிணைந்த கல்வித் தகைமையும் உள்ள இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01) மனிதவள முகாமையாளர் (Human Resource Manager)**
(மனிதவள முகாமைத்துவத்தில் பட்டம்பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**02) பொதுசன தொடர்பு முகாமையாளர் (Public Relation Manager)**

உங்கள் விண்ணப்பங்களை **acct@uthayan.com** என்ற மின்னஞ்சலுக்கு அல்லது **த.பெ.எண் 23, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு **04.06.2019** இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

## உள்ளக கணக்காய்வாளர்
## Internal Auditor

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நிறுவனமொன்றிற்கு உள்ளக கணக்காய்வாளர் வேண்டப்படுகின்றார். உள்ளக கணக்காய்வில் அனுபவமும் அதனோடிணைந்த கல்வித் தகைமையும் உள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஓய்வுபெற்ற அரச, தனியார் நிறுவனங்களை சார்ந்தவரும் விண்ணப்பிக்கலாம். உங்கள் Bio data வை acct@uthayan.com எனும் மின்னஞ்சலுக்கு அல்லது த.பெ.எண் 23, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு **04.06.2019** இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

## SpiritMAX Engineering (Pvt) Ltd

Turning your vision into values

**அனைத்து விதமான கட்டட நிர்மாண வேலைகள் மற்றும் கட்டட ஆலோசனைகள்**

**(All Kinds of Civil Engineering Consultancy and Construction Services)**

- Architectural Design
- Geo Technical Investigations
- Structural Design
- MEP Design
- Drafting
- Interior Design
- Cost Estimation
- Supervision
- Construction & Renovation

No. 03,2nd Lane,Palaly Road, Jaffna.
Tel : 021 221 4142, 077 3784474, 077 3989791
e.mail : info@spiritmax.lk

## வீடு விற்பனை

வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியில் 8 பேர்ச்சில்உள்ளதனிவீடுவிற்பனைக்குள்ளது.
**தொடர்பு- 0715201751**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

ஆண் வயோதிபரை தங்கி இருந்து பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
**077 992 3476**

## வீடு தேவை

யாழ் மாநகர சபைக்குள் சகல வசதிகளுடன் கூடிய நவீன வீடு வாடகைக்குத்தேவை.
வாகனத் தரிப்பிட வசதியுடன்
**076 676 0961, 071 013 1682**

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

உயிருடன்1kg - **290/=**
மொத்தமாகவும்சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். **0779050165**

**ஐங்கரன் பாம்**
பிறவுண் றோட் (கலட்டிச்சந்திக்கு அருகாமை),யாழ்ப்பாணம்

## வீடு காணி விற்பனைக்கு

ஆடியபாதம் வீதியில்
4 பரப்பும் 6 குளியும் கொண்ட வீடும் காணியும் விற்பனைக்குண்டு.
**021 491 0032**

## சமையலாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் குளிர்பான நிலையத்திற்கு **றோல், சமோசா, வடை** தயாரிப்பவர் உடன் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்
**078 495 7847**

உதயன்
**விளம்பர தொடர்புகளுக்கு.**
**advt@uthayan.com,**
**021493 1111**

## விலைக்கேள்விக்கான கோரல் (IFB-2019/02)
## கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் - வட மாகாணம்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை – 2019

01. வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு,பொதுநிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)இற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காதபட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற்கொள்ளப்படும்.
04. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Bidding & Contract Data பகுதி 5இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் - வ.மா. முதியோர் இல்ல வளாகம் , கண்டி வீதி, கைதடி , யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021205 7063, 021223 2212) என்னும் முகவரியிலிருந்து 03.06.2019ஆம் திகதியில் இருந்து 24.06.2019ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.10,000.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை, பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. கேள்வி இரு (மூலம், பிரதி) பிரதிகளில் தயாரித்து 25.06.2019ஆம் திகதியன்று மு.ப.10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் -வ.மா. முதியோர் இல்ல வளாகம் , கண்டி வீதி, கைதடி , யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
07. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு (23.09.2019) வரை செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் - வ.மா. முதியோர் இல்ல வளாகம் , கண்டி வீதி கைதடி , யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 14.06.2019 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| கேள்வி அடையாள, இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பாதுகாப்புப் பிணைதொகை | செல்லுபடியாகும் காலம் |
| NP/15/FB02/PSDG/RC/2019-06 | Reconstruction of Nanattan M.P.C.S Building in Mannar District – Stage –I (TWO STOREY) | 25.48 | 217 Days | C5 or C4 | 300,000.00 | 21.10.2019 |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் - வ.மா.**

## முதலமைச்சரும்...

முதலமைச்சரும் நான்தான். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள தனியார் மருத்துவமனைகளை நிர்வாகிகளுடன், சுகாதாரத் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 5 லட்சம் வாக்குகள் மாத்திரமே கண்ணாக இருக்கும். இங்குள்ளவர்களின் நலனின் எந்த அக்கறையும் இருக்காது.

நாடு கடந்த அரசு என்று ஒருவர் வெளியில் இருந்து இங்கு சிலவற்றைக் கிண்டுகிறார். இங்கு என்ன சின்ன விடயம் நடந்தாலும் ஐ.நாவுக்கு ஓடுகின்றனர். அவர்கள் பின்னால் கொஞ்ச சட்டத்தரணிகளும் லாபோகின்றார்கள். இலங்கை வரலாற்றில் சுகாதார அமைச்சரே தனது சிகிச்சைக்கு சிங்கப்பூர் செல்கின்றார்.

தனியார் மருத்துவமனைகளுக்கு குடிதண்ணீரை எடுக்கும் கிணறுகளில் வாசிப்புமானி பூட்டப்படும். நீங்கள் உறிஞ்சும் தண்ணீரின் அளவுக்கு ஏற்ப கட்டணம் செலுத்த வேண்டும். மருத்துவர்களும் வியாபாரம்தான் மேற்கொள்கின்றார்கள்.

வடக்கில் 226 தனியார் மருத்துவமனைகள் உள்ளன. இவற்றில் 73 மாத்திரமே பதிவில் உள்ளன. எஞ்சிய மருத்துவமனைகள் எதிர்வரும் 3 மாதங்களுக்குள் பதிவு செய்யப்படவேண்டும். இல்லாவிடின் அவை மூடப்படும். மருத்துவமனைகளும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து கடுமையான மேற்பார்வைக்கு உட்படுத்தப்படும்.

இந்தச் சந்திப்பில் தனியார் மருத்துவமனையின் நிர்வாகிகள், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், ஆளுநரின் செயலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஒ.5,105)

## பம்பிய...

தட்டிக் கொள்கின்றனர். இவ்வாறு நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரம் கிடைத்த பின்னரும் நாட்டு மக்கள் ஐக்கியமாகவே வாழ்ந்தனர். அடிப்படைவாதிகளாலேயே நாட்டின் தலைவிதி தலைகீழாக மாறியது. பண்டா, செல்வா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்குமானால் இலங்கையில் உள்நாட்டுப் போர் இடம்பெற்றிருக்காது. தமிழ் மக்களும் தனிநாடு வேண்டுமென கோரியிருக்கமாட்டார்கள். பிக்குகள் சிலர் போர்க்கொடி தூக்கியதாலேயே உடன்படிக்கையை கிழித்தெறிய வேண்டிய நிலை பண்டாரநாயக்கவுக்கு ஏற்பட்டது. இதன் விளைவு பாரதூரமாக அமையும் என்று பண்டாரநாயக்க எச்சரிக்கை விடுத்திருந்தார். அவர் கூறியது போலவே உள்நாட்டு போர் தலைதூக்கியது. நகத்தால் கிள்ளியெறிந்து தீர்த்து வைக்கக்கூடிய பிரச்சினையை, அடிப்படைவாதிகளே போர்க்களத்தை நோக்கி நகர்த்தினர். 30 ஆண்டுகள் இன்னல்களை எதிர்கொண்டோம். இன்று மட்டுமல்ல என்றுமே தமிழ் மக்களை நேசிப்பவன் நான். இதனால் தான் புலிகள் அமைப்பிலிருந்து அப்பாவி தமிழ் மக்களை காப்பாற்றுவதற்கு முற்பட்டேன். புலிகள் என்மீது கடும் அதிருப்தியிலேயே இருந்தனர். என்னைக் கொலை செய்வதே அவர்களின் இலக்காக இருந்தது. இதனால்தான், வீட்டிலிருந்தே தேர்தலை சந்திப்பதற்கு சந்திரிகா அம்மையார் வாய்ப்பளித்தார். நான் அஞ்சவில்லை. புலிகளை தொடர்ச்சியாக விமர்சித்தேன்.

புலிகள் இயக்கம் செயற்பாட்டிலிருந்த காலப்பகுதியில் அவர்கள் தொடர்பில் ஒரு வார்த்தையேனும் வெளியாடாத மகிந்தவும், அவரின் சகாக்களும் இன்று தம்மை தேசப்பற்றாளர்களாக காண்பித்து கொண்டு கூளுரைத்து வருகின்றனர். புலிகள் அமைப்பு மீண்டும் தலைதூக்கும் என்றெல்லாம் அறிவிப்புகளை விடுத்து வருகின்றனர். ஆனால், வடக்கு, கிழக்கு மக்கள், புலிகள் அமைப்பு மீண்டும் எழுச்சிபெறுவதை விரும்பவில்லை. மீண்டுமொரு போருக்கு அவர்கள் ஒரு போதும் ஆதரவளிக்க மாட்டார்கள் என்பது உறுதி - என்றார். (ஒ.5)

# எல்லா உயிர்களுக்கும் உதவி செய்

ஒரு நாட்டு ராஜாவிடம் முத்தன் வேலை செய்து வந்தான். அந்த ராஜாவுக்கு மிருகங்கள் பறவைகள் பேசும் மொழி தெரியும். முத்தனுக்கு ஒரே ஆச்சரியம், எப்படி ராஜா விலங்குகள் பேசுவதை அறிந்து கொள்கிறார் என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது. முத்தன் தான் அந்த ராஜாவுக்கு தினமும் உணவு கொண்டு கொடுப்பான். ராஜாவின் உணவில் ஒரு பகுதி மட்டும் தனியாக தனிப் பெட்டியில் ராணியே சமைத்துத் தருவாள்.

ஒரு நாள் முத்தன் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தான். அந்த பெட்டிக்குள் ஏதோ துண்டு துண்டுகளாக சமைத்து வைக்கப்பட்டிருந்தன. இது என்னவாக இருக்கும் என்று ஒரு துண்டை எடுத்துச் சாப்பிட்டுப் பார்க்கிறான். அதைச் சாப்பிட்டதும் முத்தனுக்கு பறவை மிருகங்களின் பேசும் மொழி புரிய ஆரம்பிக்கிறது. புதிய சக்தி கிடைத்ததும் அவன் அரண்மனையில் இருந்து அப்படியே புறப்பட்டுக் கிளம்பி விடுகிறான்.

அவன் குதிரையில் கிளம்பிச் செல்லும் வழியில் எறும்புகள் சாரை சாரையாக போவதை பார்த்தான், எறும்பின் தலைவன் இவனிடம் குதிரையை எறும்புகளை மிதிக்காத வண்ணம் செலுத்தும் படி வேண்டிக் கொண்டது. அவனும் அப்படியே செய்தான். எறும்புகள் நன்றி தெரிவித்தன, என்றேனும் உங்களுக்கு உதவுவேன் என்று கூறின.

அடுத்து, அவன் செல்லும் வழியில் குளம் இருந்தது அங்கு மூன்று மீன்கள் அழும் குரல் கேட்டது. அவை புதருக்குள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தன. குளத்தில் தாவிக் குதிக்கும் போது அவை தவறிப் புதரில் விழுந்திருந்தன. அத்தனையும் காப்பாற்றி தண்ணீருக்குள் மீண்டும் எடுத்துவிட்டு கிளம்பினான். மீன்களும் நன்றி தெரிவித்தது.

அவன் கொஞ்ச தூரம் ஒரு காட்டைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தான். சின்னஞ்சிறு காகங்களின் குரல் கேட்டது. தாய் காக்கை அவைகளிடம் "நீங்களே உங்கள் உணவைத் தேடிக் கொள்ளுங்கள் " என்று கூறி மரத்தில் இருந்து கீழே தள்ளி விட்டிருந்தது. அவைகளுக்கு தானியங்களை உணவாக கொடுத்துவிட்டுகிளம்பினான். அவை மிகுந்த மகிழ்ச்சியுடன் நன்றி கூறின.

அதன் பின் காட்டைக் கடந்து அவன் வேறு ஒரு நாட்டுக்குள் நுழைந்தான். ஊரே கோலாகலமாக இருந்தது.

அந்த நாட்டு இளவரசி தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் சுயம்வரம் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தாள். வேலைக்காரனுக்கு ஆசை, எப்படியும் இந்தப்போட்டியில் கலந்துகொண்டு நாம் இந்த நாட்டின் அரசனாக வேண்டும் என ஆசைப்பட்டான். போட்டியில் கலந்து கொண்டான். போட்டியில் வெற்றி பெறவில்லை என்றால் சிறையில் தள்ளிவிடுவார்கள். போட்டி ஆரம்பம் ஆனது, அவனை ஒரு குளத்திற்குக் கூட்டிப் போனார்கள். குளத்திற்குள் ஒரு மோதிரத்தை போட்டு அதனை எடுக்க வேண்டும் என கட்டளையிட்டார்கள் . அவன் பயந்து மலைத்து நின்றான்.

குளத்திற்குள் நீந்த ஆரம்பித்த அவனுக்கு ஆச்சரியம்....! "இதோ உங்கள் மோதிரம்" என்று ஒரு குரல் கேட்டது. ஒரு மீன் தன் வாயில் மோதிரத்தைக் கவ்விக்கொண்டு வந்திருந்தது. அது அவன் புதலிருந்து காப்பாற்றிய மீன்.

இளவரசி அடுத்த போட்டி வைத்தாள். ஒரு மூட்டை அரிசி முழுவதும் தோட்டத்தில் கொட்டப்பட்டு விடிவதற்குள் ஒரு அரிசி விடாமல் சேகரிக்க வேண்டும். ஆகா இது நடக்கவே நடக்காது நமக்கு சிறை தான் என்று முடிவு செய்து அவன் தூங்கி விட்டான். அவன் உதவி இருந்த எறும்புகள் ஒவ்வொன்றாக பொருக்கி ஒரு மூட்டையில் வைத்திருந்தது. அதனால் அதிலும் ஜெயித்து விட்டான்.

இறுதியான போட்டி ஒரு தங்க ஆப்பிள் காய்க்கும் மரம் காட்டில் இருக்கிறது அதைக் கண்டுபிடித்து ஆப்பிளை எடுத்து வர வேண்டும். அவன் இருட்டும் வரை தேடினான் பசுமை மரங்கள் மட்டுமே இருந்தன. தங்க மரத்தைக் காணவே இல்லை. கவலையுடன் இருட்டியபிறகு தூங்கி விட்டான். காலையில் எழுந்து பார்க்கிறான் அவன் அருகில் தங்க ஆப்பிள் இருந்தது. அவனிடம் உதவி பெற்ற காகங்கள் அந்த ஆப்பிளைத் தேடிக் கொண்டு வந்து அவனிடம் போட்டிருந்தன. அவன் அவைகளுக்கு நன்றி தெரிவித்தான்.

எல்லா போட்டியிலும் ஜெயித்ததால் அவனை இளவரசி மணந்துகொண்டாள். அவன் ராஜாவாக அவளுடன் அந்த நாட்டை மகிழ்ச்சியுடன் வெகு நாள் ஆட்சி செய்தான். நாம் செய்த உதவி வீணாகாது. அது நமக்கு ஏதாவதொரு வகையில் எப்போதாவது பயன்தரும். நாம் யாரேனும் ஒருவருக்கு உதவி செய்து விட்டு மறந்து விட்டாலும்கூட அதுபின்னொருநாளில் நமக்கு யார் வாயிலாகவாவது கிடைக்கும். "செஞ்ச உதவியும் இட்டு வைத்த விதையும் வீணாகப்போகாது" மிகமிக அவசியமான நேரத்தில் செய்யப்படும் உதவி இந்த உலகை விட மிகப் பெரியது.

இரசாயனவியல்(Chemistry

விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் **தமிழ்** மற்றும் **ஆங்கிலமொழி** மூலத்தில் **தனி** மற்றும் **குழு** வகுப்புக்களாக கற்பிக்கப்படும்.

தொடர்புகளிற்கு
076 067 4486

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டச்செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில்
முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும்
**நா. சுகந்தன்** அவர்களின் பாசமிகு மகள்
**தாரங்கா சுகந்தன்** அவர்கள்
இறைபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கும் மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ். மாவட்ட செயலகநலன்புரிக்கழகம்**

## மரண அறிவித்தல்



திருமதி.

### இரத்தினசபாபதி பரமேஸ்வரி

யாழ் இணுவில் கிழக்கு இணுவிலை (இளந்தாரி கோவிலடி) பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இரத்தினசபாபதி பரமேஸ்வரி அவர்கள் 29.05.2019 அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதி (ஆசிரியர்). அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற பத்மாவதி, கிருபாதேவி ஆகியோரின் தாயாரும். காலஞ்சென்ற மகாலிங்கசிவம், ராஜேந்திரன் ஆகியோரின் மாமியாரும், திருக்குமரன், Dr. செந்தில்குமரன், ஜெயந்தி பாமினி, குறிஞ்சில் குமரன், செந்தூரன், சிந்துஜா, ஜனனி, ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் ஞாயிற்றுக்கிழமை (02.06.2019) காலை 9.00 மணி தொடக்கம் பார்வைக்காக வைக்கப்பட்டு ஈமக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் 2 மணிக்கு பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல் : குடும்பத்தினர்** **T.P: 0770774803**

## மரண அறிவித்தல்

### அம்பலம் விஜயநாதன்

(B.A.Dip In - Edu. SLPS 1)

**(ஓய்வு பெற்ற அதிபர் வல்வை சிதம்பரக் கல்லூரி, பொருளாளர் வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலயம், அதிபர் அறநெறிப் பாடசாலை பூவற்கரை பிள்ளையார் ஆலயம்)**



வதிரி புஸ்ப இல்லத்தைப் பிறப்பிடமாகவும் அல்வாய் சாரதாவை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் விஜயநாதன் நேற்று (31.05.2019) வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்துள்ளார்.

அன்னார் அமரர்களான அம்பலம் மனோன்மணிதம்பதியினரின் 2வது புத்திரனும், பாலசிங்கம் சாரதாமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் சாரதாவதியின் அன்புக் கணவரும் செந்தூரன் (விரிவுரையாளர் வவுனியா வளாகம்), குமரன் (பொறியாளர் லண்டன்), துவாரகன் (அபிவிருத்தி உத்தி யோகஸ்த்தர் மருதங்கேணி பிரதேச செயலகம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராதிகா செந்தூரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்) அன்பு மாமனாரும், கலாநிதிபுஸ்பநாதன்(பீடாதிபதிவியாபாரகற்கைகள் பீடம் வவுனியா வளாகம்), தர்மவதி, விஜயமலர், அமரர் தர்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் வித்தியவாரிதன், ஆருஷா, ஆகர்ஷன் ஆகியோரின் அன்புப்பேரனும் வெற்றிவேல்(ஓய்வுபெற்றஅதிபர்), மணிவர்ணன் (ஓய்வு பெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர்), கலாவதி, ராதாமலர், விஜிதா புஸ்பநாதன் (ஆசிரியை வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்), செல்வரத்தினம், அமரர் வேலாயுதம் ஆகியோரின் மைத்துனரும், அமரர் தர்மரத்தினம் (இ.போ.ச.).ரதி, சுசிகலா (ஆசிரியை யா/துன்னாலை வடக்கு மெ.த.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகலனும் ராதிகா தயாளகாந்தன்( ஊரணி வைத்தியசாலை) சுரேக்கா (பிரதேச செயலகம் பருத்தித்துறை) ஆகியோரின் சிறிய தந்தையும் அகிலன் (ஆசிரியர்), ஜெயந்தன், மங்கலிக்கா, அமரர் நகுலன், ரம்பா (பிரான்ஸ்), ராஜாராம், அபிரா, நிருத்திகா (முகாமைத்துவ உதவியாளர் மாநகர சபை யாழ்ப்பாணம்), துஸ்யந்தன், சிந்துஜன், விஜயராஜ், ஜேம்ஸ்பொண்ட், எலிசபெத்(பிரதேசசெயலகம், வேலணை), கமல்ராஜ் ஆகியோரின் அன்புமாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.06.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் அல்வாய் பங்கு வேம்படி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மகன் வி.செந்தூரன்.**

**077 210 1863, 077 396 5583**



# வரணி – சிட்டிவேரம் கண்

# தேர்த்திருவிழா சிறப்

## ஆலய வரலாறு

ஈழத்திரு நாட்டின் சிரசு என விளங்கும் யாழ்ப்பாணத்தில் நீண்டுயர்ந்த பனை, தென்னை, நெல்வயல்கள், கனி கள் தோட்டங்கள் என வளம் பல கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் பிரதான வீதியில் ஏறத்தாள 05 கிலோ மீற்றர் தூரத்தில் வரணி எனும் பழமை பேணும் பழம்பெரும் கிராமத்தில் சோலைகள், வாவிகள் சூழ்ந்து காணப்படும் இடத்தில் வீதியின் மேற்குப் புறமாக இந்தச் சுட்டிபுரம் ஆலயம் அமைந்துள்ளது. முற்காலத்தில் இப்பகுதியில் சித்தர்கள் பலர் வாழ்ந்து வேதித்த இடமாதலால் இந்த இடம் சிட்டிவேரம் எனப் பெயர்பெற்றது. சிட்டி+வேரம் என்பதே காலக் கிரமத்தில் மருவி சுட்டிபுரம் என வந்த தென அறியப்படுகின்றது. இந்த ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் என்பன ஒருங்கே அமையப் பெற்ற சிறப்பைத் தருகின்றது. மூர்த்தி. சிட்டிவேரம்'கண்ணகை அம்பாள் தலம் : வரணி சிட்டிவேரம் (சுட்டி புரம்) தீர்த்தம்: தும்புருவில் தல விருட்சம்: பாலை முன்னொரு காலத்தில் தும்புரு எனும் முனிவர் இத்தீர்த்தத் தில் நீராடி அம்பாளை பூசித்ததாகவும் அதனாலேயே இப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. மேலும் பல சித்தர்களும் யோகிகளும் இத் தீர்த்தத்தில் நீராடி அம்பாளை வழிபட்டதாகக் கூறப்படுகின்றது. இத்தீர்த்தத்தில் வெண்தாமரை, செந்தாமரை நீலோற்பலம், செங்கழுநீர் போன்றவற்றையும் பல மூலிகை அம்சங்களும் உள்ளன. ஈழத்திலே கண்ணகி வழிபாட்டுக்கு தனித்துவமான இடம் உண்டு. இவ்வழி பாடு தென்னிந்தியாவில் இருந்தே இலங்கைக்கு வந்ததென வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. கண்ணகி பாண்டிய மன்னனிடம் நீதி கேட்டு சிலம்பை உடைத்து உண்மையை நிலைநாட்டி தாம் கொண்ட சினத்தால் மதுரையை எரித்து, சினம் தணிந்து, கடல் கடந்து இலங்கைக்கு வந்ததாகவும், இங்கு 10 இடங்களில் கோயில் கொண்டதாகவும் அவ்வாறாக கோயில் கொண்ட ஐந்தாவது இடமே சுட்டிபுரம் எனவும் கூறப்படுகின்றது. இந்த ஆலயத்தில் புராதன காலம் தொடக்கம் கோவலன் கண்ணகி கதைபடிக்கப்பட்டு வருகின்றது. இதன் காப்புச் செய்யுள் கேட்கும்போது வடமராட்சி கிழக்கு குடாரப்பு எனும் கிராமத்தைச் சேர்ந்த கந்தர் வெற்றிவேல் என்பவரால் எழுதப்பட்ட ஏடாக கொள்ளப்படு கிறது. இன்னும் பல சிறப்புக்களும் அற்புதங்களும் வாய்ந்த இவ்வாலயத்தில் கண்ணகித் தாயார் வீற்றிருந்து அரு ளாட்சி செய்கின்றார். நாமும் கண்ணகித் தாயை வழிபாடு செய்து இஷ்டசித்திகளைப் பெற்று உய்திபெறுவோமாக.

ஆலய பரிபாலன சபை

## ஆசியுரை

வரலாற்றுச் சிறப்பு மிக்க வரணி அருள்மிகு சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் தேவஸ்தான
அருளாசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஈழத்தில் கண்ணகி வழிபா
பெற்ற தலமாக சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயம் தொன்று தொட்டு விளங்குகின்றது
கலைகளது வளர்ச்சியும் ஒருங்கே அமைந்த பெருமைக்குரியது. இவ்வாலயத்தில் பன்னி
உற்சவத் திரு விழாக்கள் நடைபெற்று பதின்மூன்றாவது நாளான இன்று தேர்த்திரு
பதின்நான்காம் நாள் தீர்த் தோற்சவமும் இடம்பெறும். யாழ்.குடாநாட்டின் அனைத்துப்
பல்லாயிரக் கணக்கான அம்பிகை அடியார்கள் வருகை தருவதும், தத்தமது நேர்த்திக்கடன்கள
அம்மன் பால் அவர்கள் கொண்ட பெரும் பக்தியை வெளிக்காட்டி நிற்கின்றது இவ்வாலயம்.
ஈழவள நாட்டில் முதன்முறையாக தென்னிந்திய இசைமேதை டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன்
"சுட்டிபுரம் வாழும் சிவசுந்தரியே கண்ணகியே கட்டியுந்தன் கால் பிடித்தேன் கருணைக் கண்
பாடல் பாடி அம்பிகையை மெய்மறக்கச் செய்த மகிமை என்றுமே எம் எல்லோர் அடி
பதிந்துள்ளது. சோலை நடுவே சோபித்திருக்கும் சோதியாய் ஒளிர்ந்து அருள் பாலித்துக் கொண்
இரதோற்சவத் துக்கு இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் பேருவகையடை கின்றேன்.
அம்பிகை அருள் அனைவருக்கும் கிட்டட்டும்!
மஹோற்சவங்களில் சிறப்பாகக் கொண்டாடப்படும் தேர்த்திருவிழாப் பொலிவு காண்பது பெரும்
அம்பிகை மெய்யடியார்கள் அனைவரும் அன்னையின் ரதோற்சவத்தினை கண்ணாரக் க
செய்து அம்பாளின் திருவருளைப் பெற்று உய்வீர்கள் என நல்லாசி கூறி அமைகின்றேன்.

"லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து"

சிட்டிவேரம் கண்ணகை அ

கொடிகாமத்தில் தங்க நகைகளின் சாம்ராஜ்யம் வாடிக்கையாளர்கள் தேவைக்கேற்ப நவீன டிசைன்களில்
உத்தரவாதத்துடன் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள
ரூபி நகை மாளிகை
Ruby Nagai Malikai
Tel: 021 205 0378, 077 617 3046
கண்டி வீதி, கொடிகாமம்.

ஷேத்ரபாலகா
புத்தகச் சோலை
சகல விதமான பாடசாலை உபகரணப் பொருள்கள் புத்தக வகைகள் மற்றும் அழகுசாதனப் பொருள்கள் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
கண்டிவீதி, கொடிகாமம். T.P: 077 220 8366
Kandy Road, Kodikamam. E-s.niruban77@gmail.com

நிலா உணவகம்
உரிமையாளர்: கண்ணன்
(பிரதேச சபை உறுப்பினர்)
மத்திய கல்லூரி முன்பாக,
வரணி.
T.P: 077 116 7552

அம்பாள்
ஐஸ்கிறீம்
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
T.P: 077 348 4322

மணியம் களஞ்சியம்
பல்பொருள்
வாணிபம்
கண்டி வீதி, கொடிகாமம்.

ஸ்ரீ கருணா
மல்ரி சொப்
(பத்திரிகை முகவர்)
மத்திய கல்லூரி முன்பாக, வரணி
T.P: 077 077 3504

Siva Super Market
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
T.P: 021 205 0249

## பணியாளர் தேவை

நெல்லியடியில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பணியாளர்கள் தேவை.
**டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையம்.**
**இல. 21 பருத்தித்துறை வீதி, நெல்லியடி.**
(CS 00852) (14.17)
**077 8814649/077 2680252/ 021 7201394**



## K.S.M சிவஸ்ரீ முரளிதரன் குருக்கள்

சிவாகமவிதிப்படி அபரக்கிரியைகள் மரணச்சடங்கு, அந்தியேட்டி செய்விப்பதற்கு தொடர்புகொள்ளவும் மாலைகள் ஓடருக்கு கட்டித் தரப்படும். ஓதுவார் தேவை.

நெல்லண்டை, தபால்கந்தோர் அருகில்
நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறை.
**077 557 5259, 076 685 5759, 077 220 8196**



## காந்தித் தாத்தா

அகிம்சை வழியில் வாழ்ந்தவர்
அன்பு வழியில் வென்றவர்
அல்லும் பகலும்உழைத்தவர்
அகிலத்தைப் பெரிதும் மதித்தவர்

அறப்பணிகள் செய்தவர்
அன்புக் கோர் மகானாய் நின்றவர்
அடிமை வாழ்வை எதிர்த்தவர்
அமைதி வழியில் போராடியவர்

மனிதப் பண்பிலே சிறந்தவர்
மதிப்பிலே என்றும் உயர்ந்தவர்
மக்களுக்கு நல்வழி காட்டியவர்
மண்ணில் என்றும் மாசில்லாதவர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**பிறப்பு 17.05.1993** **இறப்பு 11.06.2018**

### சுப்பிரமணியம் சஜீவன்

(பேருந்து நடத்துனர்-வவுனியா)

நீ இறந்த செய்தி கேட்டு
ஓராண்டு பூர்த்தியாகிவிட்டதாம்-ஆனால்
இன்னும் எங்கள் மனநிலையில் நீ
வவுனியா பேருந்து சாலையில்...
ஒருதடவை வீடுவந்து உன்முகம்
காட்டிவிட்டு செல் - நடைபிணமான எங்கள்
வாழ்க்கை கொஞ்சம் உயிர் பெறட்டும்.

குப்பிளான் **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்மசோதி பாலசுப்பிரமணியம்



பிறப்பு 14.04.1946 இறப்பு 31.05.2019

யாழ்ப்பாணம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மசோதி பாலசுப்பிரமணியம் நேற்று (31.05.2019) வெள்ளிக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜயாத்துரை பூரணம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பாலசுப் பிரமணித்தின் (ஸ்கூட்டர் பாலா மாஸ்ரர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசம்மா தம்பதியினரின் மருமகளும் சிவசக்தி, சிவகுமார், சிவதர்ஷினி ஆகியோரின் அன்புத்தாயாரும் பத்மநாதனின் அன்பு அக்காவும்குலேந்திரன், றமோனாமற்றும் காலஞ்சென்ற ராஜா ஆகியோரின் மாமியாரும் திவ்யா, பாலவன், சஷ்வன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற கதிர்வேல் ஜயா ஆகியோரின் மைத்துனியும் ஜனனியின் அன்பு அத்தையும் அழகம்மா காலஞ்சென்ற அன்னலக் ஷ்மிஆகியோரின் சகோதரியும் யசோதா, வினோதா, நீதா ஆகியோரின் அன்ரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**M.S வீதி, கோண்டாவில் கிழக்கு** **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா வாமதேவன் (வவா)

**(ஓய்வுபெற்ற CTB இயந்திர வல்லுநர்)**



உடுவில் சிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா வாமதேவன் 29.05.2019 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - புஸ்பதி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், வரதராணியின் அன்புக் கணவரும், தனரஞ்சன், லக்ஸ்மன் (இத்தாலி), நிஷாந்தினி (நவில் பாடசாலை, கைதடி ஆசிரியர்), தர்சிகா, ரினோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராசரத்தினம் பாமதேவன் (கனடா), கெங்காதேவி, மலர், யோகேஸ்வரன் (யோகன்), காலஞ்சென்ற பாலதேவன், மனோகரன், சிறிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வரதராஜா (பிரான்ஸ்), வனமோகனா (பிரான்ஸ்), வசந்தராணி, வசந்தராஜா, வனஜா (இத்தாலி), வாசுகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.06.2019) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாரதி வீதி,**
**அரியாலை.** (CS/25744)(11,17) **தகவல்: குடும்பத்தினர்.**

### செல்வி வசந்தி குலவீரசிங்கம்

**முன்னை நாள் நிறைவேற்று பொறியியலாளர் (Chief Engineer)**
**கட்டட திணைக்களம், யாழ்ப்பாணம்.**



துன்னாலை வடக்கை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வசந்தி குலவீரசிங்கம் நேற்று (31.05. 2019) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான குலவீரசிங்கம் பரமேஸ்வரி தம்பதிகளின் ஏக புத்திரியும், நாகேந்திரன் (UK), குலேந்திரன் (UK) மற்றும் கணேந்திரன்(UK) ஆகியோரின் உடன் பிறந்த சகோதரியும், சாந்தினி, சூசன் ஆகியோரின் மைத்துனியும் அஞ்சலாவின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் A F Raymond (Borella) மலர்சாலையில் இன்று (01.06.2019) சனிக்கிழமை பி.ப 5.00 முதல் பி.ப 9.00 வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (02.06.2019) ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள்இடம்பெற்றுபூதவுடல்பி.ப2.30மணியளவில்பொறல்லை கனத்தை இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**+94 77 4196284, +94 76 7244739**

செல்வி
### யோகேஸ்வரி (பபா) இராசரட்ணம்



நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், யாழ். நகரை வதிவிடமாகவும் கொண்ட செல்வி யோகேஸ்வரி இராசரட்ணம் (31.05.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரட்ணம்-இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி (முன்னாள் அதிபர் யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஸ்ரீஸ்கந்தராசா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆனந்தரட்ணம், நடராசா மற்றும் நாகேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஹேமாசினி-விதுரன் குமாரவேல் (ஆஸ்திரேலியா), தர்ஷினி-ரமேஸ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமியாரும், அபிதன், அம்ரிதா, அபிராமி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.06.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பரகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.9, விக்ரோறியா வீதி,**
**யாழ்ப்பாணம்.** **தகவல்: குடும்பத்தினர்.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஆறா வடு!

வரலாறு உயிர்பெறும் இடம் என்று சொல்வார்கள் நூலகங்களை. அதனுள்ளே இருக்கும் நூல்களின் பெறுமதி கருதி அப்படிச் சொல்லப்படுவதுண்டு. ஆனால் இலங்கைத்தமிழர்களின் நவீன அரசியல் வரலாறு உயிர் பெற்ற இடமாகவும் ஒரு நூலகம் திகழ்ந்திருக்கிறது. அது யாழ்ப்பாணம் பொது நூலகம்.

கொழும்பு அரசின் ஆட்சியாளர்களது ஆசீர்வாதத்துடனும் உதவி மற்றும் வழிகாட்டலுடனும் சிங்களக் காடையர்களால் யாழ்ப்பாணம் பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டு இன்றோடு ***38*** ஆண்டுகள் கடந்துவிட்டன. வைகாசி ***31*** ஆம் திகதி தொடங்கியது அந்த வன்முறை.

யாழ். நகரில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகம், கடைத் தொகுதி, அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரனின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம் போன்றன இரண்டாம் திகதி வரை தொடர்ந்த வன்முறைகளில் தீக்கிரையாக்கப்பட்டன.

ஆனி முதலாம் திகதி இரவு யாழ்ப்பாணம் பொது நூலகம் எரியூட்டப்பட்டது. நூல்கள், சஞ்சிகைகள், கையெழுத்துப் பிரதிகள், துண்டறிக்கைகள், வரலாற்று ஆவணங்கள், நூற்றாண்டுப் பழமை வாய்ந்த ஏட்டுச் சுவடிகள் என 97 ஆயிரத்துக்கும் அதிகமான வாசிப்பு ஊடகங்கள் எரிந்து சாம்பராகின.

அதுவரையில் தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய நூலகமாகத் திகழ்ந்து வந்தது யாழ்ப்பாணம் பொது நூலகம். அங்கிருந்த கிடைத்தற்கரிய பல சுவடிகள் மற்றும் ஆவணங்கள் வேறெங்கும் கிடைக்கக்கூடியனவல்ல. பல தனிப்பட்ட ஆளுமைகளின் சேகரிப்பில் இருந்து யாழ்ப்பாணம் பொது நூலகத்தை வந்தடைந்தவை அவை. அத்தகைய ஒரு நூலகத்தை அழிப்பதன் மூலம் தமிழர்களின் அடையாளத்தையும் வரலாற்றையும் அழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சியே அது.

கூட்டாட்சி இல்லையேல் தனிநாடு என்கிற தமிழர்களின் அரசியல் கோரிக்கை பலம்பெற்று வந்த அந்தக்காலத்தில் தமிழர்களின் உச்சந்தலையிலேயே அடிக்கவேண்டும் என்று திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நூலக எரிப்பு, இலங்கைத் தீவிற்கே வைக்கப்பட்ட தீயாக மாறியது. அந்தத் தீயின் வெம்மையில் சுமார் 30 ஆண்டுகள் இந்தத் தீவு வெந்து தணிந்தது. இலங்கையில் இரண்டாந்தரக் குடிமக்களாக இருக்கவேண்டும் இல்லையேல் எரிக்கப்படுவீர்கள் என்கிற எச்சரிக்கையாகவே இந்த வன்முறை கட்டவிழ்க்கப்பட்டது.

ஆயுதப் போராட்டம் தவிர வேறு வழி வகைகள் மூலம் தமிழர்களுக்குத் தீர்வு கிட்டாது என்கிற முடிவை நோக்கி தமிழ் இளைஞர்களை தள்ளிய முக்கிய வரலாற்றுச் சம்பவங்களில் நூலக எரிப்பும் ஒன்று. அதன் மூலம் நவீன தமிழ் அரசியல் வரலாற்றில் யாழ்ப்பாணப் பொது நூலகம் கணிசமான வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றது. இன்று வெள்ளையடிக்கப்பட்டு புதிய நூல்களுடன் புதுப் பொலிவு பெற்று நின்றாலும் ஈழத் தமிழர்கள் மனங்களில் அது ஏற்படுத்தியிருக்கும் மாறாக் கரும் வடு இலகுவில் அழிக்கப்படக்கூடியதல்ல.

நூலக எரிப்பு யாரால் மேற்கொள்ளப்பட்டது, குற்றவாளிகள் யார் என்பது தொடர்பில் நீதியான, சுயாதீனமான ஒரு விசாரணையும் கொழும்பினால் இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை. அன்று தொடங்கிய அதே வரலாறுதான் இன்றும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

தமிழ் இனப்படுகொலையின் மற்றொரு பாகமான நூலக அழிப்புக்கான நீதியாக அதனை வெள்ளையடித்து மீண்டும் இயக்கியமையை நல்லிணக்கம் என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரணதுங்க வெளிப்படுத்த முயன்றதைப் போன்றே, இன்றும் கொடும் போருக்குப் பின்னரான போலி நல்லிணக்கமும் தீர்வு முயற்சிகளும் தொடர்கின்றன.

இலங்கை உண்மையான அமைதியையும் இனங்கள் இடையிலான நல்லிணக்கத்தையும் நாடுவதாக இருந்தால் அது யாழ். பொது நூலக எரிப்புக்கான சுயாதீன விசாரணையின் ஊடான நீதியில் இருந்து தொடங்கப்படவேண்டும்.



# மறுக்கப்படும் நீதியால் முழு நாட்டுக்கும் கேடு

சேரலாதன்

நீண்ட காலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரச தலைவர் தமது முடிவைத் தெளிவாக அறிவித்துவிட்டார். ஆனால் அதற்காக அவர் கூறிய காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஞானசார தேரர் மீது ஏற்கனவே பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

ஆனால் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரிலேயே அவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது.



**மறுக்கப்படும் நீதி**

இந்த நாட்டின் மிக உயர்ந்த கட்டமைப்பாக நீதித்துறை விளங்குகின்றது. இதற்கு முன்னால் அனைவருமே சமமாகக் கணிக்கப்படுகின்றனர். ஆனால் தற்போதைய நிலையில் சமனான நீதி வழங்கப்படுவதில்லை என்பது பெரிய குறைபாடாகவே இந்த நாட்டில் காணப்படுகின்றது. குற்றமிழைத்தவர்கள் சுதந்திரமாக நடமாடுவதும், அப்பாவிகள் தண்டிக்கப்படுவதும் வழக்கமானதொன்றாகவே மாறிவிட்டது. இந்த நிலையில் நீதி சரியாக வழங்கப்படும் என்பது இந்த நாட்டைப் பொறுத்தவரையில் எதிர்பார்க்க முடியாது.

அரசியல் கைதிகளில் பலர் விசாரணை எதுவுமின்றி நீண்ட காலமாகச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இதையொரு மிக மோசமான மனித உரிமை மீறலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

இந்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக உயர்மட்ட அரசியல்வாதிகளால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் வழக்கம் போன்று பொய் வாக்குறுதிகளாகவே அமைந்துவிட்டன. அரச தலைவரின் பொது மன்னிப்பின் கீழ் சிறைத் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஞானசார தேரர் ஒரு பௌத்த துறவியாக இருந்த போதிலும் எப்போதுமே வன்முறையின் வழியில் நடப்பதையே விரும்பியவர். தாம் மீண்டும் சிறை சென்றாலும் தமது நடவடிக்கைகளில் தொய்வு ஏற்படாதென அவர் கூறியதாக ஊடகமொன்றில் செய்தி வெளியாகியுள்ளது. இதன் மூலமாக ஞானசார தேரரின் அதிரடி நடவடிக்கைகள் தொடருமென்பது உறுதியாகி விட்டது. இத்தகைய ஒருவருக்கு பொது மன்னிப்பு வழங்கிய அரச தலைவரால் தமிழ் அரசியல் கைதிகள் புறக்கணிக்கப்படுகின்றமை எந்த வகையிலும் நியாயமானதல்ல.

**குண்டுத் தாக்குதலுடன் தொடரும் குற்றச்சாட்டுகள்**

வெற்றி தொடர்பாக கடந்த 10 ஆண்டுகளாகக் கூறிவரும் தென்னிலங்கை அரசியல் வாதிகளால் தமிழர்களின் மனங்களை வெல்ல முடியாமைக்கான காரணங்கள் என்னவென்பதைத் தமிழ் மக்கள் நன்கறிவார்கள். தெற்கில் உள்ளவர்களின், தமிழர்கள் மீதான வெறுப்புணர்வு இதில் முதன்மை இடத்தை வகிப்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும். ஒரு நாட்டின் ஒரு பிரிவு மக்களை மாற்றான்தாய் உணர்வுடன் பார்ப்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின் அபிவிருத்தியையும் இது மோசமாகப் பாதித்துவிடும்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்




பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதலின் பின்னார் கிடைக்கின்ற தகவல்கள் அதிர்ச்சியைத் தருகின்றன. அமைச்சர் றிசாத் பதியுதீன், கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகிய உயர்மட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் குற்றப் புலனாய்வுத் துறையினரால் விசாரிக்கப்படவுள்ளனர். இவர்கள் இருவருக்கும் எதிராகக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இவர்கள் மீதான விசாரணைகள் இடம்பெறவுள்ளன. தற்கொலைக் குண்டுதாரிகளுடன் இவர்கள் இருவரும் தொடர்புகளைக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டன. இவர்கள் தொடர்பாக அரச தலைவரும் தலைமை அமைச்சரும் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவர்கள் மீதான விசாரணைகளுக்குப் பங்கம் ஏற்படாதவாறு தற்காலிகமாகவேனும் அவர்களது பதவிகளிலிருந்து நீக்கியிருத்தல் வேண்டும். ஆனால் எதுவுமே இடம்பெறவில்லை. அரசின் ஓர வஞ்சகமான செயற்பாட்டையே இது எடுத்துக்காட்டுகின்றது.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தரைப் பதவியிலிருந்து அகற்றுவதில் அரசதலைவர் காட்டிய அவசரத்துக்கான காரணம் தொடர்பாக இதுவரையில் அறியப்படவில்லை. தமிழர்களுக்கு ஒரு நீதி, மற்றவர்களுக்கு வேறொரு நீதி என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

தற்போது முஸ்லிம் சமூகத்தினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்ற தகவல்கள் வெளியாகி வருகின்றன. குருநாகல் போதனா மருத்துவமனையில் மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் மருத்துவராகப் பணியாற்றிய சியாப்தீன் மொகமட் ஷாபி தொடர்பாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவர் தமது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டதாகவும் வேறு இனப் பெண்களுக்கு கருத்தடைக்கான சிகிச்சைகளை மேற்கொண்டதாகவும் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. இதேவேளை திருகோணமலை மாவட்டம் மூதூர்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்து

ஆலயமொன்றில் தன்னையொரு தமிழரென இனம்காட்டிய முஸ்லிம் ஒருவர் இரண்டு ஆண்டுகளாக ஆலயக் குருக்களுக்கு உதவியாளராகப் பணி புரிந்துள்ளார். இவர் பக்தர்களுக்கு வழங்கிய பஞ்சாமிர்தத்தில் கருத்தடை மருந்தைக் கலந்ததாகச் சந்தேகிக்கப்படுகின்றது. முன்னர் அம்பாறையில் இயங்கிய முஸ்லிம் உணவகமொன்றில் வழங்கப்பட்ட உணவில் கருத்தடை மருந்துக் கலக்கப்பட்டதாகத் தெரிவித்து சிங்கள மக்கள் பெரும் கலவரத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில்தான் தற்போது இந்தச் செய்திகள் வெளிவந்துள்ளன. அரசு பக்கச் சார்பாகவும் மெத்தனமாகவும் நடந்து கொண்டதன் விளைவுகளை நாம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இவற்றுக்கான தீர்வு விரைந்து கிடைக்குமா என்பது சந்தேகமே.



## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் நீர்வேலி கந்தசாமி கோவில், கோண்டாவில், திருநெல்வேலி ஒரு பகுதி, இராஜ வீதி கோப்பாய், கிருஷ்ணன் கோவிலடி, கோப்பாய் கல்வியியற் கல்லூரி, கோப்பாய் இராணுவ முகாம், இராஜேஸ்வரி மண்டபம், பல்கலைக்கழக விடுதி, மானிப்பாய் மருத்துவமனைப்பிரதேசம், கார்கில்ஷ் பூட்சிற்றி மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவலடி, மேதர், மூத்த விநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, சென்பீற்றர்ஸ் தேவாலயம், வேலக்கை பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி, குளப்பிட்டி வராகி பாடசாலை, சாவற்காடு, காக்கை தீவு, மீசாலை, அல்லாரை, வெள்ளம்பொக் கட்டி, கெற்பேலி, பாலாவி, கொடிகாமம், வரணி, மந்துவில், கரம்பைக் குறிச்சி, நாவற்காடு, குடமியன், மிருசுவில், வடக்கு மருதனார்மடம் ஒரு பகுதி, இணுவில் ஒரு பகுதி, உப்புமடம், கோண்டாவில் புகையிரத நிலைய பிரதேசம், தாவடி, சுதுமலை, பத்தனை, மாப்பியன், பாசையூர், மணியந்தோட்டம், உதயபுரம், நெடுங்குளம், கொழும்புத்துறை, பெரியகோவில் பிரதேசம், பழைய பூங்கா வீதி ஒரு பகுதி, தெல்லிப்பழை புற்று நோய் மருத்துவமனை, காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், பலாலி, காங்கேசன்துறை 5 ஆவது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி 5 ஆவது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை வானூர்திப்படை முகாம், மயிலிட்டி 5ஆவது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி வானூர்திப் படைஒய்வுகால விடுதி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கன்று ஈனும் நிலையில் உள்ள பசு மாட்டை இறைச்சிக்காக வெட்டிய மாட்டுத் திருடர்கள்

### வேலணையில் சம்பவம்





யாழ்ப்பாணம்,ஜூன் 1
வேலணைப் பிரதேசத்தில் கன்று ஈனும் நிலையில் உள்ள பசு மாடுகளை இறைச்சியாக்கும் கோரச் செயலில் மாட்டுத் திருடர்கள் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினமும் வேலணை புளியங் கூடல் பகுதியில் மாடுகள் திருடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டது. அதில் கன்று ஈனும் நிலையில் உள்ள பசு மாடு ஒன்றின் கழிவுகளும் காணப்பட்டன. இதனுடைய கழிவுகள் குளக்கரை ஓரங்களிலும் கிணறுகளிலும் போடப்பட்டன. இவ்வாறு இறைச்சிக்காக கன்று ஈனும் நிலையில் உள்ள பசு மாட்டை வெட்டி கோரச் செயல்களில் மாட்டு திருடர்கள் ஈடுபட்டுவருகின்றனர் என்று பொது மக்கள் கவலை தெரிவித்தனர்.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: தீவகத்தில் கால்நடைகள் அதிகமாக வளர்க்கப்படுவதுடன் கட்டாக் காலி மாடுகளும் அதிமாகக் காணப்படுகின்றன.
இந்த நிலையில் பல்வேறு தேவைகளுக்காகத் தீவகத்துக்கு வருபவர்கள் மாடுகளைக் களவாடிச் செல்கின்றனர். மாடுகள் களவாடப்பட்டு இறைச்சி ஆக்கப்பட்டு அதன் தோல், எலும்புகள் பொது இடங்கள், பற்றைகளில் வீசுகின்றனர். களவாடப்படும் மாடுகள் இறைச்சியாக்கப்பட்டு இரவோடு இரவாக கடல் மார்க்கமாகக் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறன. வாழ்வாதாரத்துக்கு வளர்க்கப்படும் மாடுகள் தொடக்கம் கட்டாக்காலி மாடுகள் வரை களவாடப்பட்டு இறைச்சியாக்கப்படுகின்றன. இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியபோதும் பொலிஸார் திருடர்களைத் தேடும் போது அவர்கள் தப்பித்து தலைமறைவாகி விடுகிறார்கள். அதன் பின்னர் சிறிது காலத்தின் பின்னர் மீண்டும் மாடுகளைக் களவாடி இறைச்சியாக்குகிளன்றனர்.
கடந்த மாதம் வேலணை மத்திய கல்லூரியின் விடுதியின் பின்புற மாக, உள்ள பகுதி,சரவணை பகுதி ஆகியவற்றில் மாடுகள் வெட்டப்பட்டதற்கான தோல்,விலா எலும்பு போன்ற பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த நிலையில் நேற்று முன்தினம் இறைச்சிக்காகக் கன்று ஈனும் நிலையில் உள்ள பசு மாட்டைத்திருடர்கள் வெட்டி கோரச் செயலில் ஈடுபட்டமை மன வருத்தத்தைத் தருகிறது.
எனவே இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (ஐ-7,ரி1)

## சுகாதாரப் பணியாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 1
வடக்கு மாகாணத்தில் 45 சுகாதாரப் பணி உதவியாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்தது.
அதற்குரிய நேர்முகத் தேர்வுகள் மாவட்ட ரீதியில் தற்போது நடைபெற்று வருகின்றன.
இதுவரைகாலம் சுகாதாரப் பணியாளர்களாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றியவர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் நிபந்தனையின் அடிப்படையில் பணி புரிந்தவர்கள் முன்னுரிமை அடிப்படையில் இந்த நியமனத்தில் உள்வாங்கப்படவுள்ள னர்.
கடந்த காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றியவர்கள் சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ளபோதும், அவர்களில் தகுதி வாய்ந்தவர்களுக்கு நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றும் மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-7)



## பொது சனத் தொடர்பு பற்றிய முகாமைத்துவச் செயலமர்வு

கொடிகாமம், ஜூன்
மக்களுக்கும் அரச அலுவலர்களுக்கும் இடையிலான பொதுசனத் தொடர்பு முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் முழுநாள் கருத்தரங்காக நடைபெற்றது.
உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இரண்டு நாள்கள் செயலமர்வாக நேற்றும் நேற்றுமுன்தினமும் இது நடைபெற்றது.
இந்த செயலமர்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் உள்ளூராட்சி மன்றத்தினுடைய அலுவலர்களும் கலந்து கொண்டனர்.
இந்த செயலமர்வில் வளவாளர்களாக வடக்கு மாகாண விவசாய அமைச்சு செயலகத்தின் நிர்வாக அலுவலர் எம.சாந்தசீலன் கிழக்கு மாகாணசபை முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவு நிர்வாக அலுவலர் வெ.இராஜசேகர் ஆகியோர் கருத்துரைத் தனர்.
நிறுவன முகாமைத்துவமும் பொதுசன தொடர்பு தொடர்பான அறிமுகம் மற்றும் நிறுவன முகாமைத்துவமும் பொதுசன தொடர்பின் முக்கியத்துவம் தொடர்பாக எம்.சாந்தசீலனும் பொதுமக்கள் உறவில் தொடர்பாடலினை மேம்படுத்தல் மற்றும் தொடர்பாடலின் போது எதிர் கொள்ளும் சவால்கள் தொடர்பான கருத்துக்களை வெ. இராஜசேகர் ஆகியோர் வழங்கினர். (த-159)

### சந்திப்பு:



ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் ஜென் ஹாச் மற்றும் இலங்கைக்கான பணிப்பாளர் ரிம் சுட்டன் ஆகியோர் வடக்கு மாகாண ஆளுநரை நேற்றுச் சந்தித்துள்ளனர். ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் தேவைகள் தொடர்பாக ஆராயப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ- 7)

## யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டு 38ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஜூன் 1
யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டு 38 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று நடை பெறும் என்று நூலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
பொது நூலகம் முன்றலில் காலை 9 மணிக்கு யாழ்ப்பாண மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் தலைமையில் நடைபெறும்.
இதன்போது நூலகத்தின் நிறுவுனர் புத்தூர் சக்கடத்தார் க.மு. செல்லப்பா மற்றும் நூலகம் எரிகிறது என்ற செய்திகேட்டு உயிர் நீத்த சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் வண. கலாநிதி ஹயசிங். சிங்கராயர் டேவிட் ஆகியோரும் நினைவு கூரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட

## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளைமறுதினம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்திலும் , 11 மணி தொடக்கம் ஒரு மணி வரை ஆசீர்வாதப்பர் வீதி சுகாதார கல்வி மையத்திலும், 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நாயன்மார் வீதி சுகாதார கல்வி மையத்திலும் இடம்பெறும்.

4 ஆம் திகதி செவ்வாய்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை யாக்கோவா பாலர் பாடசாலையிலும், 11 மணி தொடக்கம் ஒரு மணி வரை வெயில்கந்த பிள்ளையார் கோயில் செம்மணி வீதியிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கடுக்காய் வீதியிலும் இடம்பெறும்.

6ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை நாவலர் வீதி ஆனைப்பந்தி சந்தியிலும், 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பருத்தித்துறை வீதி உயர்கல்லூரிக்கு அருகாமையிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அரசடி ஜனசக்தி ச.ச.நிலையத்திலும் இடம்பெறும்.

7ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை பழம் வீதி ஞானசோதி ச.ச.நிலையத்திலும், 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை சிவன்புது வீதியிலும் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை மணல்தறை லேனிலும் நடைபெறும்.

10 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை ஜமுனா வீதி கல்வி நிலையத்திலும், 11 மணி தொடக்கம் ஒரு மணிவரை சங்கிலியன் மன்றம் பருத்தித்துறை வீதியிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை செட்டியர் தோட்டப் பகுதியிலும் இடம்பெறும்.

11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை வைமன் வீதி எடிசன் அக்கடமி அருகாமையிலும், 11 மணி தொடக்கம் ஒரு மணிவரை அம்மன் வீதியிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை முத்தமிழ் முன்பள்ளி ஆடியபாதம் வீதியிலும் நடைபெறும்.

12ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை சங்கிலியன் வீதியிலும், 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை கொண்டலடிச் சந்தியிலும், பிற்பகல் 2.30 மணிதொடக்கம் 4 மணி வரை கோவில் வீதி பண்டாரக்குளத்திலும் நடைபெறும்.

13ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை செட்டியார் தெரு நல்லூர் முருகன் சனசமூக நிலையத்திலும் 11 மணி தொடக்கம் ஒரு மணிவரை நல்லூர் குறுக்குத் தெரு சந்தியிலும், பிற்பகல் 2.30மணி தொடக்கம் 4 மணிவரை கைலாயப்பிள்ளையார் கோவிலடி கோயில் வீதியிலும் நடைபெறும்.

14ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை துர்க்கா மணிமண்டபத்தடி கோவில் வீதியிலும் 11 மணி தொடக்கம் ஒரு மணி வரை பண்டாரக்குளத்திலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4 மணிவரை கொண்டலடியிலும் நடைபெறும்.

17ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை சட்டநாதர் கோவிலடியிலும், 11 மணி தொடக்கம் ஒரு மணிவரை அனைத்துப் பகுதியிலும் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது. வளர்ப்பு நாய்களுக்கு உரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும் எனவும் சுகாதார மருத்துவ அதிகாரி ரி.பாலமுரளி தெரிவித்துள்ளார். (ஐ)

## விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி, ஜூன்1

முச்சக்கரவண்டியும் உந்துருளியும் மோதிக்கொண்டதில் உந்துருளியில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் சாவகச்சேரி நகரப்பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்றது.

மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த கனகு கருணாகரன் (வயது-40) அவரது மனைவியான கருணாகரன் சுமதி (வயது-37) மகளான கருணாகரன் சஷ்மி (வயது-3) ஆகியோரே காயமடைந்தனர். காயமடைந்த மூவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

# மன்னார் மரமுந்திரிகைக் காணியை மக்களிடமிருந்து பறிக்க திருகுதாளம்!

### அமைச்சரும் வடக்கு ஆளுநர் ராகவனும் அதிகாரிகளுக்கு அழுத்தம் என்று குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 1

மன்னார் வெள்ளாங்குளத்தில் படையினரின் பிடியிலிருந்தபோது மக்கள் போராடி மீட்டெடுத்த நிலம் மக்களுக்குரியது. மக்களிடமே வழங்கவேண்டும், மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்க முடியாது என்று கூறியதை ஏற்றுக்கொண்ட மர முந்திரிகைக் கூட்டுத்தாபனம், தற்போது அதைக் கையகப்படுத்த பெருந்தோட்ட அமைச்சர் நவீன் திசாநாயக்க மூலமாக மாவட்ட அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். அதற்கு வடக்கு மாகாண ஆளுநரும் துணைபோகின்றார் என்றும் விசனம் தெரிவித்தார்.

"அமைச்சர் நவீன் திசநாயக்கா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஆகியோர் குறித்த நிலத்தை மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனத்துக்கே வழங்குமாறு கடிதம் அனுப்பியுள்ளனர். இதன் காரணமாக அந்தப் பகுதி மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

ஏனெனில் பண்ணையைக் கூட்டுத்தாபனத்திடம் வழங்குமாறு அமைச்சரும் அதன் வருமானத்தை கூட்டுத்தாபனம் எடுப்பதற்கு அனுமதிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநரும் மாவட்ட நிர்வாகத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர். போரால் பாதிக்கப்பட்டோருக்கு உதவித் திட்டம் , முன்னாள் புலிகளுக்கு வாழ்வாதார உதவி என செய்தி வெளியிடும் அரசு புலிகளால் உருவாக்கிய பண்ணை வருமானத்தைக்கூட அவர்களிடம் விடாது தட்டிப்பறிக்கவே முயல்கின்றது."

எனவே இது தொடர்பில் இந்தப் பகுதி மக்களின் வீருப்பத்தைக்கேட்டு வடக்கு மாகாண ஆளுநர் ராகவன் முடிவெடுக்க வேண்டும். மாறாக மக்களின் விருப்புக்கு மாறாக மேற்கொள்ளும் முடிவின் விளைவுகளையும் ஆளுநரே பொறுப்பேற்க வேண்டும் என்று சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

**பின்னணி**

மன்னார் மாவட்டம் வெள்ளாங்குளத்தில் நீண்டகாலமாகப் படையினர் வசமிருந்த வெள்ளாங்குளம் மர முந்திரிகைப் பண்ணை தமது திணைக்களங்களுக்குச் சொந்தமானது என்றும் அந்த நிலங்களை தமது திணைக்களங்களிடமே மீள ஒப்படைக்க வேண்டும் என்றும் மாவட்டச் செயலகத்திடம் மர முந்திரிகைக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு விண்ணப்பத்திருந்தது.

வெள்ளாங்குளத்தில் உள்ள 500 ஏக்கர் நிலத்தில் பிரதேச செயலகத்தின் ஆளுகையின் கீழ் உள்ள 275 ஏக்கர் நிலத்தையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு திணைக்களம் ஏப்ரல் மாதம் முதல் வாரம் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கோரிக்கை விடுத்திருந்தது.

இதன்போது வெள்ளாங்குளம் நிலத்தில் குறிப்பிடப்பட்ட பகுதிகள் அங்குள்ள நிலமற்ற மக்களுக்குப் பகிர்ந்து வழங்குவதற்கு ஏற்கனவே உள்வாங்கப்பட்டுள்ளது.

குறித்த நிலத்தை திணைக்களத்துக்கு ஒப்படைக்க முடியாது என்று மாவட்டச் செயலகம் மறுப்புத் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் குறித்த நிலம் தொடர்பில் இறுதி முடிவை எட்டும் வகையில் ஏப்ரல் 18ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் வெள்ளாங்குளத்துக்கு வந்திருந்தார். இராணுவ அதிகாரி , பிரதேச செயலரும் உடன் வந்திருந்தனர். காணி பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

"இந்தப் பண்ணைகளை படையினர் 10 ஆண்டுகளாக கையகப்படுத்தி வருமானத்தைப் பெற்றபோது திணைக்களங்கள் வாய் மூடியிருந்தன. அந்தக் காணிகள் தமது என்றுகூறி மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வந்த நிலையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்தநேரம் திணைக்களம் வந்து தமது காணி என்றும் அதைத்தம்மிடமேஒப்படைக்க வேண்டும் என்றும் என்ன அடிப்படையில் கூறுகின்றன?. என்ற கேள்வி எழுந்தது. தவிர, குறித்த பண்ணை 1994ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டதே அன்றி இந்தக் கூட்டுத்தாபனம் உருவாக்கவில்லை. இதன் அருகே உள்ள 3 கிராம மக்களும் அப்போது புலிகளால் இந்த பண்ணையை நம்பியே குடியேற்றப்பட்டனர். இதன் பிரகாரம் பிரதேச , மாவட்ட காணிப் பயன்பாட்டுக்குழு மற்றும் அபிவிருத்திச் செயலணி வரை குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்டது.

வெள்ளாங்குளத்தில் 30 ஏக்கர் நிலமும் எவரது ஆளுகையும் இன்றி உள்ளது. திணைக்களம் விரும்பினால் அந்த 30 ஏக்கர் நிலத்தை பொறுப்பேற்று மரமுந்திரிகைப் பயிரிட்டு அபிவிருத்தி செய்யுங்கள் அதன் பின்னர் இது தொடர்பில் ஆராயலாம் என்று கூறப்பட்டது.

அந்தக் கூற்றை ஆராய்ந்த அதிகாரிகள் அதனை ஏற்று 30 ஏக்கரை கையேற்க நடவடிக்கை எடுப்பதாக கூறிச் சென்றிருந்தது. இந்த நிலையில் அதிகாரிகள் திரும்பவும் மல்லுக்கட்ட முற்படுகின்றனர். (த-105)



## கற்பித்தல் சாதனக் கண்காட்சி

கொடிகாமம், ஜூன் 1

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான செயற்பாடுகளுடன் கூடிய கற்பித்தல் சாதனக் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்றது.



பாடசாலை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் என்.திருவாசகன், ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி சி.சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டு கண்காட்சியை பார்வையிட்டனர். ஒவ்வொரு வகுப்பு ரீதியாக மாணவர் செயற்பாடுகளுடன் கூடிய கற்பித்தல் சாதனக் கண்காட்சி இடம் பெற்றது. (ஐ-159)

## சிப் போட் பலகை தூக்கி வீசப்பட்டதில் சிறுவன் காயம்


சாவகச்சேரி.ஜூன் 1

வாகனத்தில் ஏற்றிச் சென்ற சிப் போட் பலகை காற்றால் தூக்கி வீசப்பட்ட தில் அதைப் பிடித்த வாறு பயணித்த சிறுவன் வீழ்ந்து காயமடைந்தான்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் பளை மாசார் வீதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த ஜெயகுலராசா அபிசன் (வயது-17) என்ற சிறுவன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ-9)

# 7 மணி நேர போராட்டத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்ட யானைக்குட்டி

**வவுனியா,ஜூன் 1**
**பாவனையற்ற கிணற்றில் தவறி வீழ்ந்து யானைக் குட்டி 7 மணி நேரப் போராட்டத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டது.**



வவுனியா கனகராஜன்குளம் பெரியகுளம் பகுதியிலுள்ள ஆயுள்வேத வைத்தியசாலை அமையும் பகுதியிலுள்ள பாவனையற்ற கிணற்றில் நேற்றுமுன்தினம் இரவு யானை குட்டி ஒன்று தவறி வீழ்ந்துள்ளது.

இதையடுத்து அருகிலிருந்தவர்களின் உதவியுடன் கிணற்றிலிருந்த பெருமளவு தண்ணீர் வெளியே இறைக்கப்பட்டு ஜே.சி.பி. பாரம் தூக்கியின் உதவியுடன் கனகராஜன்குளம் பொலிஸார், வவுனியா. கிளிநொச்சியைச் சேர்ந்த வனஜீவராசிகள் திணைக்கள அலுவலர்கள், கிராம மக்கள் ஒன்றிணைந்து யானைக் குட்டியை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். நேற்றுக் காலை முதல் இடம்பெற்ற மீட்புப்பணி பிற்பகல் 3 மணியளவில் நிறைவடைந்து யானைக்குட்டி வெளியில் எடுக்கப்பட்டது. மருத்துவப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு யரனைக்குட்டி காட்டுக்குள் விடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)





## நல்லூர் இணக்க சபை அமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 1
நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் தற்காலிகமாக நடைபெற்ற நல்லூர் இணக்க சபை அமர்வு நாளை தொடக்கம் யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் வழமைபோல் நடைபெறும் என்று தவிசாளர் நா.நித்தியானந்தன் அறிவித்துள்ளார். (ஐ)

## மார்க்கண்டு சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூன் 1
மார்க்கண்டு சுவாமிகள் குருபூசை நாளை ஞாயிற்றுக்கிழமை அவர் பிறந்த ஊரான பிரான்பற்றில் நடைபெறவுள்ளது.
பிரான்பற்று மார்க்கண்டு சுவாமிகள் சபை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு சபையின் நிறுவுநர் நவரத்தினராஜா சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. (ஐ)

## மணியம்தோட்ட தூய மீட்பர் ஆலய வருடாந்தத் திருவிழா

கொழும்புத்துறை, ஜூன் 1
மணியம்தோட்டம் தூய மீட்பர் ஆலய(கர்த்தர்)வருடாந்த திருவிழா இயேசுவின் விண்ணேற்பு விழா நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.
இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் நற்கருணைப் பெருவிழா இடம்பெறும்.
நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளதாக பங்குத்தந்தை செபஸ்ரியன் அடிகள் அறிவித்துள்ளார். (ஐ-135)

# யாழ்ப்பாண சமுர்த்திப் பயனாளிகள் 4,500 பேருக்கு உரித்துப் படிவம்

## நாளை வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜீன் 1
யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிய சமுர்த்தி பயனாளிகள் 4 ஆயிரத்து 500 பேருக்கு உரித்துப் படிவம் வழங்கப்படவுள்ளது.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ்ப்பாண மாநகர சபை மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயாகமகே மற்றும் நிதி அமைச்சர் மங்களசமரவீர ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் சமுர்த்தி உதவி பெற தகுதியுள்ளவர்களாக 23ஆயிரத்து 11 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 4 ஆயிரத்து 500 பயனாளிகளுக்கு உரித்துப் படிவம் வழங்கப்படவுள்ளது என மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் க.மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ)



# திருவிழாக்களின் ஒரு பகுதியாக மக்களுக்கு உதவுதல் சிறப்பானது

## வடக்கு முன்னாள் முதலமைச்சர் தெரிவிப்பு


யாழ்ப்பாணம், ஜூன் 1
வெறுமனே விழாக்கள் எடுப்பதும், ஏட்டிக்குப் போட்டியாக நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதும் போரால் பாதிக்கப்பட்ட தற்கால சூழ்நிலையில் வசிக்கும் மக்களுக்குப் போதுமானதல்ல. திருவிழாவின் ஒருபகுதியாகப் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை வளப்படுத்த முயற் சித்தமை போற்றுதலுக்குரியது.
இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
வரணி, சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவில் 12 ஆம் திருவிழா உபயகாரர்கள் கைதடி முதியோர் இல்லத்தில் முதியவர்களை கௌரவிக்கும் நிகழ்வை நேற்று ஏற்பாடு செய்திருந்தனர்.
உதவிப் பொருள்களையும் வழங்கியிருந்தனர். தென்மராட்சிக் கல்வி வலய தமிழ் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே வடக்கு முன்னாள் முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
இன்றைய இளைய சமுதாயம் சிறப்பாகச் சிந்திக்கின்றது. அதனால் தான் இளைஞர்களை, யுவதிகளைக் கூடுதலாக அரசியல் களத்துக்குள் உட்புகுத்த வேண்டும் என்று மீண்டும் மீண்டும் இடித்துரைக்கின்றேன்.
ட்ரோய் மக்களுக்கு வெகுமானமாக மரக் குதிரையைக் கொடுத்து ட்ரோய் நகரைக் கைப்பற்றினார்கள் கிரேக்கர்கள்.
அரச அனுகூலங்களை நாம் தகுந்த சிந்திப்பின் பின்னரே பெற்றுக் கொள்ள வேண்டும். எம்மவர்களின் அரசியல் பின்னணிகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது. எனினும் ஆலயத்தில் அரசியல் பேசுவது அநாகரிகமானது என்பதால் பிறிதொரு சந்தர்ப்பத்தில் அதைப் பற்றிப் பேசலாம். என்றார். (எ)

# இராணுவச் சீருடையை ஒத்த ஆடை விற்றோருக்கு ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம், ஜூன் 1
பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறையில் இராணுவ அதிகாரிகளின் சீருடையை ஒத்த உடைகளை விற்பனைக்காக வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த 11 பேருக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
கடந்த 14ஆம் திகதி பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறையில் உள்ள ஆடை விற்பனை நிலையங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன்போது பருத்தித்துறையில் 11 ஆடை விற்பனை நிலையங்களில் இருந்தும், வல்வெட்டித்துறையில் 3 ஆடை விற்பனை நிலையங்களில் இருந்தும் த்டை செய்யப்பட்ட இராணுவச் சீருடையை ஒத்த ஆடைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அணியக் கூடியவையாக இந்த ஆடைகள் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் 14 பேர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.
பருத்தித்துறையில் கைது செய்யப்பட்டிருந்த 11 பேரின் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்று 11 பேருக்கும் 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு மாதச் சிறைத் தண்டனை விதித்தது. (எ-26)

## புகைத்தலுக்கு எதிரான துண்டறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 1
பன்னாட்டு புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு புகைத்தலால் ஏற்படும் பாதிப்பு தொடர்பான துண்டறிக்கைகள் நேற்றைய தினம் விநியோகிக்கப்பட்டன.
வடமாரட்சி இளையோர் அமைப்பால் இந்த துண்டறிக்கைகள் பருத்தித்துறை ஆதார மருத்துவ மனை வளாகத்தில் உள்ள பொது மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)



# இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் வவுனியாவில் நோன்பு துறப்பு நிகழ்வு





**வவுனியா,ஜூன் 1**
**நோன்பு துறப்பு நிகழ்வுகள் வவுனியா பெரிய பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் மாலை சிறப்பாக இடம்பெற்றன.**

வன்னிப் பிராந்திய இராணுவத்தினரின் ஒழுங்கமைப்பில் சர்வமதத்தலைவர்களின் ஆசியுடன் நோன்பு துறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன. சர்வமதத்தலைவர்களின் ஆசியுரை மற்றும் நினைவுப்பரிசில் வழங்கல், நோன்பு திறத்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன. நிகழ்வில் வன்னிப்பிராந்திய இராணுவத்தினர் , கடற்படையினர் , பொலிஸார் , தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் , வர்த்தக சங்கத்தினர் , வர்த்தகர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



## கள்ளப்பாடு அ.த.கவுக்கு விளையாட்டரங்கு

### நேற்று அடிக்கல் நடுகை

முல்லைத்தீவு, ஜூன் 1
முல்லைத்தீவு கள்ளப்பாடு, அ.த.க பாடசாலையில் விளையாட்டரங்கு அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு பாடசாலை அதிபர் கருணாகரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் அடிக்கல்லை நட்டார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சாந்தி சிறிஸ்கந்தராசாவின் வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாவும், சார்ள்ஸ் நிர்மலநாதனின் வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலர் வி.பகீரதன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-246)



## கற்றல் உபகரணங்களும் ஈருருளியும் வழங்கிவைப்பு

மல்லாவி, ஜூன் 1
முல்லைத்தீவு மூன்றுமுறிப்பு அ.த.க பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் ஒரு மாணவிக்கு ஈருருளியும் வழங்கி வைக்கப்பட்டன. ஈருருளியை இராமலிங்கம் இராஜகரியரும் கற்றல் உபகரணங்களை செ.சுமந்திரனும் அன்பளிப்பாக வழங்கி வைத்தனர்.
பின்தங்கிய பாடசாலைகளுக்கு ஏனையோரும் இவ்வாறான உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார். (ஐ-74)

## முதிரை மரங்களின் குற்றிகள் கடத்தப்பட்டமை முறியடிப்பு



வவுனியா, ஜூன் 1
வவுனியா மரக்காரம்பளையில் மரங்கள் வாகனத்தில் கடத்தப்பட்டதனைப் பொலிஸார் துரத்தித் தடுத்தி நிறுத்தினர். சாரதி வாகனத்தை விட்டுத் தப்பியோட அதில் இருந்த இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் அதிகாலை இது முறியடிக்கப்பட்டது.
வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையின்கீழ்செயற்படும்போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவை மீட்கப்பட்டன.
தாண்டிக்குளம் மரக்காரம்பளை வீதியில் ஓமந்தைப் பகுதியில் டாட்டா படி ரக வாகனம் தடுத்து நிறுத்தப்பட்டது. அதில் விலையுயர்ந்த முதிரை மரக் குற்றிகள் 11 காணப்பட்டன.
அவை மேலதிக விசாரணைகளுக்காக வாகனத்துடன் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன. தப்பிச் சென்ற வாகனச் சாரதியைக் கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
சந்தேகநபர்கள் பல தடவைகள் ஓமந்தை வண்ணாங்குளம் பகுதியிலிருந்து கடத்திச் சென்று நகரிலுள்ள மர வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளது. மேலதிக விசாரணைகளின் பின் சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
சட்டவிரோதமாக மரங்களை வைத்திருக்கும் மரக் காலைகளின் அனுமதிப் பத்திரங்களை உடனடியாகத் தடை செய்யுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார். (த)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன் 1
மாகாண மட்டத்தில் இயங்கும் சிறப்புத்தேவையுடைய அமைப்புக்க்ளின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்றது.
சிறப்புத்தேவையுடையோருக்கான நியதிச்சட்டங்கள், அமைப்புக்களின் செயற்பாடுகள், கிளிநொச்சி சமூக சேவை திணைக்களத்தால் வழங்கப்படும் உதவித் திட்டங்கள் போன்ற விடயங்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டன.
மாகாண சமூகசேவைகள் பணிப்பாளர், மாவட்ட சமூக சேவை அலுவலர்கள் மற்றும் சமூகமட்ட சிறப்புத் தேவையுடையோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ளுஎனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-222)



## மாணவிக்கு ஈருருளி கையளிப்பு

முல்லைத்தீவு, ஜூன்1
முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க பாடசாலையில்கல்விபயிலும்மாணவி ஒருவருக்கு ஈருருளி வழங்கப்பட்டது. வறிய குடும்பத்தைச்சேர்ந்த சசிகரன்சஜித்தா என்றமாணவியின் பாடசாலைக்கான போக்குவரத்து சிரமத்தை நீக்குவதற்காக இந்த உதவி வழங்கப்பட்டது.
முல்லைத்தீவு முள்ளியவளையைபிறப்பிடமாகவும் பிரான்ஸ்நாட்டைவதிவிடமாகக் கொண்ட மறைந்த குபேரினி சசிக்குமாரின் 3 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு அன்னாரது சகோதரர்களால்இந்தஉதவி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

## வவுனியா தாலிக்குளத்தில் இளைஞர் குழு தாக்குதல்

### 7 பேர் மருத்துவமனையில்

வவுனியா, ஜூன் 1
வவுனியா, தாலிக்குளம் பகுதியில் வீடு புகுந்து இளைஞர் குழு கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியதில் 3 பெண்கள் உட்பட 7 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.
இந்தச் சம்பவத்தால் அங்கு பதற்றம் ஏற்பட்டிருந்தது. கடந்த புதன்கிழமை வவுனியா, தாலிக்குளம் பகுதியில் நடைபெற்ற நிகழ்வின் விருந்துபசாரத்தின் போது இரு பகுதியினருக்கு இடையில் தர்க்கம் ஏற்பட்டிருந்தது என்று கூறப்படுகிறது.
இந்த நிலையில் இளைஞர் குழு வாள், கத்தி, பொல்லு, போத்தல் போன்ற கூரிய ஆயுதங்களுடன் நேற்றுமுன்தினம் மாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். 3 பெண்கள் உட்பட 7 பேர் காயமடைந்தனர். வவுனியா பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அடுத்தடுத்து இரண்டு தாக்குதல் சம்பவங்கள் இந்த வாரம் நடத்தப்பட்டுள்ளன. அதில் கர்ப்பிணி உட்பட சிலர் காயமடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் வவுனியாவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. விசாரணை நடக்கிறது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
எனினும் இந்தச் சம்பவங்களில் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த)

## குஞ்சுக்குளம் தேக்கம் கிராமத்தின் குறைகள் விரைவில் தீர்க்கப்படும்

மன்னார், ஜூன் 1
குஞ்சுக்குளம் தேக்கம் கிராமத்தின் குறைகள் விரைவில் நிவர்த்தி செய்யப்படும் என்று நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார்.
நீண்டகாலமாக அபிவிருத்தி இன்றி இருந்த குஞ்சுக்குளம்தேக்கம் கிராமத்துக்கு நேரில் சென்ற நானாட்டான் பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர் மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர்.
இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"குஞ்சுக்குளம் தேக்கம் கிராமமானது 1977 ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட கிராமம். மடுபிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்டது. ஆனால் நானாட்டான் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வருகிறது. இந்த கிராமத்தில் நீண்டகாலமாக அபிவிருத்தி வேலைகள் எதுவும் செய்யப்படவில்லை என்று மக்கள் முறையிட்டமைக்கு அமைய மக்களின் குறைகளை கேட்டறிந்தோம்.
இந்தக் கிரமத்தில் வீதி, குடிதண்ணீர், பேருந்து தரிப்பு நிலையப் பிரச்சனைகள் தொடர்பில் கண்டறியப்பட்டுள்ளன.
இந்த பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண குறித்தொதுக்கப்படும் நிதிகளை பயன்படுத்தி கிராமத்தின் குறைகள் நிவர்த்தி செய்யப்படும்" எனத் தெரிவித்தார். (ஐ-213)

## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

வவுனியா, ஜூன் 1

வசதியற்ற மற்றும் தந்தையை இழந்த பாடசாலை மாணவர்கள் 12 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பால் குமரப்பர் சபாரட்ணத்தின் நிதியில் இந்த உதவிகள் நேற்று வழங்கிவைக்கப்பட்டன.

தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரால் வழங்கிவைக்கப்பட்டது. (ஐ)

## 100 தொழில் முயற்சியாளருக்கு சிறப்பு கருத்தமர்வு

முல்லைத்தீவு, ஜூன் 1

இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கில் சுமார் 100 பேர் வரையில் கலந்து கொண்டு பயன்பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை இது நடைபெற்றது.

யு.ன்.டி.பி. நிறுவனம், சர்வோதய நிறுவனம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியன இணைந்து இதை நடத்தின.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் இளைஞர்களுக்கான சுய தொழில் முயற்சிகள், அவற்றை என்ன வகைகளின் அடிப்படையில் தெரிவு செய்வது, சிறப்பாகக் கொண்டு செல்வது பற்றிய பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும், சுயதொழிலின் ஊடாக முன்னேறிய அனுபவம் வாய்ந்தவர்களால் கருத்தமர்வு நடத்தப்பட்டது. சர்வோதய நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எஸ்.சத்தியகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்டச் செயலக அலுவலர்கள், தேசிய இளைஞர்சேவைகள்மன்ற முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் மற்றும் சர்வோதயம் யு.என்.டி.பி. ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் இணைந்திருந்தனர்.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 100 இளையோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (246)




# மனிதநேயச் செயற்பாடுகளை தடுக்கவே படையினர் தேடுதல்

### மன்னார் பொது அமைப்புக் குற்றச்சாட்டு

தலைமன்னார், ஜூன் 1

பாதிப்புக்கு உள்ளாகும் மக்களுக்காகக் குரல் கொடுத்து வரும் அரசசார்பற்ற நிறுவனத்தின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே, மனிதநேய நிறுவனத்தில் பொலிஸாரும் படையினரும் சோதனை நடத்தியுள்ளனர் என்று அந்த நிறுவனத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.





மன்னார் நகரில் வயல் வீதிப் பகுதியில் இயங்கி வரும் மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் ஒன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.15 மணியளவில் படையினர் திடீரென அலுவலகத்தைச்சுற்றிவளைத்து உட்புகுந்துள்ளனர். அங்கு சோதனையிட்டபோதும் சந்தேகப்படும்படியான தடயம் எதையும் அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. பாதுகாப்புப் படையினர் முதற்கட்டமாக அலுவலகத்தில் பொருத்தப்பட்ட மறைகாணியை செயலிழக்கச் செய்தனர். எதற்காக செயலிழக்கச் செய்யவேண்டும்?.

இதைத் தொடர்ந்து அலுவலகத்துக்குள் புகுந்த படையினர் சோதனையிடப் போவதாக தெரிவித்துள்ளனர்.

அதற்கு நிறுவனப் பொறுப்பாளர் ஜே.ஜட்சன் பிகிராடோ தாங்கள் ஒத்துழைப்புத் தருவதாகத் தெரிவித்து செயற்பட்டனர்.

சுமார் 45 நிமிடங்கள் தேடுதல் நடத்தியும் சந்தேகிக்கும் படியான எதனையும் அவர்கள் மீட்டிருக்கவில்லை. ஆனால் பாதுகாப்புப் படையினர் செயற்பட்ட விதத்தை கவனித்த போது இவர்கள் சோதனையிடும் போர்வையில் தங்கள் கடமைகளை இந்தப் பகுதியில் தடுத்து நிறுத்தும் நோக்குடன் நடந்து கொண்டனர் என்றே கூற வேண்டியுள்ளது. அவர்கள் அச்சுறுத்தும் வகையில் உரையாடிச் செயற்பட்டனர்.

எனவே சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் அலுவலகத்தில் வாய்மூல முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் அலுவலர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று நிலமைகளைப் பார்வையிட்டு தகவல்களைப் பெற்றுச் சென்றுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-60)

## ஆட்சியை பிடிப்பதாக சிலர் கனவு

### விஜேபால

கொழும்பு, ஜூன் 1

சிலர் ஆட்சியை பிடிப்பதற்கு கனவு கண்டு கொண்டிருக்கும்போது ஐக்கிய தேசிய கட்சி நாட்டின் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

காலி, அக்மீமன பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எந்தவொரு முயற்சியையும் முன்னெடுக்காமல் எதிர்கட்சியினர் ஆட்சியை பிடிப்பதற்கு கனவு காண்கின்றனர்.

டிசெம்பர் மாதமளவில் 25 இலட்சத்துக்கு அதிகமான சுற்றிலாப் பயணிகள் இலங்கைக்கு வரலாம். தற்போது இந்தியா, ஜேர்மன் உட்பட சில நாடுகள் இலங்கை பாதுகாப்பான நாடு என அறிவித்துள்ளன- என்றார். (எ)



## முல்லைக் கைத்தொழிலாளரின் குறைகளைக் கேட்டார் பத்திரண

முல்லைத்தீவு, ஜூன் 1

கைத்தொழில் வாணிப பிரதி அமைச்சர் புத்திக பத்திரண முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கைத்தொழிலாளர்களை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் உற்பத்தியாளர்களின் குறைகளை அறிந்து கொள்ளும் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அவர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கினார்.

நிகழ்வில் மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலர் கோ.தனபாலசுந்தரம், கைத்தொழில் முயற்சி அதிகார சபையின் அதிகாரிகள் மாவட்டச் செயலக தொழிற்பயிற்சி அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதற்கு முன்னர் இவர் மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் சென்று அங்குள்ள உற்பத்தியாளர்களின் குறைகளையும் கேட்டறிந்து ஆலோசனைகளையும் கேட்டறிந்தார். (த-ரி3)



## மன்னாரில் நிலைமை தொடர்பில் சமூக அமைப்புகளுடன் ஆராய்வு

### நேற்றைய ஆராய்வில் தீர்மானம்

மன்னார், ஜூன் 1

குண்டுத் தாக்குதல்களின் பின்னர் மன்னாரில் நிலவும் சிக்கல்கள் பற்றி மாவட்டச் செயலர் தலைமையில் எதிர்வரும் 11 ஆம் திகதி சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் புத்தி ஜீவிகளை அழைத்து கலந்துரையாடப்படவுள்ளது.

இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகளையும் இதில் அழைப்பதற்குத் திட்ட மிட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார், வவுனியா இணைப்பாளர் தெரிவித்தார்.

இலங்கையில் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டு வெடிப்புச் சம்பவங்களின் பின்னரான பாதுகாப்புக் கெடுபிடிகள் தொடர்பாகவும் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயும் கலந்துரையாடல் மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உப அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. ஆணைக்குழுவின் மன்னார், வவுனியா பிராந்திய இணைப்பாளர் தலைமையில் இது இடம்பெற்றது.

குண்டு வெடிப்புக்களின் பின்னர் மன்னார் பகுதிகளில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் பார தூரமானதும், மிக முக்கியமாகக் கருதப்படக்கூடியதுமான விடயங்கள் தொடர்பாக மன்னார் சிவில் சமூக மட்ட பிரதிநிதிகள் மனித உரிமை ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு மக்கள் அநாகரிகமான முறையில் சோதிக்கப்படுகின்றனர் என்றும் கருத்துக்களை முன் வைத்திருந்தனர்.

கருத்துக்களைப் பெற்ற பின்னர் கருத்துத் தெரிவித்த மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் தெரிவித்ததாவது:

பொது மக்கள் அரச அதிகாரிகள் மற்றும் ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் சில பகுதிகளில் இடம் பெற்று வரும் கைதுகள் தொடர்பாகவும் சில முஸ்ஸிம் பிரதேசத்தில் இடம் பெறும் நிலம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக எடுத்துரைத்துள்ளனர்.

ஆணைக்குழு இந்த விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ளது. இது பற்றி எதிர்வரும் 11 ஆம் திகதி மாவட்டச் செயலர் தலைமையில் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் புத்தி ஜீவிகளை அழைத்து மாவட்டத்தில் இருக்கும்பிரச்சினைகளை எடுத்து கூறுவதுடன் குறித்த கலந்துரையாடலுக்கு இராணுவ பொலிஸ் உயர் அதிகாரிகளையும் அழைப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (த-56)



# பூஜித், ஹேமசிறியை விசாரிக்க நீதியரசர் அவையை நியமிக்குக

## சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 1

கட்டாய விடுமுறையிலுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை விசாரிப்பதற்கு தலைமை நீதியரசர் உள்ளிட்ட முழுமையான அவையை நியமிக்க வேண்டும் என்று சட்ட மா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வழக்கு நேற்று சிசிர டி ஆப்ரூ, காமினி அமரசேகர மற்றும்முர்துபெர்னாண்டோ ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போதே சட்ட மா அதிபர் தப்புலடிலிவேராஇந்தகோரிக் கையை விடுத்துள்ளார்.

ஏப்ரல்21தாக்குதல்தொடர்பில் புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் மா அதிபர்மற்றும்முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியிருந்த போதிலும், அதனை தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்காமைக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று சட்ட மா அதிபருக்கு உத்தர விட வேண்டும் என்று கோரி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப் பட்ட தாக்குதலில் உயிரிழந்தோரின் உறவினர்கள் உள்ளிட்டோர்இந்தமனுவை தாக்கல் செய்துள்ளனர். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மனுவில் குறிப் பிடப்பட்டுள்ளதால், முழுமை யான அவையை நியமிக்க வேண்டும்என்றுசட்டமாஅதிபர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் முன்னிலையான மூத்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பர்சானா ஜமில் மன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கோரிக்கையை பரிசீலித்த நீதிபதிகள் குழாம், மனுவை தலைமை நீதியரசருக்கு அனுப்புவதற்கு தீர் மானித்தது. மனு மீதான விசாரணையை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை ஒத்தி வைப்பதற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

## ஞானசாரருக்கு எதிரான மனு 22 ஆம் திகதி விசாரணைக்கு

கொழும்பு, ஜூன் 1

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கான ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையை கட்டாயத் தண்டனையாக உத்தரவிடக் கோரி காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் 22ஆம் திகதி விசாரணைக்கு அழைப்பதற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நீதியரசர்களான சிசிர டி ஆப்ரூ, முர்து பெர்னாண்டோ மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

காணமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவை அச்சுறுத்திய சம்பவத்தில் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு 6 மாதங்களில் நிறைவடையும் வகையில் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

அது சட்டவிரோதமானது என்றும் கட்டாய தண்டனையாக உத்தரவிடக் கோரிக்கை விடுத்தும் சந்தியா எக்னெலிகொட இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். (எ)

## குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டோரின் 45 ஆம் நாள் நிகழ்வு

மட்டக்களப்பு, ஜூன் 1

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிர் நீத்த உறவுகளின் 41ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மயிலங்கரச்சை கண்ணகியம்மன் ஆலயத்தில் உயிரிழந்த உறவுகளின் ஆத்மா சாந்தி வேண்டி சுடர் ஏற்றப்பட்டு, பூஜை வழிபாடுகள் இடம்பெற்று நினைவுப் பேருரைகளும் இடம்பெற்றன.

மயிலங்கரச்சை கிராம மக்களின் ஏற்பட்டில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேத்திரன், கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் கி.துரைராசசிங்கம், கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் மா.நடராசா, பிரதேச சபை உறுப்பினர்கள், இந்து மற்றும் பௌத்த மதங்களின் மதகுருமார் கிராம பொது மக்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-46)

## ராஜிதவை கைது செய்ய கோரிக்கை!

கொழும்பு, ஜூன் 1

நெவில் பெர்னாண்டோ தனியார் வைத்தியசாலைக்கு 400 மில்லியன் ரூபாவை அரசு ஊடாக சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன பெற்றுக்கொடுத்தமை பெரும் மோசடியாகும். இந்த குற்றச்சாட்டுதொடர்பில் அமைச்சர் ராஜித சேனாரத்ன கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகசந்திப்பின் போது அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் ஹரித்த லுத்கே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (எ)


யாழ்ப்பாணம்


மட்டக்களப்பு

## ஊடகவியலாளர் நடேசனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 1

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாண நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு அருகில் ஊடகவியலாளர்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபிக்கு அருகில் மாலை 4.30 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு சுடரேற்றி தூபிக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் ஐயாத்துரை நடேசனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தீபச்சுடர் ஏற்றப்பட்டதனைத் தொடர்ந்து அன்னாரது ஆத்மா சாந்திக்காக மௌன அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் பிரதி தவிசாளரும், மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான இந்திரகுமார் பிரசன்னா, மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் எஸ்.சத்தியசீலன், மட்டக்களப்பு மாவட்ட சிவில் அமைப்புக்கள் ஒன்றியத்தின் தலைவர், மாநகரசபை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஊடகவியலாளரான ஐயாத்துரை நடேசன் கடந்த 2004 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி மட்டக்களப்பில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

(ஐ-37,46).

## களனி பல்கலையின் சில பீடங்களை திறக்க முடிவு

கொழும்பு, ஜூன் 1

களனி பல்கலைக்கழகத்தின் சில பீடங்கள் எதிர்வரும் ஜூன் 3ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று களனி பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த அனைத்து பீடங்களும் மறு அறிவித்தல் வரும் வரையில் மூடப்பட்டது. களனி பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நிலையில் வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடம், விஞ்ஞான பீடம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பீடங்கள் மீண்டும் திறக்கப்பட உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தள்ளிவீழ்த்திவிட்டு பணம் கொள்ளை; மறைகாணி உதவியுடன் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாண வங்கி ஒன்றில் அடைவு வைத்துவிட்டு வீடு திரும்பிய தாயாரைப் பின்தொடர்ந்த இரு இளைஞர்கள், அவரைத் தள்ளி வீழ்த்திவிட்டு 37 ஆயிரம் ரூபா பணத்தையும் அலைபேசியையும் பறித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். எனினும் அவர்கள் செலுத்திச் சென்றனர் என்று கூறப்படும் உந்துருளி இலக்கம் மறைகாணி ஒன்றில் பதிவாகியுள்ளது.

அது பற்றி விசாரணை நடக்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் சிவன் அம்மன் கோவிலடி மணல்தறை ஒழுங்கையில் நேற்று மதியம் இடம்பெற்றது.

அங்கு வசிக்கும் குடும்பத் தலைவி பணத் தேவை கருதி தனது நகையை யாழ்ப்பாண நகரிலுள்ள வங்கி ஒன்றில் அடைவு வைத்து 37 ஆயிரம் ரூபா பணத்தையும் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசி என்பனவற்றை பணப்பையில் வைத்து ஈருருளியின் கூடையில் வைத்தவாறு வீடு நோக்கிப் பயணித்துள்ளார்.

இந்தநேரம் உந்துருளியில் பின் தொடர்ந்த இரு இளைஞர்கள் ஈருருளியின் கூடையிலிருந்த பணப் பையை எடுத்ததோடு, தாயாரையும் உதைத்து வீழ்த்தி விட்டுத் தப்பியோடினர்.


அந்த வீதி வழியாக வந்த ஒருவர் இந்தச் சம்பவத்தை அவதானித்து கொள்ளையர்களை சுமார் 2 கிலோமீற்றர் தூரம் விரட்டிச் சென்றுள்ளார்.

கொள்ளையர்கள் தப்பிச் சென்று விட்டனர். எனினும் அவர்கள் BGH. 9328 என்ற இலக்கமுடைய 'வெகோ' ரக உந்துருளியில் பயணித்தனர் என்று மறைகாணி ஒன்றில் பதிவாகியுள்ளது.

அதனைப் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. பணப் பையைப் பறிகொடுத்த குடும்பத் தலைவி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த இலக்கத்தின் மூலமாக கொள்ளையர்களை இனம் காணும் பணி இடம்பெறுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(த-105)



# கடவுச்சீட்டு கட்டணங்கள் இன்றுமுதல் அதிகரிக்கும்

கொழும்பு, ஜூன் 1

2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின்படி கடவுச்சீட்டுக்கான கட்டணம் இன்று முதல் அதிகரிக்கப்படவுள்ளது என்று குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.




சாதாரண சேவை கடவுச்சீட்டை பெறுவதற்காக இதுவரை அறவிடப்பட்ட 3 ஆயிரம் ரூபா நாளை முதல் 3 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது என்று குடிவரவு குடியகல்வு திணைக்களம் கூறியுள்ளது. ஒருநாள் சேவைக் கட்டணமாக இருந்த 10 ஆயிரம் ரூபா நாளை முதல் 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது.

16 வயதுக்குட்பட்டவர்களுக்கான சிறப்புக் கடவுச்சீட்டுக்குச் சாதாரண சேவையின் போது 2 ஆயிரம் ரூபாவில் இருந்து 2 ஆயிரத்து 500 ரூபாவாகவும், ஒருநாள் சேவையின் போது 5 ஆயிரம் ரூபாவில் இருந்து 7 ஆயிரத்து 500 ரூபாவாகவும் அதிகரிக்கப்படும் என்றும் குடிவரவு - குடியகல்வு திணைக்களம் கூறியுள்ளது. (ஏ)

# மாணவர்களில் 30 வீதமானோர் இரத்தச் சோகையால் பாதிப்பு!

*கொழும்பு, ஜூன் 1*

***நா**ட்டில் பாடசாலை மாணவர்களுள் 80 சதவீதமானோர் சம போசாக்கு நிறைந்த உணவை உட்கொள்வதில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களுள் 30 சதவீதமானோர் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.*

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் போசாக்கு சிறப்பு மருத்துவர் திருமதி.ரேனுகா ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இது இந்த பிள்ளைகளின் வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பாக அமைந்துள்ளது.

பாடசாலைகளில் தரம் 5 மாணவர்களில் 7 சதவீதமும் தரம் 10 இல் 10 சதவீத மாணவர்களும் இந்த நிலைமைக்கு உள்ளாகும் நிலை உள்ளது. பாடசாலை மாணவர்களுள் 30 சதவீதமானோர் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

சிறுபிராயத்தில் இருந்தே சம போசாக்குடன் உணவை வழங்குவது மூலம் பிள்ளைகளை தொற்றா நோயிலிருந்து பாதுகாக்க முடியும். பாடசாலைக்கு மாணவர்கள் வரும் பொழுது அவர்களுக்குத் தேவையான உணவைக் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் போசாக்கற்ற உணவுகளையே அவர்கள் கொண்டு வருகின்றனர்.

1/3 பகுதியினர் இரும்புச்சத்து குறைப்பாடுகளுடன் உள்ளதை நாம் கண்டறிந்துள்ளோம். இரும்புச் சத்து செறிந்த உணவுப் பொருட்களை உட்கொள்ளாமையே இதற்கு காரணம். வளரும் பருவத்தில் இவ்வாறான உணவு வகை மிகவும் முக்கியமானதாகும். பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு உணவை வழங்கும் பொழுது கூடுதலான கவனம் செலுத்தவேண்டும்.

நமது நாட்டில் உணவில் சோற்றை பெருமளவில் உட்கொள்வதை நாம் காணமுடிகிறது.

சோற்றுடன் புரோட்டின் சத்துள்ள உணவுகளை உட்கொள்வது மிகவும் அவசியமாகும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அது மட்டுமன்றி நாளாந்தம் பிள்ளைகளை விளையாட்டுக்களில் ஈடுப்படுத்துவது மிகவும் முக்கியமான தாகும். - என்றார். (ஏ)

# கணினி மயமாகும் தொடருந்து நுழைவுச்சீட்டு

கொழும்பு, ஜூன் 1

தொடருந்துத் திணைக்களம் புதிய கணினி மயப்படுத்தப்பட்ட நுழைவுச் சீட்டுக்களை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. அதனால் தற்போதுள்ள நுழைவுச்சீட்டுக் கட்டணத்தைவிட மேலதிகமாக 10 ரூபாவைச் செலுத்த நேரிடும் என்று தொடருந்து உதவி வர்த்தக அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் புதிய நுழைவுச் சீட்டுக்கள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)



# கைவிரல் அடையாளமும் அடையாள அட்டைகளில்

## கவனம் செலுத்தப்படுகின்றது என்கிறார் ஆள்பதிவு திணைக்களம் ஆணையாளர்

கொழும்பு, ஜூன் 1

நாட்டு மக்கள் அனைவரினதும் தேசிய அடையாள அட்டையில் அவரவர் கைவிரல் அடையாளத்தை உள்ளடக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பை மேலும் உறுதி செய்யும் நோக்கில் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று ஆள்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

பழைய தேசிய அடையாள அட்டையில் நிலவிய பல குறைபாடுகள் புதிய தேசிய அடையாள அட்டையின் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. புகைப்படத்தை மாற்றுதல் அல்லது முத்திரையை நீக்கி தகவல்களை மாற்றுதல் போன்றவற்றை புதிய அடையாள அட்டையில் செய்ய முடியாது.

இருப்பினும் தேசிய அடையாள அட்டை தொடர்ந்தும் நபர்களின் தகவல்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டது. எதிர்காலத்தில் டீ.என்.ஏ தரவு அல்லது கைவிரல் அடையாளம் போன்றவை இயற்கை தரவுகள் பயன்படுத்தப்படவுள்ளன. இவற்றில் கை விரல் அடையாளத்தை பெற்றுக்கொள்வதற்கு தற்பொழுது சட்டரீதியில் அனுமதி கிடைத்துள்ளது என்று ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஏ)

# விசாரணை சரியானவாறு நடக்க ரிசாத் பதவி விலகுவது அவசியம்

## *சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்*

கொழும்பு, ஜூன் 1

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை. அவை நாடாளுமன்றில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் கிடையாது. விசாரணைகள் முன்னெடுப்பதற்கு ரிசாத்தின் அரசியல் அதிகாரம் தடையாக இருக்கும். அதனால் அவர் பதவியில் இருந்து விலக வேண்டும்.



இவ்வாறு பெருநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமயவின் தலைவருமான சம்பிக ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடாளுமன்றத்தில் இரு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் சமர்பிக்கப்பட்டுள்ளன. அரசுக்கு எதிராக ஒன்றும், அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக ஒன்றும் சமர்பிக்கப்பட்டுள்ளது. அவற்றில் அரசுக்கு எதிராக ஜே.வி.பி சமர்பித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முதலில் விவாத்துக்கு எடுத்துக்கொள்ளும் நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம்.

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கும் பயங்கரவாத தாக்குதல்களுக்கும் தொடர்பு இருப்பதாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டுள்ளதோடு, அந்த காரணங்கள் அவருக்கு எதிராக சமர்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத்தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலனவை உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுக்களாகும்.

ஒருபுறம் கைது செய்தவர்களை விடுவிக்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப் பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னொரு பக்கம் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு நிதி வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயம் கிடையாது. பொலிஸார் மற்றும் புலனாய்வுத்துறையினரால் விசாரிக்கப்பட்டு நீதிமன்றத்துக்கு ஊடாகவே இந்த விடயம் கையாளப்பட வேண்டும்.

ரிசாத் பதியுதீன் அமைச்சு பதவியில் இருக்கும்போதோ அல்லது அரசில் அங்கம் வகிக்கும் போதோ இது தொடர்பில் விசாரணைகளை நடத்த முடியுமா என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். விசாரணைகள் நடத்தப்படும் போது அவர் தனது அரசியல் அதிகாரங்களை பயன்படுத்துவாரா? அல்லது அவரது அரசியல் பலம் விசாரணைகளுக்கு தடையாக இருக்குமா? என்ற கேள்விகள் எழுகின்றன.

அதனால் ரிசாத் பதியுதீன் அமைச்சு பதவியிலிருந்து தானாக விலக வேண்டும். இந்த விசாரணைகளை பொலிஸாரிடம் வழங்கி, அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை வெகு விரைவாக விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். அதற்கமைய அரசும், சட்டம் ஒழுங்கு பிரிவும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அதற்கேற்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இல்லையென்றால் அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ஏ)

# மத்ரஸாவை தடை செய்யக்கோரும் கருத்து விரோதத்தை உண்டாக்கும்

## கிழக்கு முன்னாள் முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

இலங்கையிலுள்ள அனைத்து மதங்களும் தத்தமது மதம் சார்ந்த கல்விகளைச் சிறுபிராயம் முதல் குழந்தைகளுக்கு வழங்கிவருகின்றனர். அவ்வாறே முஸ்லிம்களின் மார்க்கக் கல்வியும் மத்ரஸாக்கள் மூலமாக வழங்கப்படுகின்றது. இந்தக் கல்விப் போதனைகள் அவர்களை நல்வழிப்படுத்தி நல்ல குடிமக்களாக வாழ வழிகோலுகின்றன. முஸ்லிம்களது மார்க்கக் கல்வியைப் பறிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நாம் துணைபோக முடியாது. பிரதான எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மத்ரஸாக்களை கல்வி அமைச்சின் கொண்டு வராமல் அவற்றைத் தடை செய்யுங்கள் எனக் கூறியிருப்பது அவரது அப்பட்டமான இனவிரோதக் கருத்தாகவே இருக்கின்றது.

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் உள்ளதாவது:

மத்ரஸாக்களை கல்வி அமைச்சு மற்றும் முஸ்லிம் கலாசார அமைச்சு ஆகியவற்றின் கீழ் கொண்டு வருவது தொடர்பாகத் தலைமை அமைச்சர் நடவடிக்கை எடுத்து வருகின்றார். இந்த விடயம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே பந்துல குணவர்த்தன மேற்கண்ட கருத்தை முன்வைத்தார்.

மதங்களுக்கிடையிலான ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் நஞ்சை ஊட்டும் இவ்வாறான கருத்துகள் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். அரசு மத்ரஸாக்களைப் பாரமெடுத்து அவற்றை உரிய முறையில் செயற்படச் செய்ய அவற்றுக்கான பொருளாதார மற்றும் பௌதீக வள உதவிகளை நல்குமாயின் நாம் அவற்றை வரவேற்கலாம். அதைவிடுத்து ஒரு மதத்தின் மார்க்கக் கல்வியைச் சீர்குலைக்கும் நோக்குடன் அவற்றைத் தடை செய்ய முயலுமானால் அவற்றுக்கு இடமளிக்க முடியாது. முஸ்லிம்களின் மார்க்கக்கல்வி விடயத்தில் அரசு அவதானமாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். - என்றுள்ளது. (ஏ)

# தொடருந்து பொதிகள் சேவை இன்றுமுதல் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 1

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை அடுத்து நிறுத்தப்பட்டிருந்த தொடருந்துப் பொதிகள் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகின்றது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு காரணங்கள் காரணமாக, தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த தொடருந்துகளில் பொதிகளை கொண்டு செல்லும் நடவடிக்கையானது, எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தொடருந்துத்திணைக்களம்தெரிவித்துள்ளது. பொதிகளை பொறுப்பேற்கும் ரயில் நிலையங்களில் பொதிகளை சோதனையிடுவதற்காகசிறப்புப்பாதுகாப்புவேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## வற் வரியைக் குறைப்பது தொடர்பில் அரசு ஆராய்வு

வற் வரி மற்றும் மறைமுக வரியைக் குறைப்பது தொடர்பாக அரசு கவனம் செலுத்துகின்றது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நதுன் குருகே தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுமக்களுக்கு நிவாரணம் அளிப்பதே இதன் முக்கிய நோக்கம். நேரடியான வரியில் கூடுதலான தொகையை வசூலிக்க முடியுமாயின் அதன் மூலம் பொதுமக்கள் மீதான வரி சுமையை குறைத்துக்கொள்ள அரசு எதிர்பார்க்கின்றது. இவ்வாறு வற் வரியை குறைப்பதற்கு அரசுக்குப் பெருமளவு நிதி அவசியம். - என்றார். (எ)

## மக்கள் நல திட்டங்களை எதிர்த்து எனது அரசியலைத் தகர்க்க முயற்சி

### கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

கல்வித் துறையில் முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள் நல திட்டங்களுக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்து, தனது அரசியல் தோற்றத்தை தகர்ப்பதற்கான முயற்சிகளை ஒரு சிலர் முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பட்டதாரிகளை இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்வாங்கும் திட்டத்தின் கீழ் ஆள்ச்சேர்க்கப்பட்ட அபிவிருத்தி அலுவலகர்கள் 592 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு பத்தரமுல்லையில் அமைந்துள்ள அபேகம அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் தமிழ் மற்றும் சிங்கள மொழிப்பிரிவில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைச் சீருடைத் துணி வழங்கலில் காணப்பட்ட ஊழல் மற்றும் மோசடிகளை முற்றாக நீக்கி மாணவர்களின் சீருடையை வைத்து எவரும் மோசடிகளில் ஈடுப்படாமல் இருப்பதற்காகவே பாடசாலைச் சீருடைத் துணிக்குப் பதிலாக வவுச்சர் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. சீரான ஒழுங்கு முறைமைக்கு அமைவாகவே குறித்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறைமையின் ஊடாக பல கோடிக்கணக்கானபணத்தை அரசுக்கு சேமிக்க முடிந்தது.

அதேபோன்று சுரக்சா காப்புறுதித் திட்டம் தொடர்பாக பலரும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். எனினும் கல்வி அமைச்சு சுரக்சா காப்புறுதித் திட்டம் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்படுவில்லை. அதற்கு மாறாக சுரக்சா திட்டத்தைத் தனியார் துறைக்கு வழங்கும் தீர்மானத்தை அரசதலைவர் நியமித்த மேன்முறையீட்டு விசாரணை குழுவே எடுத்தது.

பாடப்புத்தகங்களில் அமைச்சரின் வாழ்த்துச் செய்தி உட்சேர்க்கப்பட்டமை தொடர்பாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. எனினும் பாடப்புத்தக வாழ்த்துச் செய்தி முறைமை முன்பு இருந்த கல்வி அமைச்சர்களின் காலத்திலும் நிலவியது தான். அரசதலைவரின் வாழ்த்துச்செய்தியும்கடந்த காலங்களில் பாடப்புத்தகங்களில் உட்சேர்க்கப்பட்டிருந்தது. எனினும் அமைச்சரின் வாழ்த்து செய்தி உட்சேர்க்கப்பட்டமைக்காக மேலதிக நிதி செலவிடப்படமாட்டாது.

அதேபோன்று நவீன தொழில்நுட்ப முறைமையை மாணவர்களுக்கு வழங்கும்நோக்குடன் டெப் கணிணி வழங்கும் திட்டத்துக்கும் பல்வேறு இடையூறுகளும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனவே கல்வித் துறையில் முன்னெடுக்கப்படும் மக்கள் நல திட்டங்களுக்கு இடையூறுகள் ஏற்படாமல் இருந்திருந்தால் தற்போதைக்கும் பார்க்க எம்மால் வேகமாகச் செயற்பட முடிந்திருக்கும். எனவே பின்லாந்து போன்ற நாடுகளில் காணப்படும் அபிவிருத்தி அடைந்த கல்வித் தரத்தை இலங்கையிலும் உள்வாங்க வேண்டும்- என்றார். (த)



## மாவட்ட அபிவிருத்திக் குழுவில் தமிழர்கள் ஒருவரேனும் இல்லை!

### இந்த அநியாயங்களை நீக்குமாறு மாகாண முன்னாள் உறுப்பினர் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 1

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுஇணைத்தலைவர்களாக மூன்று முஸ்லிம்கள்நியமிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 74வீதம் தமிழர்கள் வாழ்கின்ற நிலையில், என்ன அடிப்படையில் 3 பிரதிநிதிகளையும் சகோதர முஸ்லிம் இனத்தவர்களிலிருந்து தெரிவு செய்தீர்கள்? என்றுகேள்வியெழுப்பப்பட்டுள்ளதோடு, அதை மாற்றியமைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தருமான இரா.துரைரெத்தினம் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலர் பிரிவுகளுக்குமான மாவட்ட அபிவிருத்தி தொடர்பான குழுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்குஇணைத்தலைவர்களாக அமைச்சர் அமீர்அலி, அமைச்சர் மௌலானா, முன்னாள் கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் ஹாபீர் நசீர்அகமட் என மூன்று முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அண்ணளவாக 74வீதம் தமிழர்களும், 23வீதம் முஸ்லிம்கள், ஒரு வீதம் சிங்களவர்கள் இருக்கும் நிலையில், 23வீதம் உள்ள முஸ்லிம்களுக்கு எவ்வாறு மூன்று பிரதிநிதிகளை நியமிக்க முடியும்? முப்பது வருட போரில் தமிழ்ப் பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. மண்முனை மேற்கு(வவுணதீவு), மண்முனை தென்மேற்கு(பட்டிப்பளை), போரதீவுப்பற்று (வெல்லாவெளி), ஏறாவூர் பற்று(செங்கலடி), கோறளைப்பற்றுதெற்கு (கிரான்), கோறளைப்பற்று வடக்கு (வாகரை) இவைமட்டுமின்றி மீளக்குடியமர்வுக்கான அபிவிருத்தி வேலைகள், போராளிகள் தொடர்பான அபிவிருத்தி, கல்வி, காணி, சுகாதாரம், மீன்பிடி, நியமனம், பதவிஉயர்வு, கலாசார சீரமைப்புக்கள், விதவைகள் மறுவாழ்வு, இளையோர் தொழில் வாய்ப்பு, கைதிகள் விடுதலை, கால்நடை, விவசாயம் இவை அனைத்தும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் பிரதேசங்கள் மிக விரைவாக அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளன.



இவ்வளவு வேலைகளைச் செய்யவேண்டிய நிலையிலும் இந்தப் பகுதிகள் இன்னும் வறுமையில்உள்ளன.

#### புறக்கணிப்பு

இவை தமிழ்ப் பகுதிகளாக இருப்பதனாலும் 74 வீதம் தமிழர்கள் உள்ளதனாலும் தமிழ்ப்பகுதிக்கு அபிவிருத்தி வேலையில் முன்னிலைவழங்கப்படவேண்டும். இவைமட்டுமின்றி முப்பது வருடகாலமாக இந்தப் பகுதிகளுக்கு பல விடயங்களில் புறக்கணிப்பு நிகழ்த்தப்பட்டன. இந்த நிலையில் இந்த மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்கு மூன்று முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டனர் என்பது நீதியானதல்ல.

எனவே இந்த நியமனத்தை நிறுத்தித் தமிழர்களை இணைத் தலைவர்களாக நியமிக்க வேண்டும். இதே வேளை சில முஸ்லிம் பிரதேச செயலர்கள் பதவி வகிக்கும் பிரிவுகள் அபிவிருத்தியில் ஓரளவு நிறைவு கண்டுள்ளன.

#### பக்கச்சார்பாக செயற்பட்டுள்ளனர்

இந்தமாவட்டத்தைப்பொறுத்தவரையில் முஸ்லிம்கள் கடந்த 25வருட காலத்தில் அபிவிருத்தி குழு இணைத்தலைவர்களாக இருந்து கொண்டு தங்களது அதிகாரத்துக்கு ஏற்றவாறு அரசில் உள்ள அனைத்து அரசியல் பலம், ஏனைய வளங்களைப் பயன்படுத்தி ஒரு இனம் சார்பாக முஸ்லிம் பிரதேசங்களுக்கு மட்டும் அபிவிருத்தி வேலைகளைச் செய்து பல தமிழ்ப் பகுதிகள் சுடுகாடாக மாறுவதற்கு வித்திட்டவர்கள் முஸ்லிம் அபிவிருத்திக் குழு இணைத்தலைவர்கள் என்பதை தமிழர்கள் மறப்பதற்கில்லை.

#### கட்சி ஆதிக்கத்தில் மைத்திரி, ரணில்

அரசதலைவரும் தலைமை அமைச்சரும் தத்தமது கட்சியின் கீழ் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதற்காக இருவரும் மாறிமாறி முஸ்லிம்களை அபிவிருத்திக் குழு இணைத்தலைவர்களாக நியமித்து தமிழர்களை புறம் தள்ளி கட்சி ரீதியான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றனர்.

#### உரிமையுடன் அபிவிருத்தி

கடந்த காலத்தில் தமிழர்களுக்குத் தேவை உரிமையா, சலுகையா என்னும் விடயத்தில் உரிமையுடன் நின்ற தமிழர்கள் இன்று உரிமையுடன் சேர்த்து அபிவிருத்தி வேலைகளும் இந்த மாவட்டத்தில் இடம்பெறவேண்டும். என போட்டி போட்டு தமிழ்கட்சிகளும், அமைப்புகளும், மக்கள்நலன்விரும்பிகளும் முனைப்புடன் செயற்பட முனையும் போது கடந்த காலத்தைப் போல் அர்சியல் ரீதியாக தமிழ் மக்கள் பாதிப்படக் கூடியவாறு எந்தச் செயற்றிட்டங்களையும் தமிழர்களும், தமிழ்ப் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், ஏற்றுக் கொள்ளப் போவதும் இல்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

அமைப்புக்கள், அரசியற்கட்சிகள் அனைவரும் இந்த விடயங்கள் பற்றி அரச தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் எழுத்து மூலமாக கோரிக்கைகளை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்-என்றார். (த-40)

## சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு ஆணைக்குழுவால் அழைப்பாணை

கொழும்பு, ஜூன் 1

சுகாதார அமைச்சின் சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரியந்த அத்தபத்துவுக்கு அரச நிறுவனங்களின் ஊழல் மோசடிகளை கண்டறியும் அரச தலைவர் ஆணைக்குழுவில் முன்னிலையாக வேண்டும் என்று அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி பகல் ஒரு மணிக்கு முன்னிலையாக வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாதம் ஒன்றுக்கு 50 மில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகை அரசால் மாலபே நெவில் பெர்ணாண்டோ மருத்துவமனைக்கு செலுத்தப்படுகின்றது என்று அரச தலைவர் ஆணைக்குழுவால் கண்டறியப்பட்டுள்ளது. அரசால் கையகப்படுத்தப்படாத நிறுவனம் ஒன்றுக்கு அரசு பணம் செலுத்துவதால் ஏற்பட்டுள்ள நிதி மோசடி சம்பந்தமாக வாக்குமூலம் வழங்குவதற்காகவே சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரியந்த அத்தபத்துவிற்கு ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மைத்திரியை மறைமுகமாக தாக்குகிறார் மகிந்த ராஜபக்ச

## ஒரு சதவீதம்தான் பிரச்சினை

**கொழும்பு, ஜூன் 1**

**நாட்டில் தற்போது நிலமை 99 சதவீதம் நன்றாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டாலும் ஒரு சதவீதம் விடுபட்டுள்ளது. அந்த ஒரு சதவீதத்தைப் பற்றியே தற்போது எனக்கு கவலைகள் இருக்கின்றன. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

வெளிநாட்டுத் தூதுவர்களை அரச தலைவர் மைத்திரிபால அண்மையில் சந்தித்துப் பேசினார். இதன் போது இலங்கையின் பாதுகாப்பு நிலமைகளில் 99 சதவீதம் நன்றாக இருக்கின்றது என்று கூறியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், தங்காலையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மகிந்த மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தகவலை வழங்கும் புலனாய்வு முகவர் அமைப்புக்களை ஒரே கட்டமைப்புக்குள் கொண்டுவர வேண்டும். இவற்றையே அனைத்து நாடுகளும் மேற்கொள்கின்றன. தற்போதுள்ள அரசும் இவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும். பொதுமக்களின் தேசிய பாதுகாப்பைப் பற்றிய முக்கியமான தகவலை வெளிப்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாது. உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு முன்னரும் பின்னரும் இடம்பெற்ற நிலமைகளால் ஏமாற்றமடைந்துள்ளேன். மேலும் மிலேனியம் சிற்றி தொடர்பான விடயங்கள் வெளியாகியமையால் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். இதில் ஒருவர் மாத்திரம் நாட்டை விட்டு வெளியியேறியிருந்தமையால் தப்பிவிட்டார்.

புலனாய்வாளர்கள் விடயம் தொடர்பாக நாம் கூடுதல் கவனமாக இருக்க வேண்டும். தனிப்பட்ட அரசியல் ஆதாயங்களுக்காக புலனாய்வு பிரிவினரின் தகவல்களைக் கோருவது நாட்டின் தேசிய பாதுகாப்பை பாதிக்கும் - என்றார். (ஒ.5)



# ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக யாழ்ப்பாணத்திலும் போராட்டம்

## தொழுகையின் பின்னர் நடந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 1

இலங்கையில் இடம்பெற்ற தொடர் தற்கொலைத் தாக்குதலின் பின்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக முஸ்லிம் மக்கள் நாடு முழுவதும் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். புத்தளம், நீர்கொழும்பை தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண நகரில், புதுப்பள்ளிச் சந்தியில் ஜும்மா தொழுகையின் பின்னர் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி மேற்கொண்;ட தொடர் தற்கொலைத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் தமிழ் மற்றும் சிங்கள மொழியில் எழுதிய பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர். (ஒ.5.ரி1)

தெரிவுக்குழு விசாரணை

# தேசிய பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுத்தாது

## அறுதியாகக் கூறுகிறார் ஜயம்பதி

கொழும்பு, ஜூன் 1

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலோ அல்லது புலனாய்வுப் பிரிவின் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலோ விசாரணைகள் இடம்பெறாது. சர்ச்சைக்குரிய சாட்சிகள் பகிரங்கப்படுத்தப்படமாட்டாது. பாதுகாப்புக்குப் பங்கத்தை ஏற்படுத்தும் விசாரணைகளை முன்னெடுக்க இடமளிக்க போவதில்லை என்று தெரிவுக்குழுவின் உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றத்தால் நியமிக்கப்படும் தெரிவுக்குழுவின் விசாரணைகளை ஊடகங்களில் வெளியிடுவது எமக்கு புதிய விடயமாக இருந்தாலும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இது நடைமுறையில் உள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை அடிப்படையாக கொண்டே உருவாக்கப்பட்டது. தகவல் அறியும் உரிமைச்சட்டத்துக்கு அமைவாக நாட்டின் சகல மக்களுக்கும் தகவல் அறியும் உரிமை காணப்படுகிறது. அதேபோன்று தேசிய பாதுகாப்புக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதான தகவல்களை தகவல் அறியும் உரிமைச்சட்டத்தினூடாக வழங்க முடியாது. தெரிவுக்குழுவின் இதுவரையான விசாரணை நடவடிக்கைகளின் போது சாட்சி அளித்த இருவருக்கும் இந்த விடயங்கள் தொடர்பில் தெளிவாக குறிப்பிட்டிருந்தோம். சாட்சியம் அளிக்கும் போது தேசிய பாதுகாப்புக்குப் பாரதூரமான விளைவகளை ஏற்படுத்தக்கூடியவை எனக் கருதும் தகவல்களைப் பகிரங்கமாக குறிப்பிட வேண்டாம் என்றும் அவ்வாறான விடயங்களை குழுவுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கலாம் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

கடந்த தெரிவுக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளை ஊடகங்களில் வெளியிடுவதற்கு சபாநாயகர் அனுமதி வழங்கியிருந்தார். ஊடகங்களையும் அழைத்து விசாரணைகளை முன்னெடுத்தோம். எதிரணியினர் இது குறித்து பல்வேறு விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் இதுபோன்ற தெரிவுக்குழுக்களின் விசாரணை நடவடிக்கைகள் ஊடகங்களில் பகிரங்கப்படுத்தினாலும் நீதியானதும் பாதுகாப்பானதுமான விசாரணைகளையே முன்னெடுக்கின்றனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை ஊடகங்களில் வெளியிடுவதனூடாக தேசிய பாதுகாப்புக்கு எந்த பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை. அதேபோன்று புலனாய்வுத்துறையின் சுயாதீன செயற்பாடுகளுக்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்படபோவதில்லை. பொறுப்புக்கூற வேண்டிய அனைவரும் அறிந்த முக்கியமான அதிகாரிகளே இந்த குழுவுக்குச் சாட்சியமளிப்பார்கள்.

இந்தத் தெரிவுக் குழுவுக்கு 40 பேரை இணைத்துக்கொள்வதாக அறிவித்திருந்தாலும் இதுவரையில் 12 பேரே நியமிக்கப்பட்டுள்ளனர். தெரிவுக்குழுவின் விசாரணைகளை நீதிமன்ற விசாரணைகளுக்கு சாட்சியாகவோ அல்லது ஆதாரமாகவோ பயன்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன - என்றார். (ஒ.5.31)

# அரசியலைக் காட்டிலும் தேசிய பாதுகாப்பு முக்கியம்

## தெரிவுக்குழுவிலே பங்கெடுக்காமைக்கு காரணம் கூறுகிறார் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஜூன் 1

அரசியல் நோக்கங்களை காட்டிலும் தேசிய பாதுகாப்பே முக்கியமானது. இதன் காரணமாகவே குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தும் நாங்கள் கலந்து கொள்ளவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தெரிவு குழுவில் பாதுகாப்பு பிரதானிகள் முன்வைக்கும் விடயங்கள் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய இரகசியத் தகவல்கள். தெரிவுக் குழுவின் கலந்துரையாடலை ஊடகங்கள் நேரலை செய்வது பொருத்தமற்றது. தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் அரசின் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது. நாட்டின் பாதுகாப்பு தொடர்பான இரகசியத் தகவல்களைப் பகிரங்கப்படுத்துவது புலனாய்வுப் பிரிவின் மீது புலனாய்வுத் தரப்பின் முகவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மழுங்கடிக்கச் செய்யும்.

நாடாளுமன்றத் தெரிவு குழு எவற்றை ஊடகங்களுக்கு வழங்க வேண்டுமோ அதை மாத்திரம்அரசு வழங்கினால் போதும். பாதுகாப்புசார் இரகசிய தகவல்களை ஊடகங்களுக்கு வழங்க வேண்டியது கட்டாயம் அல்ல.

எமது அரசியல் நோக்கங்களுக்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளவில்லை என்று ஆளும் தரப்பினர் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகின்றது. எதிர்கால அரசியல் நோக்கங்களை காட்டிலும் தேசிய பாதுகாப்பு எமக்கு முக்கியமாக காணப்படுகின்றது. இதன் காரணமாகவே தெரிவு குழுவில் கலந்துக் கொள்ளவில்லை. மறுபுறம் தெரிவு குழுவின் செயற்பாடுகள் தொடர்பிலும் நம்பிக்கை கிடையாது.

அரசியல் நோக்கங்களுக்காக மாத்திரமே தெரிவு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்தரப்பினர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னரா அரசு குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவு குழு அமைக்க வேண்டும். - என்றார். (ஒ.5.31)

### பாசையூர் அந்தோனியார் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இன்று மாலை 5 மணிக்கு திருச்செப மாலை வழிபாடுகள் ஆரம்பமாகிறன. தொடர்ந்து கொடியேற்றமும் அதைத் தொடர்ந்து குழந்தையேசு கெவியில் வழிபாடும் நடைபெறும். தொடர்ந்து அழைத்தல் ஆண்டு 2019 மையப்படுத்தி திருநாள்கள் தினமும் நவநாள்கள் நடைபெறும். (ஒ,5)

# தெரிவுக்குழு விசாரணையை பகிரங்கப்படுத்துவது தவறல்ல

## உறுப்பினர் ஆசு மாரசிங்க

கொழும்பு, ஜூன் 1

நாடாளுமன்றத் தெரிவுக் குழு விசாரணையை ஊடகங்களில் வெளியிடுவது தவறல்ல. வெளிநாடுகளிலும் இது இடம்பெறுகின்றது. ஆனால் தகவல்களை திரிவுபடுத்தாமல் வெளியிட வேண்டும். இவ்வாறு தெரிவுக் குழு உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார். அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினூடாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தேசிய பாதுகாப்புக்கு பிரச்சினை ஏற்படாத வகையிலேயே அமைந்திருந்தன. ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பில் அனைவரும் பொறுப்புக்கூறுவது அவசியமாகும். உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் விசாரிக்கவென நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளை ஊடகங்களில் வெளியிடுவதைப் போன்று ஏனைய நாடாளுமன்றக் குழுக்களின் விசாரணைகளையும் ஊடகங்களுக்கு பகிரங்கப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் மாத்திரமல்லாமல் ஏனைய நாடுகளிலும் நாடாளுமன்றத்தில் நியமிக்கப்படும் இது போன்ற விசாரணைக்குழுக்களின் நடவடிக்கைகள் ஊடகங்களில் வெளியிடப்படுகின்றன. அதேபோன்று அந்த நாடுகளின் ஊடகங்களும் இது தொடர்பில் பொறுப்புடன் செயற்படுகின்றன. சிலர் தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுபிரிவு தொடர்பில் கருத்து வெளியிடும் உரிமை அவர்களுக்கு மாத்திரமே உள்ளது என்று நினைக்கிறார்கள். தற்போது எதிரணியினர் சார்பில் இந்த தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒருவரும் மக்கள் விடுதலைமுன்னணி சார்பில் ஒருவரும் உள்ளனர்.

எதிரணியைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்களும் பங்கு கொள்ள முடியும். வெளியில் இருந்து கருத்து வெளியிடுவதை விட தெரிவுக்குழுவில் பங்கு கொண்டு குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பது அனைவருக்கும் சாதகமாக அமையும் - என்றார். (ஒ,5,31)

## சிவாஜியின்...

ராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஜூலை மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் கே.கருணாநந்தமூர்த்தி மற்றும் வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் சிவஞானசுந்தரம் ஆகியோருக்கு எதிராக வல்வெட்டித்துறை பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் நீதிபதி நளினி சுபாகரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில், சிவாஜிலிங்கம் உள்ளிட்ட தரப்பினர் சார்பாக மூத்த சட்டத்தரணி சிறிகாந்தா மன்றில் முன்னிலையாகி தனது சமர்ப்பணத்தை முன்வைத்தார். மூவரிடமும் வாக்குமூலம் பெற வேண்டுமென்று பொலிஸார் கோரினர். நீதிமன்ற வளாகத்திலே வாக்குமூலம் வழங்க முடியும் என்று நீதிவான் கூறினார். மூவரும் தமது வாக்குமூலத்தை வழங்கினர்.

வழக்கை ஜூலை 12ஆம் திகதி வரை நீதிவான் ஒத்திவைத்தார். (ஓ.5.26)

## அரச...

டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை இலங்கையின் தேர்தல் ஆணைக்குழு விடுத்துள்ளது. தேர்தலுக்கு இன்னும் நாட்களுள்ளன. இலங்கையிலுள்ள எந்தவொரு அரசியல் கட்சியும், ஆளுங்கட்சியாக இருக்கலாம் எதிர்க்கட்சியாக இருக்கலாம் வேட்பாளர்களை தெரிவு செய்யவில்லை. அதனால் எனக்கும் அவசரமில்லை. ஏனைய கட்சிகள் தெரிவு செய்யும் வரை நானும் எனது தீர்மானம் குறித்து காத்திருப்பேன். மீண்டும் அதிபர் பதவிக்குப் போட்டியிடுவதா என்பது குறித்து நான் இன்னமும் முடிவு செய்யவில்லை என்றார்.

இதேவேளை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதல் காரணமாக அரச தலைவர் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்று கூறப்படுகின்றது. அப்படி ஒத்திவைக்கப்படாது. நவம்பர் 15ஆம் திகதி அல்லது டிசெம்பர் 7ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, 19ஆவது திருத்தத்துக்கு முன்னர் தான் பதவியேற்றமை காரணமாக தனது பதவிக் காலத்தை 5 ஆண்டுகளையும் தாண்டி நீடிப்பது தொடர்பில் ஆலோசனைகளை நடத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

## ரிசாத்...

அத்துரலிய ரத்ன தேரர் ஆரம்பித்துள்ள போராட்டம் சிங்கள - முஸ்லிம் இனக் கலவரமாக மாறும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாலும், அரச தலைவர் மைத்திரிபால மற்றும் தலைமை அமைச்சர் ரணில் ஆகியோர் கோரியமையாலும், அவர்கள் தமது பதவிகளைத் துறப்பதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையடுத்து முஸ்லிம் அரசியல்வாதிகளான அமைச்சர் ரிசாத் பதியூதீன், கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா, மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி மூவருக்கும் எதிராக கடுமையான பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும், அதற்கு உதவிய தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புக்கும் இந்த மூவருக்கும் தொடர்பு இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அமைச்சர் ரிசாத் பதியூதீனுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானமும் முன்வைக்கப்பட்டது. அதனை எதிர்கொள்ளத்தயார் என்றும் எந்தவொரு மிரட்டலுக்கும் அடிபணிந்து தனது பதவியைத் துறக்க மாட்டேன் என்றும் ரிசாத் கூறியிருந்தார்.

இந்த நிலையில், அத்துரலிய ரத்ன தேரர், தலதா மாளிகை முன்பாக நேற்று உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். மூவரும் பதவி விலகும் வரையில் தான் போராட்டத்தை கைவிடமாட்டேன் என்று சூளுரைத்துள்ளார். தேரரின் போராட்டம் காரணமாக, சிங்கள முஸ்லிம் கலவரம் ஏற்படலாம் என்று அரசின் உயர்மட்டத் தலைவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளன. இதனையடுத்தே மூவரையும் தற்காலிகமாக பதவி விலகுமாறு கோரப்பட்டுள்ளது.

இன்றைய தினம் மூவரும் தற்காலிகமா பதவி விலகுவார்கள் என்று அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ.5.22)

## தகவல்...

நிகர் தகவல் வலையமைப்பு மீது வைரஸ் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

பொலிஸ் துறையின் விபிஎன் வலையமைப்பு வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகிய போதும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த வைரஸ் தாக்குதல் தொடர்பாக பொலிஸ் துறையின் தொழில்நுட்ப பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தத் தாக்குதலால், வைரஸ் பாதுகாப்புடன் இருந்த கணினி வலையமைப்பு பாதிக்கப்படவில்லை என்றும், பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர கூறியுள்ளார். (ஓ.5)

## 9இல் மோடி...

லியில் இதனை உறுதிப்படுத்தினார்.

இரண்டு நாள்கள் பயணமாக இந்தியத் தலைமை அமைச்சர் மோடி மாலைதீவுக்கும் இலங்கைக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

'மாலைதீவுக்கான பயணத்தின் ஒரு கட்டமாக இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கைக்கும் வரவுள்ளார். அவர் ஜூன் 9ஆம் நாள் இலங்கை வருவார் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது' என்று புதுடில்லியில் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார். (ஓ.5)

## பதவியை...

என்று அத்துரலியே ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

அசாத்சாலி, ஹிஸ்புல்லா மற்றும் ரிசாத் ஆகியோர் 24 மணித்தியாலங்களுக்குள் பதவி நீக்கப்பட வேண்டும் என்று கடந்த வாரம் அத்துரலியே ரத்ன தேரர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அரச தலைவர் இந்த விடயத்தில் பாராமுகமாக செயற்படுவதால் தீர்வு கிடைக்கும் வரையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துரலியே தேரர் நேற்று வெள்ளிக்கிழமை காலை தலதா மாளிக்கைக்கு முன்னால் தனது உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார். இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரத்ன தேரர் தெரிவித்ததாவது:

இனவாதியாகவும், அடிப்படைவாதியாகவும் செயற்படும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா, மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி மற்றும் அமைச்சர் ரிசாத் பதியூதீன் ஆகியோர் பதவிகளிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அண்மையில் கோரிக்கையை முன்வைத்திருந்தோம். இது குறித்து தலைமை அமைச்சருக்கு அறிவித்தன் பின்னர் அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று எதிர்பார்த்தோம்.

குருநாகல் மற்றும் பேராதனை உள்ளிட்ட மருத்துவமனைகளில் கடந்த காலங்களில் சிங்கள மக்களின் சனத்தொகையை குறைப்பதற்கான சட்டவிரோத சத்திர சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அடிப்படைவாத முஸ்லிம் மருத்துவர்கள் சிலர் இவ்வாறு செயற்பட்டுள்ளனர். இன்றுவரை 300 இற்கும் அதிகமான பாதிக்கப்பட்ட தாய்மார் இது தொடர்பில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அறிவுரையின் கீழ் ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள தாய்மாருக்கு இழப்பீட்டைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை இந்த ஆணைக்குழு முன்னெடுக்க வேண்டும்.

முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை என்னுடைய உயிர் போனாலும் உணவு ஒறுப்புப் போராட்டத்தைக் கைவிடாது இந்த இடத்தை விட்டு நகரப்போவதில்லை என்ற எனது நிலைப்பாட்டை அனைவருக்கும் தெளிவாகக் கூறிக் கொள்கின்றேன். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்க்கமான முடிவொன்றை எடுப்பார் என்று எதிர்பார்:க்கின்றேன். எதிர்பார்ப்பதைப் போன்று தீர்வு கிடைக்காவிட்டால் மக்கள் பலத்தை சேர்த்து நாடளாவிய ரீதியில் என்னுடைய தலைமையில் பெரிய போராட்டம் முன்னெடுக்கப்படும். அரச தலைவருடைய நிறைவேற்று அதிகாரங்கள் தற்போது ஆளுநர்களால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா கடும் இனவாதத்துடன் செயற்படுவதாக தமிழ் மற்றும் சிங்கள மக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துளஙளனர். அசாத் சாலி ஊடகங்களில் கடும் இனவாத கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்து வருகின்றார். இது மிகவும் பாரதூரமானதொரு விடயமாகும். அவர்கள் உடனடியாக பதவி நீக்கப்பட வேண்டும் - என்றார். (ஓ.5.22.31)

## அரச அலுவலகங்களிலும்...

குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம் பெண்களின் ஆடைகள் தொடர்பில் கட்டுப்பாடு விதிக்கப் பட்டது. இது தொடர்பான சர்ச்சை நாட்டில் இன்னமும் தொடர்ந்து கொண்டு இருக்கின்ற நிலையில் பொதுநிர்வாக அலுவல்கள் அமைச்சு அலுவலர்களுக்கான ஆடைக் கட்டுப்பாட்டை அறிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் பாதுகாப்பு நிலமை காரணமாக அரச அலுவலர்கள் அனைவரும் அவர்களுக்கு என்று குறிக்கப்பட்டுள்ள ஆடைகளுடன் அலுவலகத்துக்கு வருவது கட்டாயமானது. ஆண் அலுவர்கள் நீளக் காற்சட்டை மற்றும் சேட்டுடனும் அல்லது தேசிய உடையிலும் பெண் அலுவலர்கள் சேலை அல்லது கண்டியச் சேலை அணிந்திருத்தல் வேண்டும். அதே போன்று சாரதிகள், அலுவலக உதவியாளர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் சீருடைக்கான கொடுப்பனவு பெறும் அலுவலர்கள் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட சீருடையில் வருகை தர வேண்டும்.

கர்ப்ப காலத்தில் பெண் அலுவலர்கள் தமது வசதிக்கு ஏற்றால் போல ஆடை அணிந்து வர முடியும். அதே போன்று சமயம் சமூகம் சார்ந்த ஆடை அணிபவர்கள் ஆண், பெண் அலுவலர்கள் அணியும் ஆடைகளை அணிந்து தமது மரபுக்களுக்கு ஏற்ப மேலதிக ஆடைகளை அணிய முடியும். முகம் தெரியக் கூடியவாறு ஆடை அணிய வேண்டும். அலுவலக சேவையை பெறுபவர்கள், வருபவர்கள் வளாகத்துக்குள் வரும் போது தங்களை அடையாளப்படுத்தக் கூடிய ஆடைகளுடன் வருகைதர வேண்டும். இது தொடர்பில் அலுவலகத் தலைவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. (ஓ.5.7)

## ஜெய்சங்கர்...

றது. இந்த நிகழ்வில், இந்திய அயலுறவுத்துறைச் சேவையின் முன்னாள் மூத்த அதிகாரியான, சுப்ரமணியம் ஜெயசங்கரும், இந்திய மத்திய அமைச்சராக பதவியேற்றார்.

2015ஆம் ஆண்டு தொடக்கம், இந்திய அயலுறவுத்துறைச் செயலராக இருந்த போது ஜெய்சங்கர், அமெரிக்கா, சீனா தொடர்பான இந்திய அரசின் கொள்கைகளை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றியவர். இவர், கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் முதல்நிலைச் செயலராகவும், இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப்படையின் அரசியல் ஆலோசகராகவும் செயற்பட்டவர்.

64 வயதுடைய சுப்ரமணியம் ஜெய்சங்கர், இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் உறுப்பினராக இருக்காத நிலையிலேயே இந்திய அயலுறவுத்துறை அமைச்சராக பதவியேற்றுள்ளார். இவர், தமிழ்நாட்டின் திருச்சியை சேர்ந்தவரும் இந்தியாவின் மூத்த சிவில் சேவை அதிகாரியும், பன்னாட்டு விவகாரங்களில் வல்லுனராக இருந்தவரும், ஊடகவியலாளருமான கே.சுப்ரமணியத்தின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. அயலுறவுத்துறைச் சேவையின் முன்னாள் அதிகாரியான, எஸ்.ஜெய்சங்கர் இந்திய அயலுறவுத்துறை அமைச்சராக, நியமிக்கப்பட்டுள்ளமை இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஓ.5)

## ரிசாத்தை...

ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார். அலரி மாளிகைக்கு அமைச்சர் ரிசாத்தை அழைத்து, தலைமை அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார் என்று அறியமுடிகின்றது.

அமைச்சர் ரிசாத் பதியூதின், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி அத்துரலிய ரத்னதேரர் தலதாமாளிகைக்கு முன்பாக நேற்று உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்:.

இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, டில்லியிலிருந்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அலைபேசியில் உரையாடியுள்ளதாக அறிய முடிகின்றது. அமைச்சர் ரிசாத் பதியூதினை தற்காலிகமாக பதவி விலகுமாறு அறிவுறுத்தியுள்ளார். அதேவேளை, மைத்திரிபால, ரிசாத்துடனும் நேரடியாக அலைபேசியூடாக பேசியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதன் பின்னர் அலரிமாளிகைக்கு ரிசாத்தை அழைத்த தலைமை அமைச்சர், தற்காலிகமாக அமைச்சுப் பதவியைத் துறக்குமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.5.22)

## மடிக் கணினி...

கரைபபற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலமுனை, ஹுசைனியா நகர் பிரதேசத்திலுள்ள வீட்டிலிருந்து பொலிஸார் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்துக்கு ஸஹ்ரானால் நியமிக்கப்பட்டவர் என்று கூறப்படும் சியாமிடம் இருந்து பெற்றுக் கொண்ட தகவலுக்கு அமைவாக இவற்றை மீட்டதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

புலனாய்வுப்பிரிவினருக்குக்கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து, கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு, கல்முனை சியாம் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தார்.

சியாம் வழங்கியத் தகவலுக்கு அமைவாக, இரண்டு தினங்களுக்கு முன்பு 15 இலட்சம் ரூபாவைப் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். இந்த நிலையில் 35 லட்சம் ரூபாவை நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

கல்முனை சியாமின் மாமனாரின் வீட்டிலிருந்து ஒரு தொகைப் பணத்தைக் கைப்பற்றிய பொலிஸார், இயந்திரமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மிகுதித் தொகையை மீட்டுள்ளனர். மேலும் தங்கச் சங்கிலிகள் இரண்டு, ஒரு சோடி தோடுகள், மோதிரங்கள் என்பற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அட்டாளைச்சேனையிலுள்ள கால்வாயிலிருந்து, மடிக்கணினி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த மடிக்கணினி ஸஹ்ரானினுடையது என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சாய்ந்தமருதில், ஸஹ்ரானின் சகோதரர்கள் தற்கொலைத் தாக்குதல் நடத்திய தினத்தன்றே, மடிக்கணினி, பணம் என்பவற்றை தான் பெற்றுக்கொண்டதாக, கல்முனை சியாம் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

ஸஹ்ரானின் சகோதரன் இந்த மடிக்கணினியைக் கொடுத்து, மிகவும் பத்திரமாக வைத்துக்கொள்ளுமாறு, தன்னிடம் கூறியதாகவும் சியாம் வாக்குமூலமளித்துள்ளார்.

இந்த மடிக்கணினியை ஸஹ்ரான் பயன்படுத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்துள்ள புலனாய்வுப் பிரிவினர், அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ.5)

## அம்பாந்தோட்டையில்...

அம்பாந்தோட்டை, ருவன்புர உபரத்ன பௌத்த மைய நிலையத்துக்கு முன்னால் இருந்த புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன. 3 அடி உயரத்திலான புத்தர் சிலை நேற்றுமுன்தினம் மாலை அடையாளம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து பௌத்த நிலையத்திலுள்ள தேரரால் அம்பாந்தோட்டை பொலிஸ் தலைமையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சேதப்படுத்தியமை தொடர்பில் அம்பாந்தோட்டை பொலிஸ் தலைமையகத்தால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாரால் என்ன நோக்கத்துக்காக சிலைகள் உடைக்கப்பட்டன என்பது தொடர்பில் இன்னமும் தகவல் வெளியாகியவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளார். (ஓ.5)



# ண்ணகை அம்மன் தேவஸ்தான
# றப்பிதழ் – 01.06.2019

தேவஸ்தான தேர்த்திருவிழாவுக்கு
ண்ணகி வழிபாட்டில் மிகவும் முக்கியம்
ளங்குகின்றது. திருவிழாச் சிறப்பும்,
த்தில் பன்னிரு நாள்கள் அலங்கார
று தேர்த்திருவிழாவும் தொடர்ந்து
அனைத்துப் பகுதிகளில் இருந்தும்
ர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதும்
ாலயம்.
ாவிந்தராஜன் அவர்கள் வருகை தந்து
ணைக் கண்ணால் பாருமம்மா" எனப்
லோர் அடி மனத்திலும் ஆழமாகப்
த்துக் கொண்டிருக்கும் அம்பிகையின்
றன்.
ண்பது பெரும்பேறாகும். ஆகையால்
ன்ணாரக் கண்டு, மனமார வழிபாடு
றேன்.

தலைவர்,
ண்ணகை அம்மன் தேவஸ்தானம்.

## ஆசிச் செய்தி

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவு கண்டர்தல்
உண்மை யாமெனினுகர்முன் வருகென வுரைப்பார்"

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் அண்ணலாரது விழாக்களை மனவுறுதியோடு நடத்துதல் தரிசித்தல் ஆகும்" விதிப்படி உற்சவங்களை செய்பவர்களுக்கும் செய்விப்பவர்களுக்கும் பாவம் நீங்கும் ஞானம் உண்டாகும்.

ஆலயங்களில் உற்சவங்கள் செய்யப்படுவது சிவபெருமானின் பஞ்சகிருத்தியங்களை உணர்த்தும் பொருட்டே ஆகும். அதாவது ஆன்மாக்களது பக்குவத்தன்மைக்கேற்ப மலங்களை நீக்கி முத்திகொடுத்தற் பொருட்டே யாகும். பஞ்சகிருத்தியங்களாவன சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் எனும் ஐந்துமாகும். உற்சவ காலத்தில் செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் சிருஷ்டி முதலான ஐந்தொழிலையும் குறிப்பதாகும். இரதோற்சவமானது சங்காரத்தினைக் குறிப்பதாகும். சங்காரமாவது ஆன்மாக்களின் சஞ்சித கன்மங்களை பக்குவப்படுத்தல் என்று பொருள்படும்.

சங்காரத்தினை உணர்த்தும் தேர்த்திருவிழாவில் இறைவன் அண்டசராசரங்களை எல்லாம் தேராக்கி ஆன்மாக்களைப் பற்றியுள்ள மலங்களை எல்லாம் நீக்குதற் பொருட்டு அதன்மீது அமர்ந்து வீதிவலம் வருகின்ற காட்சி ஒப்பற்றதிருக்காட்சி ஆகும். பசுபதி ஆகிய இறைவன் சூரிய, சந்திரர்களை உருள்களாகவும், நான்கு வேதங்களை குதிரைகளாகவும், மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அவ் அம்பின் கூர்மையாகவும் கொண்டு எழுந்தருளி பிரம்மா வாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக்கொண்டு செலுத் தத் திரிபுரத்தசுரர்களை தமது திருப்புன்முறுவலால் எரித்தருளினார். திரிபுரசங்கார உண்மைக்காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் கெடுத்தற் காக செய்யப்படுவதே இரதோற்சவமாகும்.

ஸ்ரீசக்தி கிரியா குருமணி
ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ. குமாரசுவாமிக் குருக்கள்

**தேர்த்திருவிழா**
**இன்று (01.06.2019)**
**சனிக்கிழமை**

**தேரில் எழுந்தருளல்**
**மு.ப 10.30 மணி**

**தீர்த்த உற்சவம்**
**02.06.2019 (ஞாயிறு)**
**மு.ப. 10.00 மணி**

ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
Since 1978
நடராசா கஜந்தன்
NJ நியூ மைதிலி ஜுவலர்ஸ்
காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன் நகையால் மேலும் உங்கள் புன்னகைஒளிரும் விரையுங்கள் நியூ மைதிலிக்கு
newmaithily40@gmail.com
New Maithily Jewellers
0094212217878
38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 221 7878 Fax:021 2217877

S.B நிறோ
பல்பொருள் வாணிபம்
பருத்தித்துறை வீதி,
இடைக்குறிச்சி மத்தி,
வரணி
0776962986,0776049292, 0213127502

சிறி வெற்றிலைக் கடை
கோயில் அபிஷேகப் பொருள்கள் மற்றும் வாசனை திரவியங்கள், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு ஆகியன மொத்த மாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
மாக்கற் உட்புறம், கொடிகாமம்.
077 278 4730

Sun View Sunmax
Mobile Phone Accessories,
Phone Repairing, Photo copy
& DVD Movies CD
Point Pedro Road, Kodikamam.
T.P: 077 757 4685
Fax: 021 205 0302
Sunview290@yahoo.com
Sunview290

வதனி ஜுவலறி
தங்க நகைகளின் சாம்ராஜ்யம்
வாடிக்கையாளர்கள் தேவைக்கேற்ப
நவீன டிசைன்களில் உத்தரவாதத்துடன்
தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள
Kandy Road, Chavakachcheri.
Kandy Road, Kodikamam.
Tel: 021 227 1300
Mob: 077 800 2724

கஜமுகன் களஞ்சியம்
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

VK IT Solution
#08, Point Pedro Road,
Kodikamam Junction.
P.N: 021 227 1400 M.N: 077 406 0010
F.B: VKITSOLUTIONS
Gmail : vkit2015@gmail.com

கிருஷ்ணா கூல்பார்
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

தி,
22
ket
தி,
49



## இராணுவப் பயிற்சி முகாம் மீது தாக்குதல்

### ஆப்கானிஸ்தானில் 6 பேர் சாவு


காபூல், ஜீன் 1
ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள இராணுவப் பயிற்சி முகாம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். ஆப்கான் தலைநகர் காபூரில் உள்ள இராணுவ பயிற்சி முகாம் ஒன்றின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதால் சாவுகள் அதிகரிக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளான பயிற்சி முகாம் ஆப்கானில் உள்ள மிக முக்கியமான இராணுவப் பயிற்சி நிலையங்களுள் ஒன்று. இந்தத் தாக்குதலைத் தலிபான்கள் நடத்தி இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மலேரியா நுளம்புகளை அழிக்கும் ஆராய்ச்சி

ஒவாகடோகூ, ஜீன் 1
சிலந்தி இனத்துக்கு உரித்தான ஒருவித நஞ்சை மரபணு மாற்றம் செய்யப்பட்ட பூஞ்சையை வெளியிட வைத்து மலேரியாவைப் பரப்பும் நுளம்புகளைப் பெருமளவில் அழிக்கும் முறையை மேம்படுத்தியுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பசோவில் நடத்தப்பட்ட இந்தப் பரிசோதனையில், அங்கிருந்த மலேரியா நுளம்புகளின் எண்ணிக்கை 45 நாள்களில் 99 சதவீதம் அழிந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். நுளம்புகளால் பரவும் மலேரியாவால் ஒவ்வோர் ஆண்டும் உலகம் முழுவதும் 4இலட்சம் பேர் உயிரிழப்பதும், 219 மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.



## இளம் பெண்கள் கொலை ஐ.எஸ். அமைப்பே பின்னணி

றபட், ஜீன் 1
டென்மார்க்கைச் சோந்த லுசியா வெஸ்டரகர் மற்றும், நோர்வேயைச் சேர்ந்த மரின் பெலண்டர் ஆகிய பெண்கள் இருவரும் வட அமெரிக்காவின் தபுகல் மலை அடிவாரத்தில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி கொலை செய்யப்பட்டுக் கிடந்தனர்.

இவர்கள் இருவரினதும் கழுத்துக்கள் வெட்டப்பட்டிருந்தன. கொலையாளிகள் தேடப்பட்டு வந்தனர். இந்த நிலையில், ஆபிரிக்கா நாடான மெராக்கோவில் சில சட்ட விரோதச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் சிறையில் அடைக்கப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது இந்தக் கொலை சார்ந்து சில உண்மைகள் வெளிவந்தன. அங்குள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவரான அப்தஸ்மட் எஜோட், அந்த இரண்டு பெண்களில் ஒருவரின் கழுத்தைவெட்டிக் கொன்றவர் என்று தெரியவந்தது.

அவரிடம்மேற்கொண்ட விசாரணைகளில்





கொலை செய்யப்பட்ட இருவரில் ஒரு பெண்ணை அவருடைய சகாவான யுனஸ் ஒயிசியாட் என்பவர் கழுத்தைவெட்டிக் கொலை செய்ததாகவும் தெரியவந்தது. இதைக்



கொலையாளிகளான அவர்கள் இருவரும் மொரக்கே நீதி மன்றில் ஏற்றுக் கொண்டனர்.

அத்தோடு அங்கு அவர்கள் அதிர்ச்சிகரத் தகவல் ஒன்றையும் தெரிவித்தனர். தாங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். இன் பெயராலேயே இதனைச் செய்ததாகக் கூறினார். சிரியாவில் ஜிகாதி முஸ்லீம்கள் கொல்லப்பட்டமைக்குப் பதிலடியாகவே தாம் இந்தக் கொலைகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்தனர்.

இந்தப் பெண்கள் அல்லாவின் எதிரிகள் அவர்களைக் கொல்வது அல்லாவுக்கு வேண்டிய சேவை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.



பிரான்சில் ஆரம்பமாகிப் பெல்ஜியம் வரை விரிவடைந்தது மஞ்சள் அங்கிப் போராட்டம். பெல்ஜியத்திலுள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரைப் பொலிஸ் அதிகாரி ஒருவர் பிடித்துக் கைது செய்கிறார்.

## வெனிசுலா விவகாரம் மனம்மாறும் அதிகாரிகளுக்கு சலுகை அளிக்கிறது அமெரிக்கா

வெனிசுலாவின் அதிபர் மதுரோவுக்கு எதிராகக் குரல் கொடுக்க ஆரம்பித்த அந்த நாட்டின்புலனாய்வுத்துறைத் தலைவர் மனுவல் கிரிஸ்ட்டோபருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்தசகலதடைகளையும் அமெரிக்கா நீக்கியது.கிரிஸ்டோபர்வெனிசுலா நாட்டு ஊடகங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் 'நான் வெனிசுலாவின் அதிபர் மதுரோவுக்கு விசுவாச மாகத் தான் இவ்வளவு காலமும் இருந்தேன். ஆனால் நாட்டைக்கட்டியெழுப்புவதற்காக மாறிவிட்டேன்' என்றுள்ளார்.

அந்தக்கடிதத்தில் 'வெனிசுலாவின்பாதுகாப்பு உயர்அதிகாரிகள் இலஞ்சம் பெறுவது என்பதுஒருசாதாரணவிளையாட்டுப்போலாகிட்டது. நாங்கள் அரசியலில் இறங்க வேண்டிய காலம் வந்துவிட்டது' என்றும் கிரிஸ்டோபர் குறிப்பிட்டுள்ளார்.வெனிசுலாவில் உள்ள மேலும் பல பாதுகாப்புஅதிகாரிகளைத்தங்கள் பக்கம் இழுத்து அவர்களை மதுரோவுக்குஎதிராகத்திருப்புகின்ற அமெரிக்காவின் தந்திரம்தான் இந்தத்தடைநீக்கம் என்கிறார் வெனிசுலாவின் இளைப்பாறிய பாதுகாப்பு அதிகாரி ஸ்கோ கர்வஜால் என்பவர்.

## கப்பல்கள் தாக்குதலுக்கு உள்ளாகிய விவகாரம் வெள்ளை மாளிகையில் ஆதாரங்கள் உள்ளன!

### அமெரிக்கா தெரிவிப்பு

வோஷிங்டன், ஜீன் 1
மசகு எண்ணையின் விலையை அதிகரிக்கும் நோக்கத்துடனேயே ஐக்கிய அரபு இராச்சியத்தில் நங்கூரமிட்டிருந்த எண்ணைக் கப்பல்களை ஈரான் தாக்கியுள்ளது எனக் குற்றம் சாட்டுகிறார் அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ.

கடந்த வியாழக்கிழமை, நடந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தக் குற்றச்சாட்டை உங்களால் நிரூபிக்க முடியுமா என ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் கேட்டபொழுது, ஆம் இதற்கான சாட்சிகள் வெள்ளை மாளிகையின் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டனிடம் உள்ளன, என்றும்



தான் அவற்றைப் பார்வையிட்டதாகவும் கூறினார். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் போல்ட்டன் இது பற்றிக் கூறுகையில் 'என்னிடம் அந்த ஆதாரங்கள் உள்ளன நான் அவற்றை அடுத்த வாரம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கையளிக்கப்போகிறேன்' என்று தெரிவித்தார். ஈரானுக்கான அமெரிக்கத் தூதுவர் பிரையன் ஷக் இது பற்றிக் கூறியபோது 'ஈரான் இது போன்ற தாக்குதல்களில் ஈடுபட்டால், அமெரிக்கா அதற்கு இராணுவ ரீதியில் பதிலடி கொடுக்கும்' எனத் தெரிவித்தார். ஆயினும் ஈரான் தரப்பில் இந்தக் குற்றச்சாட்டுக்களை முற்றிலுமாக மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# நரேந்திர மோடியுடன் திருமணம்

## யசோதாபென் என்பவர் ஊடகங்களுக்குத் தெரிவிப்பு

புதுடெல்லி,ஜுன்1

2014ஆம் ஆண்டில் குஜராத் முதல்வராக இருந்தபோது இந்தியத்தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தேர்தல் ஆணையகத்தில் சமர்ப்பித்த படிவத்தில், தான் திருமணம் ஆனவர் என்று குறிப்பிட்டு,மனைவியின்பெயரையும் குறிப்பிட்டு இருந்தார்.

2002, 2007 மற்றும் 2012 என மூன்றுமுறைமுதல்வராகஇருந்தபோதும், தேர்தல்வேட்புமனுக்களில்திருமணம்குறித்தகேள்விக்குஎந்தப்பதிலும் அளிக்காமல் இருந்த அவர், 2014ஆம் ஆண்டு தாக்கல் செய்த வேட்புமனுவில் இந்தத் தகவலை அளித்தார்.




1952ஆம்ஆண்டு,வடக்குகுஜராத்தின் பிரம்மவாடாபகுதியில்பிறந்தயசோதாபென், 1968ஆம் ஆண்டு, நரேந்திர மோடியைத் திருமணம் செய்தார். தற்போதும் அதே கிராமத்தில் வசித்துவரும் அவர், முன்னாள் ஆசிரியை. மோடியின் வேட்புமனு குறித்த தகவல் வெளிவரும் வரையில், அந்த ஊரில் இருந்த பலருக்குக்கூட, இவர்மோடியின்மனைவிஎன்பது தெரியாது.



2014ஆம் ஆண்டு, ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்தபேட்டியில், திருமணமான சில நாள்கள் மட்டுமே தன்னோடு மோடி இருந்தார் என்றும், வேலை நிமித்தமாக வெளியே சென்றமோடி, பின்புதிரும்பி வரவே இல்லை என்றும் அவர் தெரிவித்தார். அதன்பிறகு அவர்கள் இருவரும்பேசிக்கொள்ளவும் இல்லைஎன்பதையும் அவர் குறிப்பிட்டிருந்தார். குஜராத்தின் முதல்வராகமோடிபதவியேற்றபோது, அவரிடம் பேசும் எண்ணம் தனக்குவந்ததாகவும், அவர்தலைமை அமைச்சராகப்பதவியேற்றபிறகு,டெல்லிக்கு வரும் விருப்பம் தனக்கு இருந்ததாகவும் யசோதாபென் கூறினார்.

## தலைமுடியை உண்டசிறுமி!

மொஸ்கோ,ஜுன்1

வயிற்றுவலிகாரணமாகமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறுமியின்வயிற்றிலிருந்து500 கிராம் நிறையுடைய தலை முடி எடுக்கப்பட்டது.

இந்தச்சம்பவம் ரஷ்யாவில் நடந்தது. ரஷ்யாவைச் சேர்ந்த 16 வயது சிறுமியின் வயிற்றிலிருந்தஇந்தத்தலைமுடியைமருத்துவர்கள் அகற்றினர். குறித்த சிறுமி, கடந்த சில நாள்களுக்கு முன்புமுடிஉதிர்வுஅதிகமாகிவிட்டதாகமருத்துவமனைக்குச்சென்றுள்ளார். அங்கு மருத்துவர் பல்வேறு சோதனைகளை மேற்கொண்டுள்ளார்.

அவருக்கு குருதிச் சோகை இருப்பதுகண்டறியப்பட்டது. அத்தோடு அவருடைய வயிற்றில் பொருள் ஒன்று அடைத்துக்கொண்டிருப்பது தெரியவந்தது.

மருத்துவர்கள் சிறுமியிடம் விசாரித்த போது, 10 வருடங்களாக அவருடையதலைமுடியைஅவர் சாப்பிட்டுவருவதுதெரியவந்தது. உடனடியாக அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்து அவரது இரைப்பையில் தலை முடி அகற்றப்பட்டது. அவருடைய இரைப்பையில் 80சதவீத பகுதி குறித்த தலை முடியால் நிரப்பப்பட்டிருந்ததேவயிற்றுவலிக்குக்காரணம் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.





## மோடியின் புதிய அமைச்சரவையில் 57 பேர் அமைச்சர்கள் பதவியேற்பு

பதுடெல்லி,ஜுன்1

கடந்த வியாழக்கிழமை இந்தியாவின் தலைமை அமைச்சராக மோடி பதவியேற்றார். இந்திய அரச தலைவர் ராம்நாத் கோவிந்த் அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பா.ஜ.க. மூத்ததலைவர்ராஜ்நாத்சிங் பா.ஜ.க. தலைவர் அமித் ஷா, ரவி சங்கர்பிரசாத், நரேந்திர சிங்தோமர், நிதின் கட்கரி, சதானந்த கௌடா, நிர்மலா சீதாராமன் ஆகியோரை மத்திய அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் இந்திய அரச தலைவர். பாஜகவைச்சேர்ந்த தாவர் சந்த் கெலோத்தும் மத்திய அமைச்சராகப் பதவியேற்றார்.

நரேந்திர மோடி உட்பட 25 கேபினட் அமைச்சர்கள், ஒன்பதுதனிப்பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர்கள், 24இணைஅமைச்சர்கள்பதவியேற்றனர். இந்திய அமைச்சரவையின் எண்ணிக்கை 58ஆக உள்ளது.



உலகபுகையிலைஎதிர்ப்புத்தினத்தை முன்னிட்டு 'புகைத்தல் வேண்டாம்' என்ற சாரப்பட பாலர் பாடசாலை மாணவர்கள் சீனாவின் ஷியாங் மாகாணத்தில்நேற்றுத்தம்மால்இயன்றசிறியபோராட்டத்தைமுன்னெடுத்தனர்.



## இன்றைய நாள்

**மேடம்:** எதிர்வரும் பணிகளுக்கு முன்னேற்பாடு அவசியமாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணப்பரிவர்த்தனையில் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும்.

**இடபம்:** வாழ்வில் வளம் பெற புதிய சூழல் உருவாகும். ஆர்வமுடன் பயன்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. பண சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**மிதுனம்:** நியாயம், தர்மத்துடன் செயல்படுவீர்கள். இஷ்ட தெய்வ அருள் துணை நின்று உதவும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**கடகம்:** மனதில் இனம் புரியாத வருத்தம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நல்வழி காட்டும். தொழில், வியாபார வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** செயலில் புதிய திருப்பம் ஏற்படும். உண்மை நிலவரம் உணர்ந்து பணிபுரிய வேண்டும். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கன்னி:** பொதுநல சிந்தனையுடன் செயல்படுவீர்கள். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். குடும்பத்தினருடன் சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவீர்கள்..

**துலாம்:** மாறுபட்ட நிகழ்வு குறித்து அதிருப்தி ஏற்படலாம். பேசுவதில் நிதானம் பின்பற்ற வேண்டும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணியை முடிப்பது நல்லது. செலவுக்கு சேமிப்புப் பணம் பயன்படும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**விருச்சிகம்:** சுய நலம் கருதாமல் செயல்படுவீர்கள். அவமதித்து பேசியவர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு விலகும்.

**தனுசு:** உங்களின் நியாயமான பேச்சை சிலர் ஏற்றுக் கொள்ள மறுப்பர். தொழில், வியாபாரத்தில் உங்கள் உழைப்புக்கேற்ற வளர்ச்சி உண்டு. நிலுவைப் பணம் வசூலாகும்.

**மகரம்:** மனதில் ஞானம் நிறைந்த சிந்தனையுடன் செயல்படுவீர்கள். பெறுகின்ற அனுபவம் புதுவிதமாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** உங்கள் தனித் திறமையை வளர்த்துக்கொள்வீர்கள். எதிரி இடம்மாறி போவர். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் அளவில் பணிபுரிவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரலாம். குடும்ப உறுப்பினர் உங்களின் பொறுப்பை உணர்த்துவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை வளர்ச்சி பெறும். பணவரவு கூடுதலாக கிடைக்கும்.




# கரவெட்டிப் பிரதேச செயலக அணி மென்பந்து துடுப்பாட்டத்தில் வாகை

யாழ்ப்பாணம், ஜூன் 1
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான மென்பந்து தொடரில் கரவெட்டி பிரதேச செயலக அணி 18 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.
கல்வியங்காடு சிறி ஞானபாஸ்கரா விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி பிரதேச செயலக அணி 10 பந்துப் பரிமாற்றங்களில் 74 ஓட்டங்களைப் பெற்றது. அதில் அனுரதன் 28 ஓட்டங்களையும், கோகுலன் 11 ஓட்டங்களையும், அஜந் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய உடுவில் பிரதேச செயலக அணி 56 ஓட்டங்களை மட்டும் பெற்றது. பந்து வீச்சில் ஜெனி 3 இலக்குகளையும், சேந்திரன் 2 இலக்குகளையும், கோகுலன் தினோஜன் அஜந் ஆகியோர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (எ-23)

## கரவைச்சுடர், அருணோதயா கால்பந்தாட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 1
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குகொள்ளும் வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்களில் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழக அணி மற்றும் கரவைச்சுடர் விளையாட்டுக்கழக அணி என்பன வெற்றி பெற்றுள்ளன.
இந்த ஆட்டம் வதிரி டமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.
ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலினைப் பெற்றிருக்க ஆட்டம் சமநிலையில் முடிந்தது.
அதையடுத்து சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. அதில் 3:1 என்ற கோல் கணக்கில் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் கரைவைச்சுடர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து. பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் 2:1 என்ற கோல் கணக்கில் கன்ரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (எ-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 1
வவுனியா மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை கனகராயன்குளம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன. நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக வவுனியா வடக்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் ரி.தர்மேந்திரா கலந்து கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்புட்டது. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜூன் 1
யாழ்ப்பாண மாவட்டத் துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட துடுப்பாட்ட அணிகளுக்கு இடையிலான மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்ட தொடரின் ஆட்டங்கள் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.
சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜூன் 1
ஏபி விளையாட்டுக்கழகம் நடத்தும் ஜப்னா துடுப்பாட்ட லீக் தொடரின் ஆட்டங்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மேதவுள்ளது.
மதியம் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றிபேக்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜூன் 1
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன. இன்றும் நாளையும் 17 வயது, 20 வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த இருபாலருக்குமான கூடைப்பந்தாட்ட போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாண மாவட்டக் கூடைப்பந் தாட்ட திடல்களிலும், 17 வயது, 20 வயதுப் பிரிவு இரு பாலருக்குமான சதுரங்க போட்டி இன்றும் நாளையும் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜூன் 1
அரியாலை சிறிகலைமகள் சனசமூ நிலையத்தின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரியாலை சிறிகலைமகள் விளையாட்டுக் கழகம் உள்ளூர் அணிகளுக்கு இடையில் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இந்த ஆட்டங்களில் 8 அணிகள் பங்கு பற்றுகின்றன. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜூன் 1
யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான இன்றும், நாளையும் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்திலும் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. ஆண்களுக்கான போட்டி இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்திலும், பெண்களுக்கான போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்திலும் இடம் பெறவுள்ளது. (எ-23,9)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜூன் 1
வல்வை வருத்தப்படாத வாலிபர் சங்கம் வல்வைக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டம், வலைப்பந்தாட்ட போட்டிகளின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வருத்தப்படாத வாலிபர் சங்கத் தலைவர் ச.சண்முகதாஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது.
அதில் கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை இளங்கதிர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை நேதாஜி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இன்றைய நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வல்வெட்டித்துறை நகரட்சி மன்றத் தவிசாளர் கோ.கருணாநந்தராசா, சிறப்பு விருந்தினராக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பிரதி பொதுச் செயலாளர் அ. அருளானந்தசோதி, மதிப்புறு விருந்தினராகளாக வல்வை விளையாட்டுக்கழக தலைவர் மு.பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜூன் 1
தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் நடத்திய யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம், இறுதியாட்டம் என்பன இன்று சனிக்கிழமை தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.
காலை 11 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் நோநேம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி மாலை 3 மணிக்கு இடம் பெறும் இறுதியாட்டத்தில் இணுவில் கலையொளி விளையாட்டுக்கழக அணியுடன் மோதவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦


யாழ்ப்பாணம், ஜூன் 1
தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு 8 பேர் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட பெண்களுக்கான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடர் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜூன் 1
தொண்டைமாணாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் உள்ளூர் ரீதியாக நடத்தும் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு தொண்டைமானாறு சந்தியில் ஆரம்பமாகின்றது. (எ-23)

யாழ்ப்பாணம் ஜூன்1
தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட் டுக்கழகம் உள்ளுர் அணிகளுக்கு இடையில் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் கலையரசி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)




## பங்களாதேஷ் அணிக்கு உதவி செய்தார் டோனி

உலகக் கிண்ணத் தொடரின் பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி பங்களாதேஷ் அணியைச் சந்தித்தது. இந்தப் போட்டியில் இந்திய அணி 95 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
இதில் இந்திய அணி துடுப்பெடுத்தாடிய போது 39 ஆவது பந்துப்பரிமாற்றத்தை சபீர் ரஹ்மான் வீசினார். அப்போது, டோனி களத்திலிருந்தார். திடீரென துடுப்பெடுத்தாடுவதை நிறுத்திய டோனி, ஆட்ட விதிகளுக்கு மாறாக களத்தடுப்பாளர்களை நிறுத்தி இருகிறார்கள், களத்தடுப்பாளர்களை மாற்றுங்கள் என்று பந்துவீச்சாளர்களிடம் கூறினார். ஏனெனில் அவ்வாறு இருந்தால் பந்து வீசும் போது அது முறையற்ற பந்து வீச்சு என அறிவிக்கப்படும் என்று அறிவுறுத்திய டோனி அதை மாற்றும்படி கூறினார்.
இதைக் கேட்ட சபீர் ரஹ்மான், உடனடியாக களத்தடுப்பாளர்களை மாற்றினார். தான் துடுப்பெடுத்தாடினாலும் கூட, எதிரணியினர் களத்தடுப்பாளர்களை சரியாக நிறுத்தாமல் இருந்தபோது அவர்களுக்கு உதவிய டோனியின் செயல் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

## ஆரோன் பிஞ்சை கிண்டலடித்த ஹாரி

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுகின்ற 10 அணிகளின் தலைவர்களும் இங்கிலாந்தின் ராணி எலிசபெத்தை சந்தித்து சிறிது நேரம் உரையாடினர். அப்போது உடன் இருந்த இளவரசர் ஹாரி, ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஆரோன் பிஞ்சை கிண்டல் செய்த விடயம் இப்போது கசிந்துள்ளது.
பிஞ்ச்சை நோக்கி ஹாரி, 'உங்களுக்கு கொஞ்சம் வயதாகி விட்டது போல் தெரிகிறதே? இன்னுமா அணியில் இருக்கிறீர்கள்? எவ்வளவு காலம் தான் விளையாடிக்கொண்டு இருப்பீர்கள்' என்று கேட்டார். அதற்கு 32 வயதான ஆரோன் பிஞ்ச் சிரித்தபடி,' 8 ஆண்டுகளாக பன்னாட்டு கிரிக்கெட்டில் விளையாடிக்கொண்டிருக்கிறேன்' என்று மட்டும் பதில் அளித்தார்.
இந்த உலகக் கிண்ணத்தை வெல்ல வாய்ப்பு யாருக்கு? என்று ஹாரி திரும்ப திரும்ப கேட்டபோது பிஞ்ச் எரிச்சலுடன், 'இங்கிலாந்து, இந்தியா' என்று கூறியபடி சென்றார். இளவரசர் ஹாரி இலங்கை அணித் தலைவர் கருணாரத்னேவிடம், 'உற்சாகமாக இருங்கள். போட்டியை அனுபவித்து விளையாடுங்கள். இல்லாவிட்டால் இங்கு ஆடியது பிரயோசனம் இல்லாமல் போய்விடும்'- என்றார்.
இதற்கிடையே இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி, இங்கிலாந்து ராணி எலிசபெத்தை சந்தித்து பேசியதை மையமாக வைத்து பல ரசிகர்கள் தங்களது கீச்சக பதிவில், 'ராணியிடம் உள்ள கோகினூர் வைரத்தை இந்தியாவுக்கு மீட்டு வாருங்கள் கோக்லி' என்று குறிப்பிட்டுள்ளனர்.



### உலகக் கிண்ணத் தொடர்;

# தீவுகள் அதிரடி பணிந்தது பாக்.

உலகக் கிண்ண நேற்றைய இரண்டாவது போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 7 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது.
மேற்கிந்தியத்தீவுகளின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் பாகிஸ்தான் அணி வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ஒரு வீரர்கூட 25 ஓட்டங்களை எட்டவில்லை.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் பாகிஸ்தான் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. அணியின் முதலாவது இலக்கு 17 ஓட்டங்களில் வீழ்த்தப்பட்டது. அணி 75 ஓட்டங்களைப் பெற்றபோது 5 முக்கிய இலக்குகளை இழந்தது. 100 ஓட்டங்களை எட்டுவதே கடினமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் பாகிஸ்தான் அணி வீரர்களின் துடுப்பாட்டம் மிக மோசமாக இருந்தது. அணி 21.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 105 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.
இந்த ஓட்ட எண்ணிக்கை பாகிஸ்தான் அணியின் இரண்டாவது குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும். இதற்கு முன்னர் 1992 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக பாகிஸ்தான் அணி 74 ஓட்டங்களைப் பெற்றதே குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கையாகக் காணப்பட்டது. ஆனால் இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணி கிண்ணம் வென்றதும் குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான் அணி 1999 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 132 ஓட்டங்களையும், 2003ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக 134 ஓட்டங்களையும், 2007 ஆம் ஆண்டு 132 ஓட்டங்களையும் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பந்து வீச்சில் தோமஸ் 4 இலக்குகளையும், கோல்டர் 3 இலக்குகளையும், ரசல் 2 இலக்குகளையும் சரித்தனர்.
8 அதிரடித் துடுப்பாட்ட வீரர்களை உள்ளடக்கியுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு 105 ஓட்டங்கள் என்பது எம்மாத்திரம். அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கெய்ல் அதிரடி காட்டி அரைச் சதம் கடந்தார். மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்கள் என்றாலே பந்துகள் எல்லைக்கோட்டுக்கு வெளியே பறப்பது இயல்பே. அணி 13.4 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது முதலாவது வெற்றியைப் பதிவு செய்யது. பந்து வீச்சல் முகமது அமீர் 3 இலக்குகளையும் கைப்பற்றி அசத்தினார். ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் தோமஸ் தெரிவு செய்யப்பட்டார்.



## தென்னாபிரிக்கா - இங். போட்டியின் சில சுவாரஸ்ய தகவல்கள்

12ஆவது உலகக் கிண்ணத் தொடரின் முதல் போட்டி இங்கிலாந்து -தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே இடம்பெற்றது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி 104 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது.
இந்தப் போட்டியின் சில பதிவுகள் :

- இங்கிலாந்து அணியின் தலைவர் இயன் மோர்கனின் 200 ஆவது ஒருநாள் போட்டி. இங்கிலாந்து அணி சார்பில் அதிகப்படியான ஒருநாள் போட்டிகளில் விளையாடிய தலைவராகவும் இவர் பதிவானர். இதற்கு முன்னர் போல் கொலிங்வூட் 197 ஒருநாள் போட்டிகளிலும், ஜேம்ஸ் அண்டர்சன் 194 போட்டிகளிலும் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- கடந்த 2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் லண்டன் ஓவல் மைதானத்தில் இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.
- இந்தத் தொடரில் முதல் இலக்கை தென்னாபிரிக்க வீரர் இம்ரான் தாகீர் கைப்பற்றினார். நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் முதல் போட்டியில் முதல் பந்துப்பரிமாற்றத்தை வீசிய முதல் சுழற்பந்து வீச்சாளர் என்ற பெருமையை இவர் பெற்றார்.
- இங்கிலாந்து வீரர் ஜோசன் ரோய் இந்தத் தொடரில் முதல் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.
- பன்னாட்டு ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி வீரர் இயன் மோர்கன் 7000 ஓட்டங்களைப் பெற்றார்.
- கடந்த 2003ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரின் பின்னர் தென்னாபிரிக்க அணி தான் எதிர்கொண்ட உலகக் கிண்ணத் தொடரின் முதல் போட்டியில் தோல்வியடைந்தது.

**Techno World**
தொழில்நுட்பப் பிரிவு
**A/L 2021 ஆரம்பம்**
- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT. இலகு கணிதம். விவசாய விஞ்ஞானம். புவியியல். சித்திரம்.

01.06.2019 சனிக்கிழமை காலை 8.30
077 017 5346
077 170 3549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 31.05.2019 | வெற்றி வாரம் 2529 | வர்ணம் நீலம்
இடபம்
வெற்றி இலக்கங்கள் 18 24 25 48
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,845,794/=
02.06.2019ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 979
சீட்டிழுப்பு திகதி 2019.05.30 வியாழக்கிழமை
U 12 16 26 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,973,444/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 775 | சீட்டிழுப்பு திகதி 31.05.2019
வெற்றி இலக்கங்கள் 04 40 49 63 I
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 26, 695, 204/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
செம்மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 04.06.2019 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 625
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.05.31
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,929,565/-
வெற்றி இலக்கங்கள் 04 36 45 57 V
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**விற்பனைக்கு**
625 ml அளவும் 550 g நிறையும் கொண்ட (கள்ளுப்போத்தல்) வெற்றுப்போத்தல்கள் மொத்த மாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு
077 352 1879

**ENGLISH & SINHALA PERSONAL CLASSES**
**TRILINGUAL PRIVATE TRANSLATION**
கிரமமான முறையில் தயாரிக்கப்பட்ட பாடங்கள் ஊடாக இரு மொழிகளும் G.C.E. (O/L) வரை கற்பிக்கப்படும்.
எத்தகைய படிவங்களும் நிரப்பித்தரப்படும்.
கடிதங்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் உட்பட பிரத்தியேக மொழிபெயர்ப்பு வேலைகள் மூன்று மொழிகளிலும் செய்து தரப்படும்
T.SAGATHEVAN - B.A London,
T.P.Nos. 021 222 3520 / 077 821 0178

**கடை விற்பனைக்குண்டு**
மானிப்பாய் றவுண்டபோட் சந்தியில் மருந்துக்கடை, புடைவைக்கடை, நகைக்கடை இவை மூன்றும் நடத்தக்கூடிய வகையில் சகல வசதிகளுடன் இருக்கின்றது.
076 111 9180, 075 643 4535
001647 8919 714 (Viber)



இங்கிலாந்தில் ஆரம்பமாகியுள்ள உலகக் கிண்ணத் தொடரில் பங்குபற்றும் 10 அணிகளின் தலைவர்களும் போட்டியின் முதல் நாள் இங்கிலாந்து மகாராணி எலிசபெத்துடன் சந்தித்து கலந்துரையாடி அவருடன் ஒளிப்படம் எடுத்துக் கொண்டனர்.

### உலகக் கிண்ண வரலாற்றில்
# 44 வருடங்களுக்கு முன்னர்
## பாக். - மே.இ.தீவுகள் போட்டி



மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு காலத்தில் உலகக் கிண்ணம் என்றாலே அவர்கள்தான் என்றிருந்தது. முதல் இரண்டு உலகக் கிண்ணங்களையும் தங்கு தடையின்றி அவர்கள் வென்றார்கள். அதற்கு அடுத்த முறை சிறிது சறுக்கினார்கள். இருந்தாலும், அவர்களின் அந்தப் பெயர் கொஞ்சம்கூட சரிவைச் சந்திக்கவில்லை. காரணம், அந்தத் தொடரில் அவர்கள் ஏற்படுத்திய தாக்கம் அவ்வாறிருந்தது.

1975, 1979 தொடர்களை ஒரு தோல்வியைக்கூடச் சந்திக்காமல் வென்றது அந்த அணி. இரண்டாவது உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கைக்கு எதிரான ஆட்டம் மட்டும் மழையால் கைவிடப்பட்டது. ஏனைய 11 போட்டிகளிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் புள்ளிகள் அடிப்படையில் போட்டி நிலவியது. முதல் போட்டியில் இலங்கையை எளிதாக வீழ்த்தியது மேற்கிந்தியத்தீவுகள் அணி. பாகிஸ்தானோ ஆஸ்திரேலியாவுக்கு எதிராகத் தோற்றிருந்தது. இந்தப் போட்டியில் வெற்றி பெற வேண்டியது இரண்டு அணிகளுக்குமே முக்கியம்.

இந்தப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி தோற்றிருந்தால் அரையிறுதிக்குத் தகுதி பெறுவதே சந்தேகமாயிருக்கும். ஏனெனில், 3 லீக் போட்டிகள் முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 12 புள்ளிகள், ஆஸ்திரேலியா 8 புள்ளிகள், பாகிஸ்தான் 4 புள்ளிகளுடன் முதல் 3 இடத்தில் இருந்தன. பாகிஸ்தான் அந்த ஆட்டத்தில் வென்றிருந்தால் 3 அணிகளும் 8 புள்ளிகள் பெற்றிருக்கும். ஓட்ட சராசரியில் அந்த 3 அணிகளிலும் குறைவான ஓட்ட சராசரியைக் கொண்டிருந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி வெளியேற நேர்ந்திருக்கும். உலகக் கிண்ணத்தில் வரலாறு அன்றைய தினம் மாற்றி எழுதப்பட்டிருக்கும்.

**விற்பனைக்கு**
கமுகு மடலில் செய்த சாப்பாட்டுத் தட்டுகள்
- இயற்கையானது
- நிகழ்வுகளுக்கு உகந்தது
- உறுதியானது
- பிளாஸ்ரிக், பொலித்தீன், றெஜிபோம் கலந்த தட்டுகளுக்கு மாற்றானது.

LAVA CARE
85, Clock Tower Road, Jaffna.
077 320 3137

யாழ். மாவட்ட படப்பிடிப்புத்துறை சார்ந்த அனைவருக்குமான
பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும்
காலம் :
02.06.2019 காலை 8.30 மணி
இடம்:
நாவலர் கலாசார மண்டபம்
(நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்ட படப்பிடிப்புத்துறை சார்ந்த அனைவரையும் தவறாது கலந்து கொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு தாழ்மை யுடன் கேட்டுக்கொள்கின்றோம்.
ஒருங்கிணைப்பு குழு.
077 314 4808
077 248 7550

**விக்னா** கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
யாழ் நகரில் O/L Day Class தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
**O/L DAY Class** (8.00 - 2.00)
ஆரம்பம் : 03.06.2019 8 மணி
5 மாணவர்களுக்கு மட்டுமே.
கடமை கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்
077 662 9137

## லோகேஷ் ராகுல் நம்பிக்கையளித்தார்

கோக்லி பெருமிதம்

உலகக் கிண்ண போட்டியில் பயிற்சி ஆட்டத்தில் இந்திய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. இதில் லோகேஸ் ராகுல் சதம் அடித்து நம்பிக்கையளித்திருந்தார்.

இது குறித்து அணித் தலைவர் கோக்லி தெரிவிக்கையில்;

4ஆவது வரிசையில் களம் இறங்கிய லோகேஷ் ராகுல் ஆடிய விதம் மிகப்பெரிய நம்பிக்கையை அளித்து இருக்கிறது. அணியில் இடம் பெற்றுள்ள அனைவரும் தங்களது பணி என்ன என்பதை அறிந்து இருப்பார்கள். லோகேஷ் ராகுல் ஓட்டங்களைக் குவித்தது முக்கிய மானதாகும். அவர் ஒரு தரமான வீரர். டோனி, ஹார்திக் பாண்டியா ஆகியோரும் மிகவும் நன்றாக விளையாடினார்கள்.

முதலில் துடுப்பெடுத்தாடியதால் 2 ஆட்டமும் சவாலாக இருந்தது. ஷிகர் தவான், ரோகித் சர்மா ஆகியோர் தரமான வீரர்கள். அவர்களின் ஆட்டம் குறித்து கவலைப்பட வேண்டிய தேவையில்லை. பயிற்சி ஆட்டத்தில் உத்வேகம் பெற வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அந்த அளவுக்கு அதிகமான போட்டிகளில் நாங்கள் விளையாடி இருக்கிறோம். 2 ஆட்டங்களிலும் எங்களது செயல்பாடு மகிழ்ச்சி அளிக்கிறது. வங்காளதேச துடுப்பாட்ட வீரர்கள் சவால் அளிக்கும் வகையில் ஆடினார்கள். எங்களது பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசினார்கள் - என்றார்.



## மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் காலிறுதியில் கொம்பந்துறை வி.க.

யாழ்ப்பாணம், ஜூன் 1

அரியாலை சிறிகலைமகள் சனசமூக நிலையத்தின 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரியாலை சிறிகலைமகள் விளையாட்டுக் கழகம் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் கொம்பந்துறை விளையாட்டுக் கழக அணி காலிறுதியாட்டத்திக்குத் தகுதி பெற்றது.

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கொம்பந்துறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் ஸ்ரார் விளையட்டுக் கழக அணியினர் 5.1 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பாக அகில் 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் விது 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

36 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொம்பந்துறை விளையாட்டுக் கழக அணி 4.2 பந்துப் பரிமாற்றங்களில், ஓர் இலக்கை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் துவாரகன் 19 ஓட்டங்களையும், விது 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கஜன் ஓர் இலக்கை வீழ்த்தினார்.

(எ-23)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.